ஓம்! பரப்பிரம்மணே நம:

# ஆநந்தகுணபோதினி

அறிவை விளக்கி உற்சாகத்தைத் தரவல்லதான
ஓர் உயர்ந்த செந்தமிழ் மாதப் பத்திரிகை.

பத்திராசிரியர் :—திரிசிரபுரம்-எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு.

“எண்ணிய எண்ணியாங் கெய்துப ; எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்.”—திருக்குறள்.

| | | |
|---|---|---|
| கமலம்-1. | சென்னை: அக்ஷய௵ ஆனி௴ 1௳ | இதழ்-3. |
| Vol. 1 | 1926-ம்௵ ஜூன்௴ 15௳ | No. 3 |

## ஆநந்த தரிசனம்

“பரமனை மறவேல்” என்பது சிறந்த வாக்கியம். இவ்வாக்கியத்தை மறவாதிருந்தால் பகவானைப் போற்ற வேண்டுமென்ற ஞாபகம் எப்போதும் இருந்து கொண்டிருக்கும். மறதி கேட்டைத் தரும் என்பது எவரும் அறிந்தது. பாடத்தை மறந்த மாணவன் உபாத்தியாயரிடம் அடிபடுகிறான். தன் கடமையை மறந்த சேவகன் எஜமானனுடைய சினத்துக்காளாகின்றான். அதுபோல் தன்னையறியவேண்டிய மனுஷியன் தன்னை மறந்திருப்பதால் ஸம்ஸாரமென்னும் துக்கத்தை யடைகிறான். இப்படி மறப்பதற்குக் காரணம் ஒருவித மாயையாம். இந்த மாயை ஏன் உண்டாயிற்று என்று ஒரு கேள்வியைக் கேட்பது பிசகு. ஒவ்வொரு மதஸ்தரும் இக்கேள்விக்கு உத்தரம் சொல்வது அநாவசியமென்றும், மாயை யிருப்பது பிரத்தியக்ஷமாதலின் அதைத் தொலைப்பது தான் விவேகமென்றும் கூறுகிறார்கள். வீட்டில் தீ பிடித்தால் அதை யணைக்க முயலுவது விவேகமேயன்றி தீ யுண்டான காரணத்தைக் கேட்டுக் காலம்போக்குவது விவேகமல்ல. உலகத்தில் இருள்—வெளிச்

சம், பாபம்—புண்ணியம், பகல்—இரவு, சூரியன்—சந்திரன் முதலியவை ஒன்றுக்கொன்று வேறுபாடான குணங்களுடன் விளங்குகின்றன. இவைகள் ஏன் அப்படியிருக்க வேண்டுமென்ற கேள்விக்கு யார் பதில் சொல்லக்கூடும்? அதுபோல் மாயை ஏன் உண்டாக வேண்டுமென்னும் வினவுக்கும் விடை சொல்வது கஷ்டம். கயிற்றைப் பாம்பு என்று நினைத்து உண்மையான கயிற்றை ஏன் அறியாமற் போகிறோம்? பிராந்தியினால், அதாவது மயக்கத்தாலாம். அதுபோல, பகவத் சொரூபமே எங்கும் விளங்குகின்றதை நாம் அறியாமல், மாயையின் காரணமாக ஸம்சார சுகத்தையே பெரிதெனக் கருதி மயங்கி கடவுளின் யதார்த்த ஸ்வரூபத்தை உணராமற் போகின்றோம். எனவே, மாயையால் பலவித அவஸ்தைகளை யடைகிறோமென்பது வாஸ்தவமாதலின், அதை நீக்கவேண்டிப் பரமனின் பாதபத்மங்களைப் போற்றக் கடவோம்.

***

"ஹரியை ஸ்மரி." நாராயணனை ஸ்மரணை செய்தால் ஸகல பாவங்களும் தொலைந்து புண்ணியம் லபிக்கும். அவிவேகம் அகன்று விவேகம் சித்திக்கும். ஹரி கிருபையால் அநேகம் பக்தர்கள் மாயையை யொழித்து திவ்ய ஞானத்தை யடைந்திருக்கிறார்கள். வாசுதேவன் அக்ரூரர், உத்தவர், அர்ஜுனன் முதலிய எல்லோருக்கும் ஞானோபதேசம் செய்திருக்கிறார். ஆதலின் ஆநந்தகரமான ஹரியைஸ்மரித்தால் நம்முடைய அஞ்ஞானம்நீங்கிமுக்திகிடைக்கும்.

***

"பகவத் கிருபைக்குப் பக்தியே காரணம்." ஸத்கர்மங்கள் புரிவதும், அனைத்தையும் பகவதர்ப்பணம் செய்வதும், பகவானை எப்போதும் மறவாமல் ஸ்மரித்துக்கொண்டிருப்பதும், ஜகத்திலுள்ள ஸகல வஸ்துக்களையும் பரப்பிரம்மஸ்வரூபமாய்ப் பாவிப்பதும் முக்திக்கு ஸாதனங்களாம். உத்தமமான முக்தி மாயை விலகினாலன்றி கிடைக்கமாட்டாது. இந்த மாயை விலகுவதற்கு பகவத் பக்தியைத் தவிர வேறு மார்க்கமில்லை. ஆதலின் எப்போதும் பரந்தாமனை ஸ்மரணை செய்யக் கடவோம்.

***

"கழுதையும் குதிரையும் சரியோ?" என்று சிலர் கேட்பர். கழுதையைவிடக் குதிரை சிலாக்கியமென்பது எல்லோருக்கும் தெரியும். குதிரை அறிவுள்ள பிராணியென்றும், கழுதை அறிவில்லாத மிருகமென்றும் நினைக்கிறோம். சில ஸமயங்களில் கழுதைக்கிருக்கும் அறிவு குதிரைக்குக் கிடையாது. அதுபோல் குருவுக்குக் கிடைக்காத முக்தி சிஷ்யனுக்கு லபித்துவிடக் கூடும். மகா பக்திமான் என்று பெயரெடுத்தவன் அந்த அகங்காரம் காரணமாக உள்ளத்திலே தெளிவற்றிருக்கலாம், பகவத் கிருபைக்கு வெகு தூரத்திலிருக்கலாம். ஏதும் தெரியாத சாமான்னியர்கள் பூர்வ புண்ணிய

விசேஷத்தால் பரிபக்குவம் அடைந்து பகவத் பிரீதிக்கு உகந்த வர்களாய் விடலாம். ஆலயங்களில் திரைக்கு வெளியில் பகவத் தரிசனைக்காகக் காத்து நிற்போரின் பக்தி, திரைக்குள் இருப்போ ரிடத்தில் சில சமயங்களில் காணப்படுவதில்லை. கோயிற் பூனை தேவர்க்கு அஞ்சாது என்பதும் ஓர் பழமொழி. பகவத் பக்திக்கு சித்த பக்குவம் பிரதானமேயன்றி வெளி ஆடம்பரங்கள் அவசிய மல்ல. சித்த பக்குவம் என்பது சாமான்யமாக அமைவது அரிது. அந்தப் பக்குவ விசேஷத்தால் கழுதைபோ லிருந்தோரும், குதிரை யாகி உயர்வதும் சுலபமே. பக்திமான்களின் சரித்திரத்தைச் சோதித் தால் அவர்கள் இருந்த தாழ்ந்த நிலையும், பின்பு அவர்கள் அடைந்த பெரிய நிலையும் விளங்கக் காண்போம்.

***

"தானமும் தவமும் தான் செய்வராயின் வானவர் நாடு வழி திறந்திடுமே" என்றார் ஔவையார். தானம் செய்தால் உடனே கிடைக்கும் பலன் ஒன்றுண்டு. அது நாம் அடையும் சந்தோ ஷமேயாம். பசியால் வருந்தும் ஒரு ஏழைக்கு அன்னம் கொடுத்து அவன் பசியை யாற்றியவுடன் நம்முடைய மனதில் ஒருவிதமான உற்சாகமுண்டாகிறது. இந்த உற்சாகமானது பின்னால் துக்கமாக மாறக்கூடியதன்று. இதன்றி இன்னொரு நன்மையுண்டு. தானம் கொடுப்பவர்களிடம் ஜனங்கள் பிரீதி கொள்ளுகிறார்கள். தானம் கொடுப்பதால் மனம் இளகிக் கருணையுண்டாகிறது. அத்துடன் தானம் செய்வோர்க்குக் கடவுள் அருள் கிட்டுமென்பதும் ஒரு நம்பிக்கை. சிலர் தானம் செய்வதால் தங்கள் பெயர் எங்கும் பரவு மென்ற கருத்துடன் செய்கின்றனர். சிலர் ஸ்வர்க்க பதவிகளை இச்சித்துத் தானம் வழங்குவர். சிலர் தங்களின் பாப நிவாரணார்த் தம தான தர்மங்களில் பிரவர்த்திப்பர். மேற்கூறிய கருத்துக்கள் எவையுமின்றி ஈசுவரப் பிரீதியாகப் பலனைக் கோராமல் தானம் செய்வதே உத்தமம். அப்படிச் செய்வோர்க்கு உண்டாகும் மனோற் சாகம் மற்றவர்கட்கு வராது. இவ்விதம் உற்சாகம் உண்டாவா னேன்? தன்னைப்போன்ற ஒரு மனுஷ்யன் அவஸ்தையினின்றும் நீங்கினதை நோக்கச் சந்தோஷ முண்டாகிறது. யாருக்கும் தன் னிடத்தில் பிரீதியுண்டாகிறது. காகம் விருந்து கலந்துண்ணும்; சுவானம் அதற்கு முற்றிலும் எதிரிடை. எனவே, சுவானத்தின் தன்மையைக் கொண்டவர்கள், அதாவது பூர்வ ஜன்மத்தில் சுவானமா யிருந்தவர்கள் இந்த ஜென்மத்தில் பரம லோபிகளாய்த் தானம் செய்யாதிருப்பர். (சுவானம்—நாய்.) தானம் செய்வதால் உண்டாகும் ஸந்தோஷத்தை யுண்மையாக அறிந்து கொண்டவன் தன் பசிக்கென்று வைத்துள்ள அன்னத்தையுங்கூடப் பிறனுக்குக் கொடுத்து மகிழுந் தன்மையனவன். அதன் சுவையை அநுபவித்த வரே யுணர்வார்.

"பகவானே பந்து" மற்ற பந்துக்கள் கலியாண காலத்தில் உண்ண வருவர். உற்றார் இறந்தால் உபசாரம் சொல்ல நெருங்கு வர். வேறு விதமான உதவி ஏதும் செய்யார். ஐசுவரியம் பெருகி னால் பொறாமையும், வறுமையுண்டானால் திருப்தியும் அடைவர். உறவினரைவிட நண்பர்கள் நல்லவர்கள். பரமாத்மாவைப் பந்து வாகக் கொண்ட அர்ச்சுனன் முதலியோர் அடைந்த மேலான நிலைமையை நாம் சிந்தித்துப் பார்த்து உண்மையை யுணரக் கடவோம்.

***

"பகவத் கீதை" 18-அத்தியாயங்களாகப் பிரிக்கப்பட்டிருக் கிறது. இவற்றில் 18-வது அத்தியாயத்தில் மனுஷ்யன் அடைய வேண்டிய பரமார்த்தம் இன்னதென்பதை நிர்ணயித்திருக்கிறார்கள். இதில் வேலையை விட்டு சும்மா விருப்பது ஸந்யாஸமாகாது என்று பிரதமத்தில் கூறப்பட்டிருக்கிறது. தன்னுடைய பஞ்சேந்திரியங் களையும் திருப்திபடுத்த விரும்பாதிருப்பதே உண்மையான ஸந் யாஸ மெனப்படும். தர்மம், தியானம் ஆகிய இவற்றைவிட்டு விடு வது குற்றம். ஏனெனில் இவைகளாலே தான் மனம் சுத்தமாகிறது. இத்துடன் அநந்தமான நன்மைகளும் சித்திக்கின்றன. ஆதலின் ஸந்யாஸிகளும் சரியே, இல்லற வாசிகளும் சரியே, நித்திய கர்மங் களைச் செய்வதில் அசிரத்தையாய் இருக்கலாகாது.

***

"கர்மம் மூன்று வகை." (1) ஸாத்வீகம், (2) ராஜஸம், (3) தாமஸம். ஸாத்வீக கர்மம் என்பது ஒரு பயனை அபேக்ஷித் துச் செய்யாமல், கர்மம் செய்யவேண்டுமென்ற பிரீதியினாலேயே செய்யப்படுவது. மக்களைப் போஷிக்கும் தாய், போஷித்த லாகிய கடமையைப் பெரிதாய் நினைக்கிறாளே யன்றி வேறு பலனை இச்சிப்பதில்லை. இதைப்போல் கர்மத்தைக் கர்மத்துக்காகவே செய் வது ஸாத்வீக கர்மம் எனப்படும். ஸாத்வீக கர்மம் செய்வோர் இன்பத்துக்கும் துன்பத்துக்கும் வித்யாஸம் பாராட்டார். அவர் கட்கு இன்பமுமில்லை, துன்பமுமில்லை. தாமரைஇலை மீதுள்ள தண்ணீரைப்போல் கர்மத்தில் அதாவது கர்ம பலனில் ஒட்டாம லிருப்பர்.

***

"ராஜஸ கர்மம்" என்பது ஒருவித சுகத்தை யடையவேண்டி அரும்பாடுபட்டுக் கர்மம் புரிவதாம். உலகத்தில் பெரிய வீடு கட்டி, மனைவியோடு சுகமாய் வாழ்ந்து, மக்களைப் பெற்று, போக பாக்கியங்களை யனுபவிக்கவேண்டி வெகு சிரமப்பட்டு திரவிய ஸம் பாத்யம் செய்வதை ராஜஸ கர்மத்துக்கு உதாரணமாகச் சொல்ல லாம்.

***

"தாமஸ கர்மம்" என்பது தான் என்ற அகம்பாவங்கொண்டு பேராசை பிடித்துக் கஷ்டப்பட்டுக் காரியஞ்செய்வதாம். பாவத்தைப் புண்ணியம் என்று தப்பிதமாய் நினைத்துப் பிறர்மீது கோபங்கொண்டு பழி வாங்குவதும், கடைசியில் தான் செய்த கர்மத்தால் நஷ்டமேயடைவதும், துராசையால் துக்கத்தைத் தேடிக்கொள்வதுமாம். ஒருவன் தன்னை நிந்தித்தானென்று பிறர் சொல்வதைக் கேட்டு அடங்காக் கோபங்கொண்டு அவன்மீது வழக்கு தொடர்ந்து கையிலுள்ள காசைச் செலவழித்துக் கடைசியில் பொறுமை பாராட்டாமல் பிறர்க்குத் துன்பம் விளைத்தோமே யென்று மனஸ்தாபப்படுவது தாமஸ கர்மமென்னலாம். தாமஸ கர்மத்துக்குப் பிறப்பிடம் பழிவாங்கும் எண்ணமும், தப்பு அபிப்பிராயமுமாம். அக்கர்மத்தைப் புரிவோனுக்கு நன்மை தீமை தெரியா.

***

"ஸாத்வீகம் உத்தமம்," ராஜஸம் மத்திபம், தாமஸம் அதமம். ஆரம்பத்தில் விஷம்போலும் தோன்றி, பின்னர் திருப்தியைத் தந்து அமிர்தம்போலும் ஆகும் இன்பம் ஸாத்வீக கர்மத்தாலுண்டானது. இன்பம் மிகச் சிறிதாய் அதுவும் நுகர்ந்த பிறகு துன்பமாய் மாறுவது ராஜஸ கர்மத்தாலுண்டானது, சோம்பல், நித்திரை, துக்கம் முதலியவற்றைத் தரும் இன்பம் வெறுக்கத்தக்க தாமஸ கர்மத்தாலுண்டானது. ஆதலின் இன்பத்தின் மூன்று வகையையும் ஒருவாறு உணர்க.

***

"வெண்ணெய்க் கட்டியைச் சீனியோடு" கலந்து ஊட்டினால் வேண்டாமென்று சொல்வாருண்டோ? அதுபோல், ஒவ்வொருவரும் அறியவேண்டிய தத்வங்களையும், வேதாந்த ஸாரத்தையும் தெளிவான தமிழில் சிறு சிறு குறிப்புகளாக எழுதப்பட்டு வரும் "ஆநந்தகுணபோதினி" ப் பத்திரிகையை விரும்பாதார் யார்? முதல் ஸஞ்சிகையிலிருந்து வாசிப்பது சிரேயஸ்கரம். எல்லாம் தொடர்ச்சியான கதையைப்போ விருக்கும். ஒன்றன்பின் ஒன்றாகத் தொடுக்கப்பட்ட புஷ்பமாலை போல் ஸத்விஷயங்கள் பிரதி தடவை தோறும் வியவஹரிக்கப்படும். ஒவ்வொரு தத்துவத்தையும் நன்றாய் ஞாபகத்தில் வைத்துக்கொள்வதற் கேற்றபடி பழமொழிகளும் அநுபவங்களும் சிறு சிறு உவமானங்களும் அடங்கி யிருக்கும். நமது புராண இதிகாஸங்களிலுள்ள சரிதங்களுக்குரிய தத்வார்த்தமும் செவ்வையாய் விளக்கிக் கூறப்படும். புறமத தூஷணை மருந்துக்கும் இப்பத்திரிகையில் அகப்படா. அவரவர் மதத்தை அவரவர் ஆசரித்துப் போற்றவேண்டு மென்பதே இப்பத்திரிகையின் கோள்கை. வழுக்கி விழுந்தவனுக்கு ஊன்றுகோல் போல்கிடைத்ததே யென்று

இப்பத்திரிகையைப் பாவிக்கும்படியும், இதைப் பெரிய ஆஸ்தியாக எண்ணும்படியும் வெகு சிரத்தையுடன் நடத்தி வரப்படும். ஆதலின் சொற்பதொகையாகிய ரூபாய் ஒன்றைச் செலுத்திப் பத்திராசிரியரின் வேண்டுகோளை அங்கீகரித்துப் பெருமை யடைவது தான் ஆஸ்திக பக்தியையுடைய விவேகிகளுக்கு அழகு. பொறுமையும், தாராள சிந்தையும் பெருந்தன்மையோர்க் குரியவை. ஆதலின் சிறந்த பத்திரிகாபிமானிகளாகிய நீங்கள் உங்களுடைய தாராள சிந்தையைப் பிரகாசப்படுத்தி இதன் சொல்ப சந்தாவைச் செலுத்தி, எப்போதும் இப்பத்திரிகையில் அபிமானம் கொண்டு, தங்களால் இயன்றவரை புதிய சந்தாக்களைச் சேர்த்தனுப்பும்படியும் மற்றொரு முறை கேட்டுக்கொள்ளுகிறோம்.

***

"ஆச்சரிய முண்டானால் அறிவுண்டாகும்." எவன் ஓர் பொருளைக் கண்டவுடன் ஆச்சரியப்படுகிறானோ, அவன் அப்பொருளின் காரணத்தை யறிய விரும்புகிறான். விருப்ப முண்டானவுடன் முயற்சியும் உண்டாகிறது. உடனே ஆராயத் தொடங்குகிறான். "நான் யார்?" என்ற கேள்வியைக் கேட்கிறான். தன்னுடையதென்று நினைத்த தேகம் அநித்தியம் என்று விடை புறப்படுகிறது. அதுவே தனக்கு சொந்தமில்லையாயின், பின் எதுதான் தனக்கு சொந்தம் என்ற கவலை மேலிடுகிறது. இதிலும் ஒரு காரியம் கவனிக்கத் தக்கது. எப்பொழுதும் சொந்தமாயுள்ள பொருளை நம்முடையதென்னலாம். சிறிது நேரம் வெயிலுக்காகச் சத்திரத்தில் உட்கார்ந்தால் அந்தச் சத்திரம் நம்முடையதாமா? சில மணி நேரம் ரயில் வண்டியிற் செல்வதால் அந்த வண்டி நமக்குச் சொந்தமாமா? அதுபோல் சில வருஷங்கள் வரை ஒரு சரீரத்தில் ஜீவன் வசிப்பதால், அந்த சரீரம் ஜீவாத்மாவுக்குச் சொந்தமெனல் நியாயமா? அப்படிச் சொந்த மல்லாததை இழந்து போகிறோமே யென்று மரண காலத்தில் ஜீவாத்மா துக்கம் அடைவது கூடுமோ? தான் இன்னாரென்று அறிந்த ஜீவாத்மா மரணத்துக்கு ஒருபோதும் துக்க மடையாது. லோக பாசங்களில் மூழ்கித் தான் இன்னாரென்று ஆராய்ந்து அறியாத இடத்தில்தான் மரணம் என்னும் பிரிவுத் துயரம் தோன்றும். ரயில் வண்டியை விட்டு இறங்குகிறோமே யென்று துக்கமடையாமல் வீட்டை நோக்கிச் சந்தோஷமாய்ச் செல்வதுபோல், ஜீவாத்மா இவ்வுடலை விட்டுப் போகிறோமே யென்று வியஸனங் கொள்ளாமல முக்தி வீட்டை நாடிச் செல்வதன்றோ சிலாக்யம். அங்ஙனம் செல்லவிடாமல் மறைப்பது எது? அதுதான் மாயை. அதை நிவர்த்திப்பதற்கு மார்க்கம் எது? தன்னைத் தான் ஆராய்ந்து தெளிதலே. மறுபடியும் ஆராய்வோம்: நான் யார்? இந்தக் கேள்விக்கு உத்தரம் நான் ஜீவாத்மா! அதாவது அழிவற்றவன், என்னைத் தவிர வேறு பொருள் இல்லை என்பதாம்.

ஆதலின் "என்னுடையது" என்னும் வியவகாரமே இந்தப் பக்குவ திசையில் கிடையாது. யாவும் பகவானுடையது ; எல்லாம் அவரது ஸங்கல்பம், என்ற நிச்சய ஞானம் உதிக்கிறது. உண்மை இவ்வாறாக, என்னுடைய சரீரம், என்னுடைய வீடு, என்னுடைய மக்கள், மனைவி, மாடு என்று பிதற்றுவதெல்லாம் பிராந்தியினால் என்று அறிந்து கொள்கிறோம். இந்தப் பிராந்தி உள்ளளவும் கட்டையைக் கண்டு கள்வனென்று நினைத்துத் துக்கம் அடைவது போல், இல்லாத சுகதுக்கங்கள் இருப்பதாய் எண்ணி அனுபவித்து, கணக்கற்ற ஜென்மங்களை யெடுக்கவேண்டிய மாயையில் ஆழ்ந்து விடுகிறோம். இது விலக்குவதற்கு உபாயம் ஞானம் ஒன்றுதான். ஞானம் உதயமானவுடன் உலகப் பற்றுதல் நீங்குகிறது. தான்—தன்னுடையது, என்ற அகங்காரம் மறைந்து விடுகிறது. எங்கும் ஈஸ்வர ஸ்வரூபத்தைக் காண்கின்றான். முடிவில் பரமாத்மாவுடன ஜீவாத்மாவும் கலந்து விடுகின்றது. இப்படிக் கலப்பதற்கே முக்தி என்பதாம். ஆதலின் முக்தீச்வரராகிய பகவானை ஸ்தோத்தரிக்கக் கடவோம்.

---

இல்லற தர்மம் :—இல்லற தர்மத்துக்குப் பெயர் பெற்றது இந்நாடு தான். ஹிந்துக்களின் விவாகம் கோர்ட் மூலமாய் ரத்து செய்யப்படுவது சாத்தியமில்லை. ரத்து செய்யப்பட்டு, ஒரு பெண் வேறொரு பதியை வரிப்பதென்று ஹிந்து மத ஆசாரணைக்குப் பொருந்தாது. ஆதலின் ஸதிபதிகள் பரஸ்பரம் ஒருவரை யொருவர் நம்புவதற்கு முடிகிறது. பெண்மணிகளும் தங்கள் பர்த்தாவின் ஆரோக்கியத்தையும் ஆயுள் விருத்தியையும் கோரி அவர்கள் மனம் கோணுதபடி நடக்கின்றனர். அனுவசியமாய் அன்னிய ஆடவர்களிடம் எவ்வித ஸம்பாஷிதமும் செய்வது கிடையாது. தேசாந்தரங்களிலிருந்து இந்நாட்டுக்கு வந்த அநேக மாதர்கள் ஹிந்து மாதர்களின் பதி பக்தியையும், ஹிந்து குடும்பங்களிலுள்ள ஒற்றுமையையும், ஸம்ரக்ஷண தர்மத்தையும் சிலாகித்துப் பேசியிருக்கிறார்கள். தமயந்தி, சீதை, ரிஷிபத்தினிகள், சாவித்திரி முதலிய ஸுசரித்திரைகளைப் போல் ஐரோப்பா, அமெரிக்கா முதலிய கண்டங்களில் தேடிப்பார்த்தாலும் அகப்படார். பதிவிரதைகளின் சரித்திரமென்பதே தேசாந்தரத்தார்க்குத் தெரியாது. விவாகம் என்ற பெயரால் பல விவாக ரத்துகள் செய்துகொண்டு பல கணவர்களை யடைவது ஐரோப்பியரின் ஸம்பிரதாயம்.

---

# ஆநந்த குண போதினி

அக்ஷயஹு ஆனிமீ 1௳


## இந்தியாவிலுண்டான முதல் பஞ்சம்.

---

வளப்பம் மிகுந்த இந்திய நாட்டில் முதல் முதல் கி. பி. 1292-ம் வருஷம், அதாவது 634—வருஷங்களுக்கு முன் பஞ்சம் உண்டானது அக்காலத்தில் கில்ஜி வம்ஸத்தை ஸ்தாபித்த ஜலாலுடீன் பிரூகுஷா என்னும் முஸ்லிம் அரசர் அரசாண்டு வந்தார். அவர் சிம்மாசனமேறி சொற்ப தினங்கள் தான் சென்றன. அரசன் செங்கோல் கரத்தேந்து முன் 'சித்திமாலா' என்னும் பெயருடைய ஒரு பயிராகி ராஜதானிக்கு வந்திருந்தார். ஜலாலுடீன் பட்டத்திற்கு வருவதற்குப் பாத்திய மில்லாதவராக யிருந்தபடியாலும், ஒரு வகுப்பு ஜனங்களால் நியமிக்கப்பட்ட அரசரா யிருந்தபடியாலும், தாம் ஸிம்ஹாஸனம் ஏறியிருத்தலை அன்னியர் கண்டு சினந்து, சண்டைக்கு வருவார்களோ வென்றும் கிலேசப்பட்டுக்கொண்டிருந்தார். சித்திமாலா என்னும் பஹிராகி பார்வைக்குத் தெய்வ பக்தி நிறைந்த சாதுவாய்க் காணப்பட்டாலும், மிதமிஞ்சின செலவாளியாய் அரசர்கள் போல் பெரும்பாலும் தர்மம்செய்துகொண் டிருந்தார். மேலும் அவருக்கு சிஷ்யர்கள் சாமானிய வகுப்பினரிலிருந்து மல்லாமல், உயர்ந்த ராஜ வம்ஸத்திலிருப்பவர்களைக் கூட இழுத்துக்கொள்ளக் கூடிய அதிக ஆச்சரியமான சாமர்த்தியம் அவரிடம் காணப்பட்டது. சக்கிரவர்த்தியினுடைய சிரேஷ்ட புத்திரன் அவருடைய பிரதம சிஷ்யன்.

***

இந்த விஷயங்களால் சக்ரவர்த்தியின் ஹிருதயத்தில் சந்தேகம் ஜனித்து நாளாக ஆக மிகவும் பலமாய் வேரூன்றியது. அதனுல் சித்திமாலா என்னும் பஹிராகி கொலைசெய்யப்பட்டார். சக்ரவர்த்தியின் கடைசி குமாரன் தன் தமையனை இந்தக் கொலைப் பாதகத்தில் சம்பந்தப்படுத்திவிட்டால் அவனுக்கு ஸிம்ஹாஸனம் கிடைக்காமல் போய்விடும்; பிறகு தான் பட்டத்துக்கு வந்துவிடலாமென்று யோசனைசெய்து சில கூட்டாளிகளுடன் ஸதியாலோசனைகள் நடத்தி இக்கொலையைப் புரிந்தான். சித்திமாலாவைக் கொன்ற தினம் ஒரு பெரும் கருங்காற்று உலகத்தை இருளடையச் செய்துவிட்டதென்று இந்து தேச சரித்திரக்காரர் ஒருவர் கூறி

யிருக்கிறார். மற்ற சரித்திரக்காரர்களும் இந்தக் கருங் காற்றைப் பற்றி தங்கள் சரித்திரங்களில் விஸ்தரித்திருக்கின்றனர்.

***

சித்திமாலா கொலையுண்ட வருஷத்தில் வருணன் வெளி வரவேயில்லை. டில்லியிலேயும் அதன் சுற்றுப் புறங்களிலுள்ள நகரங்களிலும் ஒரு துளி மழைகூட விழவில்லையென்று சொல்லப் பட்டிருக்கிறது. உடனே பஞ்சம் உண்டாகிவிட்டது. டில்லியில் ஒரு சேர் தானியம் ஒரு ஜிட்வாலுக்கு விற்கப்பட்டது. (ஜிட் வால் = நாலரை தம்பிடிக்குச் சமம்) என்ன தானியம் அந்த விலைக்கு விற்கப்பட்டதென்று சரித்திராசிரியர்கள் விவரமாய் எழுதவில்லை. மேற்சொல்லப்பட்ட விலை அதிக கிராக்கியான விலையாக நமக் குத் தோற்றப்படவில்லை. ஆனால், அப்போது பணம் கிராக்கியாக இருந்த காலம். அந்தப் பஞ்சகால முற்றிலும் அரசாங்கத்தார் விலைவாசி விஷயத்தில் கண்ணோட்டமாக இருந்து கூடியமட்டும் தானியங்கள் சரசமாய் விற்கும்படி உத்திரவு செய்திருந்தார்கள். அதிகாரிகளுடைய உபத்திரவ மில்லாமலும் விவசாயிகளும் தானிய வியாபாரிகளும் கஷ்டத்தை உணராமலும் அப்பஞ்சம் அடக்கப்பட்டது. ஆயினும் டில்லி, இமாலயா மாகாணங்களி லுள்ள ஜனங்கள் உண்ண உணவின்றியும், அருந்த ஜலமின்றியும் கூட்டம் கூட்டமாய் நகரத்திற்குள் பிரவேசித்து அங்கு ஏதே னும் வயிற்றை வளர்த்துக்கொள்ளும்படியான வேலைகளைச்செய்து உயிரைக் காப்பாற்றி வந்தார்களென்று சொல்லப்படுகிறது. சம்பத் துள்ளவர்களுடைய உதவியாலும் அரசாங்க உதவியாலும் தாராள மாய்ப் பிச்சை கொடுக்கப்பட்டும் பஞ்சக்கொடுமை தணியவில்லை. உண்ண உணவும், உடுக்க ஆடையும், அருந்த ஜலமும் கிடைக்க வில்லை. ஜனங்கள் பசியால் வருந்தித் துன்பத்தைச் சகிக்கமுடியா மல் கைகோத்துக்கொண்டு கூட்டம் கூட்டமாய் யமுனை நதியில் விழுந்து உயிரை மாய்த்துக்கொண்டார்கள். அப்போது வசூல் செய்யப்பட்ட பஞ்ச தர்மநிதி முஸ்லிம் ஏழைகளைக்கூடக் காப் பாற்றுவதற்குப் போதாமலிருந்தது. இந்தப் பஞ்சம் நீடித்து நிற்க வில்லை. அடுத்த வருஷம் காலமழை பெய்து தேசம் செழிப் படைந்து க்ஷேமப்பட்டது.

***

அதன் பின், கொடுங்கோ லேந்திய மகம்மதிய சக்ரவர்த்தி யாகிய முகம்மது பின்டோகிளாக் காலத்தில் பஞ்சம் அடிக்கடி தோன்றி வந்தன. அவைகளில் ஒன்று ஏழு வருஷம் நீடித்து நின்று ஜனங்களைக் கஞ்சிக்குக் காற்றாய்ப் பறக்கடித்தது. இச்சமயம் ஏழை விவசாயிகளுக்கு விரை வாங்கிக்கொள்ளவும், கிணறுகள் வெட்டிக்கொள்ளவும், பாசன வேலைகளை விருத்திபடுத்திக்கொள்ள

வும் அரசாங்கத்தாரால் பணம் கொடுக்கப்பட்டது. அப்பணத்தை மேற்குறித்த விஷயங்களில் உபயோகப்படுத்தவேண்டுமே தவிர, மற்ற எவ்விஷயத்திலும் செலவிட்டுவிடக் கூடாதென்று சக்ரவர்த்தி கண்டிப்பாய் ஆக்ஞாபித்திருந்தார். 100-க்கு 95-பேர்கள் அப்பணத்தை வறுமையின் கொடுமையால் ஆகார சாமான்கள் வாங்கும் விஷயத்தில் வினியோகப்படுத்திச் சக்ரவர்த்தியின் உக்கிர கோபத்துக்கு ஆளாகித் தலை வாங்கப்பட்டார்கள். சக்ரவர்த்தி தலையை வெட்டிவிடுவதற்கு உத்தரவுசெய்ததில் சளைத்துப்போய், வியவசாயிகளுக்குப் பணம் உதவி செய்யாமலிருப்பதே நலமென்று சும்மா இருந்துவிட்டார். ஜனங்களும் பணத்தை வாங்கிக்கொண்டு கொலையாளிக்குத் தலையைக் கொடுப்பதைவிட, பஞ்சக்கொடுமையால் படும் துன்பமே மேலானதென்று அரசாங்கத்தாரிடம் திரவிய ஸகாயம்பெற மறுத்துவிட்டனர். இப்பஞ்சம் இந்தியா முற்றிலும் பாவி மனிதன் மனிதனை அடித்து உண்ணும்படியான அவ்வளவு கடூரமான பஞ்சமா யிருந்தது.

***

1417-ம் வருஷத்தில் தக்ஷணத்தில் ஒரு கொடிய பஞ்சம் உண்டானது. மழையே யில்லை. கிணறுகள், தடாகங்கள், நதிகள் முதலியவைகளில் ஜலம் வற்றிப்போய்விட்டது. ஆடு மாடுகள், காட்டு மிருகங்கள் நின்றவிடத்தில் விழுந்திறந்தன. ஜனங்கள் மிகவும் துன்பப்பட்டார்கள். அச்சமயம் தக்ஷணத்திற்குச் சக்ரவர்த்தியாக இருந்த அகமட்ஷா செய்த பஞ்சநிவாரண ஏற்பாடுகள் சமயோசிதமானவைகளா யிருக்கவில்லை. ஜனங்கள் சக்ரவர்த்தியின் மீது புகார் சொல்ல ஆரம்பித்தார்கள். சக்ரவர்த்தி பட்டத்துக்கு வந்தவுடன் தேசத்தில் க்ஷாமம் தலையெடுத்திருக்கிறதென்கிற அபவாத வாக்கியம் ஒவ்வொரு பிரஜையின் வாக்கிலிருந்தும் வந்தது. சுல்தான் பயந்து ஊரைவிட்டுச் சென்று ஒரு பெரிய மலையிலேறி சிகரத்தில் நின்றுகொண்டு ஜெபம் செய்து கடவுளைப் பிரார்த்தித்தார். சுல்தானுக்குக் கடவுள் பதில் சொல்லுவதைக் கேட்கவேண்டுமென்ற ஆவலுடன் மலை அடியில் ஜனங்கள் நின்றுகொண்டிருந்தது எண்ணமுடியாது, ஏட்டில் அடங்காது. கடைசியாக ஒரு மேகம் தோன்றியதாகவும், பலத்த மழை அடித்ததாகவும், அதனால் பஞ்சம் அகன்றதென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

***

1472—ம் வருஷம் தக்ஷண தேசத்திலேயே மறுபடியும் ஒரு கொடிய பஞ்சம் உண்டாகி ஒரு வருஷம் வரையில் நீடித்து நின்றது. அந்தப் பஞ்சத்திற்கு பிஜாப்பூர் பஞ்சமென்று பெயர். நகரம், பட்டணம், கிராமம் ஆகிய எல்லாம் காலியாய்ப் போய் விட்டன. அநேகம் ஜனங்கள் மடிந்துபோய் விட்டார்களென்று ஒரு முகம்மதிய சரித்திரக்காரர் கூறுகிறார். இரண்டு வருஷம் வரையில்

விதை விதைக்கவில்லை, மூன்றும் வருஷத்தில் வருணன் அனுக்கிரகத்தால் வானம் திறந்தபோது சாகுபடி செய்ய மனிதர்கள் இல்லாமல் போய்விட்டார்கள். அரசாங்கக் கஜானு காலியாக விருந்தபடியால் இந்தப் பஞ்சத்தை விலக்க யாதொரு ஏற்பாடும் செய்யப்படவில்லை.

***

1631—ம் வருஷம் இந்தியா முழுதிலும் மழைக் குறைவாக இருந்தது. குஜராத்தி தேசத்திலும் தக்ஷணத்திலும் கொஞ்சம் கூட மழை பெய்யவில்லை. ஜனங்கள் பெருந் துன்பப்பட்டார்கள். உயிரை ஒரு அப்பத்திற்கு விற்கத் தயாராயிருந்தார்கள். வாங்குவதற்குதான் மனிதனில்லை. நாய் மாமிசம் ஆட்டு மாமிசம் விலைக்கு விற்கப்பட்டது. விற்பனைக்கு வந்த கோதுமை நொய்யில் எலும்புகளை நுணுக்கிக் கலந்து விற்கப்பட்டது. இந்தத் துர்வழக்கம் அரசாங்கத்தாரால் கண்டிக்கப்பட்டது. அப்படிக் கலந்து விற்ற வர்த்தகர்களின் தலை கொய்யப்பட்டது. ஜனங்களுடைய கஷ்டம் நாளுக்கு நாள் அதிகரித்தது. கடைசியில் நரமாமிசம் ஆகாரமாய்ப் போய்விட்டது. பெற்றவர்கள் பிள்ளையைக் கொன்று சாப்பிட்டதாகவும் சொல்லப்படுகிறது. தெருக்களில் செல்வதற்கு இடமில்லாமல் பிரேதங்கள் நிறைந்து கிடந்தன. தப்பித் தவறி உயிருடன் இருந்தவர்கள் ஊரைவிட்டுப் பறந்துபோய் விட்டார்கள். இதற்கு முன்னுமில்லை, பின்னுமில்லை யென்று சொல்லும்படியான அவ்வளவு கடூரமான பஞ்சமா யிருந்ததென்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்தக் காலத்திலும் அரசாங்கத்தார்கள் கஞ்சித் தொட்டிகள் ஏற்படுத்திக் கஞ்சி வார்த்தார்கள். ராஜஸ்தலமாகிய பர்ஹுப்பூரில் வாரம் 5000 ரூபாய் ஏழைகளுக்குப் ‘பட்வாடா’ செய்யப்பட்டது. இப்படி 20-வாரம் கொடுக்கப்பட்டது. குஜராத்தியில் இருக்கும் அகமாதாபாத் என்னும் நகரில் இதே விதமாக 50,000 ரூபாய் பஞ்சத்தின் நிமித்தம் விநியோகிக்கப்பட்டது. ஆக ஒன்றரை லக்ஷம் ரூபாய் செலவழிந்தது. இதுவுமன்றி அரசாங்கத்தார்கள் இரண்டு வருஷம், அதாவது பஞ்சம் வந்த வருஷத்தினுடையவும் அடுத்த வருஷத்தினுடையவும் தீர்வையை ரத்து செய்து விட்டார்கள். £ 29,000,000 வருமென்று எதிர்பார்த்த கிஸ்தி வருமானத்தில் £ 200,000 ரத்து செய்யப்பட்டது. இவ்விதமாகப் பிரிட்டிஷ் அரசாக்ஷிக்கு முன்னும் இந்தியா பஞ்சங்களால் பீடிக்கப்பட்டு வந்தன.

***

இன்னும் இது விஷயமாய் காப்டன் உல்சலி எய்க், ஐ.எஸ்.ஸி. (Captain Wolseley Haig I.S.C.) என்பவர் விஸ்தாரமாய் எழுதிச் சென்றிருக்கிறார். அவர் இந்துதேச சரித்திரங்களையும் ராஜாங்க விஷயங்களையும் தெற்றனக் கற்றுணர்ந்த ராஜதந்திரி. முற்காலத்

துப் பஞ்சநிலை இதுவாக, இப்போதோ நித்திய பஞ்சமாய்விட்டது. ஏதோ சில செல்வவந்தர்கள் ஐச்வரிய புஷ்டியுடன் வாழ்ந்து வருவதாகத் தென்படுகிறதே யன்றி, பெரும்பான்மையோர் பரம தரித்திர வாழ்க்கையில்தான் தங்களின் ஜீவியத்தை நடத்தி வருகின்றார்கள். சாதாரண விருந்து செய்வதற்குக்கூட சக்தியற்ற நிலையில், வருஷம் ஒரு முறைகூட புதிய வஸ்திரங்கள் வாங்கமுடியாத ஸ்திதியில் கண்விழி பிதுங்கும் பரிதாப கோலமாய் எத்தனையோ பெரிய குடும்பங்கள் தத்தளித்துக்கொண்டு நிற்கின்றன. வருவாய் சுருங்கி, சகிக்கொணாச் செலவுகள் மிகுந்துபோய், அதிகரித்த கடன்கள் தீர்க்க வகையின்றி மானத்துக்குத் தவிப்போர் எண்ணிலராவர். ஜீவனார்த்தமே கிடைக்காமல் திகைப்போரின் காக்ஷிகள் கன் மனத்தையும் கரைய வைக்கும்.

> " நெற்றிவியர்வை நிலத்தில்வீழ நித்தநித்தஞ்
> சுற்றிவழிபட்டும் சுகமறியோம் என்தாயே !"

என்று பரிதபிப்போர் பல்லாயிரவர். இவற்றிற்கெல்லாம் ஒரு விமோசனம்—முடிவு—க்ஷேமகால மார்க்கம் எவ்வாறு என்பது தான் இப்போதைய பெரிய வினா ?

---

**உன்னுடன் கூடிப் பழகுவோர்.**

உன் உள் மர்மங்களை அறிந்து வைப்பதற்காகவும், அவ்விதம் அறிந்து, அதனால், உன்னை வேண்டாத நாளில் ஒரே அடியாய் உன்னைக் கவிழ்த்து விடுவதற்காகவும் தான்—உன்னுடன் அவர்கள் அவ்வளவுக்கு இப்போது பழகுகின்றனர். நீ இனியேனும் விழிப்படைக.

# பிரபஞ்ச தரிசனம்

உப்பரிகையின் பக்கத்திலே இடிந்த குடிசைகள்; தேவாலயத்தின் பக்கத்திலே உயர்ந்த குப்பை மேடுகள்; பட்டுப் பீதாம்பரம் அணிந்து பகட்டாய்த் திரியும் செல்வவான்கள் பக்கத்திலே நடந்து செல்லும் கோவணாண்டிகள்; வயிறு வெடிக்க விலாப்புடைக்கத் தின்று இறுமாந்திருக்கும் சீமானைக் கண்டு பசியால் நலிந்த வறியோர் ஒளி குன்றிய கண்ணைத் திறந்துபார்க்கும் பரிதாபப் பார்வை;—இதுவே நமது ஜன்மபூமி.

***

பெற்றோர்களின் மனத்திருப்திக்காக ஐந்து ஆறு பிராயக் குழந்தைகளுக்குத் திருமணம்; சம்பிரதாயவெறியைப் பூர்த்திசெய்வதற்குக் கூடியுள்ள விவாகக் கூட்டம்; கணவன்—கணவி என்று பகுத்தறியாதார்க்குப் பாணிக்கிரகண மகோத்ஸவம்; பந்துக்களின் இடையே பல பல வாத மனஸ்தாபங்கள்; மனத்தழுக்கு நீங்கப்பெறாத மந்தமதிகளின் மகத்தான ஆசீர்வாதங்கள்; இவற்றின் இடையே அகப்பட்டதைத் தம்முடையதாக்கி மறைத்துவிடும் நெருங்கிய சார்பினரின் கண்ணோட்டம்; தவசிப்பிள்ளையின் ஆரவாரம்; உப்பு இடத்தவறிய சாம்பார்; வெற்றுக் காண்டியிலிருந்தும் விழுகிற நெய்; ரத்நக் கம்பளத்திலே வீற்றுள்ள உறவினரின் தாம்பூல தாரணம்—உல்லாச வசனங்கள்—அயர்ந்த நித்திரை—விவாக பூர்த்தி;-இதுவே நமது ஜன்மபூமி.

***

பருவம் எய்துதற்குமுன் பர்த்தாவின் அந்தியம்; பால்ய மணத்தின் அநர்த்தத்தைப் பற்றிய ஆறாத் துக்கம்; ஈன்ற மாதா மலர்சூடி மஞ்சள் குங்குமத்தோடும் துலங்க, அவள் பக்கத்தே அழகு ஒழிந்து, மங்கல நாண் இழந்து, மந்தகாசம் அற்று, மங்கிப்போன உருவுடன் யௌவனம் பரிமளிக்கும் கன்னிகா விதந்துவான புத்திரியின் தோற்றம்; ஐம்பது பருவத்திற்குமேலும் நான்காவது தாரம் கொள்ளும் தந்தை, அவர் அருகே அறியாப் பாலகி கைம்பெண் கோலமாய் நிற்கும் காட்சி; சிறு பருவ விவாகத்தை நிறுத்தத் திறனற்ற வீணர்களின் விதவா விவாக ஆரவாரம்; ஆசார சீர்திருத்த சபைகளின் ஓயாக்கூச்சல்; காரியத்திற்கு வராத பிரஸங்கங்கள்—தீர்மானங்கள்; தெருவிலும், குப்பைகளின் பக்கலிலும், ஜலதாரைகளிலும் அன்று பிறந்து இறந்து கிடக்கும் சிசுக்களின் பயங்கரக் காட்சி; இளம் விதவைகளின் கண்ணீர்;—இதுவே நமது ஜன்மபூமி.

***

படித்தவர்கள் படுந்துயரம்—வேலை கிடைக்காத விசாரம்; ஜீவனார்த்தத்திற்கு என் செய்வோமென்று ஏங்கும் விழிகள்; வராத செலவுகள், விருந்துகள், வரிசைகள், விபத்துகள், பிணிகள், பாடுகள்வந்து தவிக்கும் உள்ளம்; மேன்மேலும் விஷம்போல் ஏறும் கடன்—முதலுக்குச் சரியான உயரத்தில் எட்டப்பார்க்கும் வட்டியின் விபரீதம்; கட்டிய மனையை

விற்கும் கண்ராவி; ஏங்குங்காலத்தில் எட்டிப்பாராத உறவினரின் பராமுகம்; வெளிநாடு சென்று இழிதொழில் இயற்றிப் பசிநோய் தணிய நினைக்கும் நினைவுகள்—நினைத்து ஓடும் ஏழை மானிடர் கூட்டம்; நகைகளெல்லாம் அடகுக்காகப் பாங்கிக்குச்செல்லும் வேகம்; அறியாக் குழந்தைகள் தன் காலைச்சுற்றி அது இது வேண்டுமெனும் அழுகையைப் பார்க்கும் கதியற்ற தந்தையின் சோர்ந்த வதனம், வெறுங் கழுத்துடனும் நிற்கும் மனைவியைப் பார்க்கும் கணவனின் பார்வை; அன்றைச்செலவுக்கு அரைக்காசுக்கும் வழியற்ற ஆயாச வாழ்க்கையின் மர்மம்; தன் கண்முன்பே இந்நிலையானால், தனக்குப் பிறகு இவர்களின் கதி யாதோவெனப் பரிதபிக்கும் குடும்பத் தலைவனின் ஏக்கம்;—இதுவே நமது ஜன்மபூமி.

***

பிளேக்கின் மூலவேரைக் கண்டு களைந்தெறியாமல், மேலுக்குமட்டும் செய்யும் எலிகளின் சங்காரம்; பஞ்சமும் பல்வகை நோய்களும் பல்லாயிர உயிரை மடிவிக்கும் கோரம்; உலக மாந்தர்கள் அனைவரையும் சூத்திரர்களென ஒதுக்கும் விப்பிரர்களின் விவேக சூன்யம்; பார்ப்பனர்களின் மீது படையெடுக்கும் பார்ப்பனரல்லாதாரின் ஆரவாரம்; சைவ வைணவ வாத விகாரம்; வடகலை—தென்கலைப் போர்; மகத்துவம் மிக்க தெய்வஸந்நிதியில் ஆபாஸ வனிதையரின் பாதநாட்டிய அநர்த்தம்; தோன்றித் தோன்றி மறையும் பத்திரிகைகளின் பெருக்கம்,—விலைபோகாத உத்தம நூல்களது ஆசிரியர்களின் பெருமூச்சு; மதுபானத் துன்பங்கள்; பஞ்சமர்களின் இழிவுநிலையை நீக்காது முஸ்லிம்களை ஹிந்துக்களாக்க வெகு அவசரமாய் முயலும் விபரீத—"சுத்தி சங்காத்தன" இயக்க ஆரவாரம்; அதனின்றும் எழும் முஸ்லிம்களின் பகை உணர்ச்சி; ஹிந்து முஸ்லிம் பிரிவினை, கலகங்கள், கொலைகள், ஸர்வநாசங்கள்;—இதுவே நமது ஜன்மபூமி.

***

ஸபர்மதி ஆச்ரமத்தில் மகாத்மாவின் வீற்றிருக்கை; அவரது தேவ ஒளி, நிர்மல ஹிருதயம், சத்தியவசனப் பிரவாகம்; ஒத்துழையாமை முதலிய நிர்ணயங்கள் ஒடிந்துபோனதில் அவரது வாட்டம்; ஹிந்து முஸ்லிம் ஐக்கியத்தை அவர் வேரூன்ற வைத்தும் வீணாகி மீண்டும் வேதாளம் கட்டவிழ்த்துக்கொண்டு பழய (கலக) மரமேறிவிட்ட பொல்லாங்கு; கதர், கதர் எனக் கதறியும் அவர் வாசகம்கேளாத அஞ்ஞானம்; போந்தது புதிய எண்ணம், பொலிந்தது வீரம் எங்கும், தீர்ந்தது தொழும்புப் புத்தி, செழித்தது நாட்டில் அன்பு—என்று மகிழ்ந்ததெல்லாம் மலினமடையும் வேளை; காந்தியின் வழியை நெஞ்சே கணந்தொறும் பாடு கண்டாய் என்று குதூகலித்ததொழிந்து சட்டசபை புகும் கோஷ்டம்; சுயராஜ்யக் கக்ஷி, ஜஸ்டிஸ் கக்ஷி, மிதவாதக் கக்ஷி, அன்னிபிஸண்டுக் கக்ஷி என்ற வெவ்வேறு பிரிவுகளின் காக்ஷி; எனக்கு உனக்கு என்ற "ஓட்"டுகளின் பிரதாப முழக்கம்; செல்வம் குவித்தோரின் தாறுமாறான செலவு விரயங்கள்; உண்மை யன்பு இல்லாதோரின் தேசாபிமானக் கூச்சல்; யாவரும் தலைவர்களாக முற்படும் தடுமாறிய நிலைமை; கண்ணுக் கெதிரில் ஏழை பசித்திருக்க, அவனை வீசித் தள்ளி வீண் டம்பப் பெருக்கில், பெயர் விளம்பரத்தின் கருத்தில் பல ஆயிரத் தொகையில் தான விநியோக தாண்டவம்; இதுவே நமது ஜன்ம பூமி. இதுவே இந்நாடு இன்றுள்ள நிலை!

II

உள்ளூரத் தன் உடம்பில் ஒரு பெரிய உயிரை யழிக்கக்கூடிய விஷமொன்றிருந்து வேலைசெய்ய, அதனை யுணராமல் கருத்தின்றி உண்டுலாவித் திரிந்துகொண் டிருக்கும் பேதையாகிய நோயாளி யொருவனுடைய நிலையில் இந்தியா நெடுங்காலம் இருந்து வந்தது. முதலில் இத்தேசத்தை ஸ்ரீ தாதாபாய் நவுரோஜி தட்டி எழுப்பினார். இந்த ஈன நிலையைத் தென்னிந்தியாவில் எல்லா ஜனங்களும் உணர்ந்து கொள்ளும்படி காலஞ்சென்ற ஸ்ரீமான் ஜீ. சுப்பிரமணிய ஐயரும், இவரைப் போலவே மற்ற மாகாணங்களில் வேறு பல ஜனத் தலைவர்களும் இருந்து வெகு முயற்சிகள் செய்தனர். இந்த மஹான்களின் அரிய பெரிய முயற்சி காரணமாக நாடு முற்றிலும் மாற்ற முடியாத ஸ்வதந்திர தாகம் ஏற்பட்டுவிட்டது. இந்த விடுதலை வேட்கையைத் திருப்தி செய்தற்குரிய உபாயங்களைப்பற்றிச் சிந்திப்பதில் தான் இப்போது கக்ஷி பேதங்கள் மிகுதிப்பட்டுப் போயுள்ளன.

***

எவ்விதமும் ஸ்வராஜ்யம் வருமென்று சொல்லலாமே யன்றி, ராஜ்ய தந்திர சாஸ்திரத்தில் அந்த ஸ்வராஜ்யம் என்ன ஸம்பவங்களை யொட்டி சித்திக்கப் போகிற தென்பதை முன் னறிந்து கூற வழியில்லை. உதாரணமாக, மலையின்மீது வற்றாத பேரூற்றிலிருந்து பாய்ந்து வரும் ஆறு அதன் முகப் பக்கத்தை எதிர்த்துள்ள கடலில் வந்து விழுமென்பது திண்ணம். ஆனால், எத்தனை பெரிய யந்திர சாஸ்திர பண்டிதனும், அந்த மலையிலிருந்து கடல் வரை ஒரு கோடிழுத்து, அந்தக் கோட்டின் வழியாகத் தான் அந் நதி அப்புற மிப்புறம் பிறழாமல் ஓடிவரப் போகிறதென்று முந்தியே நிர்ணயித்துச் சொல்ல முடியாது. ஸ்வராஜ்ய விஷயமும் அவ்விதமே.

***

பாரத யுத்தத்திற் கப்பால் ஒருநாள் துரியோதனனுடைய தந்தையாகிய திருதராஷ்டிரன் தன் மகனைக் கொன்றவனாகிய வீமனுடைய வீரத் தன்மையை மிகவும் வியந்து, அவனிடம் அளவு கடந்த பிரியம் கொண்டவனாகி அவனைத் தழுவிக் கொள்ளவேண்டி விரும்பினான். ஸ்ரீ கிருஷ்ண பகவான் இந்த திருதராஷ்டிரனுடைய பிரியம் வாஸ்தவமானதல்ல வென்றும், ஏதோ வஞ்சனை யெண்ணத்தின் பேரில் ஏற்பட்டதென்றும் எளிதாக அறிந்துகொண்டு விட்டார். குருடனாகிய திரிதராஷ்டிரன் முன்பு ஒரு பலமான சிலையைக் கொண்டுவந்து 'இதுதான் வீமன்' என்று சொல்லி நிறுத்தினார்கள். அந்தச் சிலை முன்காலத்தில் வீமனிடம் அளவற்ற அன்பு கொண்டு நின்ற திருதராஷ்டிரன் வீமனைக் காணாது தவித்தபோது அவனைத் திருப்தி படுத்தும் நிமித்தமாகச் செய்யப்பட்டதாகும். அந்நாளில் அச்சிலையை வீமனென்று திருதராஷ்டின் கருதி தனது பிரிவாற்றாமையைத் தணிப்பதானான். அதே சிலையைத்தான் தற்போது நிறுத்தியதாகும். மனதிற்குள்ளே வீமனைக் கொன்று தன் மகனைக் கொன்ற பழி தீர்த்துக்கொள்ள வேண்டுமென்று எண்ணங்கொண்ட திருதராஷ்டிரன் பொய் நகை நகைத்துக் கொண்டு "குழந்தாய், வீமா வா" என்று சொல்லி மேற்படி சிலையைத் தனது பலம் முழுவதையும் செலுத்திக் கைகளால் இறுக்கினான். உடனே சிலை பொடிப் பொடியாக உதிர்ந்து விட்டது— என்பதாக மஹா பாரதத்திலே ஒரு கதை இருக்கிறது. தற்காலம் நம் நாட்

டில் கக்ஷி பேதங்கள் காரணமாக ஜனத் தலைவர்களிற் சிலர் தம் போன்ற மற்றவர்களிடம் இந்தத் திருதராஷ்டிர அன்பையே காட்டி வருகிறார்கள். இந்தத் துவேஷ அன்பி னிடையே இவர்களை நம்பிய நாடு நாட்டினர் நலம் காண்பது எங்ஙனே !

***

டில்லியில் கூடிய 'ஹிந்து மகா சபை' தாடி பற்றி எரிகையில் சுருட்டுக்கு நெருப்பு கேட்கிறது. மசூதிகளின் முன்பு மௌனத்தை நிறுத்தி விட வேண்டுமென்று துரைத்தனத்தார் கட்டளைகள் பிறப்பிப்பது ஹிந்துக்களால் ஸகிக்க முடியாத கஷ்டமாகும் என்று ஒரு தீர்மானத்தை வெளியிட்டிருக்கிறது. என்ன கஷ்டமோ ஈசனே அறிவார். மசூதிகளின் முன்பு ஹிந்துக்கள் தங்களின் வாத்திய கோஷத்தை நிறுத்துவது பிற மதத்தைக் கௌரவப்படுத்தியதாகும். அது அவர்களின் உயர்ந்த மனோபாவத்தை வெளியிடுதற்குக் கிடைக்கும் ஒரு நல்ல தருணமென்போம். பூர்வம் ஹிந்து அரசர்கள் தங்கள் மதத்தில் ஆழ்ந்த பற்றுதல் கொண்டிருந்தும், தங்கள் நாட்டிற்கு வந்த பிற மதஸ்தர்களை அன்னோரின் மதானுஸார ரீதிப்படிக்கு கௌரவித்திருக்கிறார்கள். பிற மதஸ்தர்கள் அவர்களின் மதக் கோயில்களை அமைத்துக்கொள்ளவும் இடம் தந்தார்கள். மதுரையை யாண்ட ஹிந்து அரசர் அரேபியா நாட்டிலிருந்தும் வந்த முஸ்லிம்களை ஆதரித்து, அவர்கள் மரக்கல வழியாக வந்தமையால் 'மரக்கலராயர்' என்ற பட்டம் தந்து, அநேக கிராமங்களை அவர்களுக்குக் கொடுத்து ஆதரித்ததாகவும் தெரிகிறது. 'மரக்கலராயர்' என்பது பின்னர் 'மரக்காயர்' என மாறிற்று. தஞ்சை யரசர் முஸ்லிம் ஸ்தலமாகிய நாகூரில் முஸ்லிம்களுக்காக எவ்வளவோ தர்மங்கள் செய்திருக்கின்றார். ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒரே இந்தியத் தாயின் குழந்தைகள். ஒரு அழகிய ஸ்திரீயின் முகத்திலிருக்கும் இரண்டு கண்களுக்கு ஒப்பானவர்கள். எல்லா மதங்களும் ஈச்வர அன்பையே போதிப்பதால், ஒருவர் தமது மதத்தில் எத்துணைப் பற்றுதல் கொண்டிருப்பினும், பிற மதங்களையும் ஈச்வர அன்பின் சொரூபமாகப் பாவித்துக் கௌரவிக்கவேண்டும். இவ்வித உத்தம சிந்தையின் இடையே மௌனத்தை மசூதிகளின் முன்பு நிறுத்துவது ஒரு நாளும் ஹிம்ஸை யாகமாட்டாது—கௌரவக் குறைவும் ஆகமாட்டாது. நமக்குள் நாமே தீர்த்துக்கொள்ளவேண்டிய இந்தச் சில்லறை அம்ஸங்களுக்கெல்லாம் துரைத்தனத்தாரை யழைத்தல் தன்மதிப்பற்ற செய்கை. ஹிந்து மகா சபையின் குறுகிய தீர்மானம் பரஸ்பர அந்நியோந்நிய பங்கத்துக்கும் தேச நாசத்துக்குமே ஹேதுகரம். ஹிந்துக்களின் கோயில்களை முஸ்லிம்களும், முஸ்லிம்களின் மசூதிகளை ஹிந்துக்களும் கௌரவித்துக் காக்கும் நாள் என்றோ அன்றுதான் ஸ்வராஜ்யத்தின் முதற்படியை எட்டிய நாளாகும்.

***

நம் நாட்டில 'ஷாப்' (Shop) என்று சொல்லும் கடைகளில் காண்பன யாவும் வெளிநாட்டுப் பொருள்களாகவே இருக்கின்றன. ஜெர்மனி, அமெரிக்கா, இங்கிலாந்து, ஸ்வீடன், ஜப்பான்—ஆகிய நாடுகளில் உற்பத்தி செய்த பண்டங்களே நிரம்பி யுள்ளன. எந்த வஸ்துவை எடுப்பினும் அது வெளிநாட்டுச் சரக்குதான். பலசரக்கு மண்டிகளிலோ

யாவும் இந்நாட்டில் உற்பத்தியானவைகளாய்க் காணப்படுகின்றன. அவற்றை விளைவிப்போரும் 'தயார்' செய்வோரும் இந்நாட்டினராகவே இருந்து அதனால் எவ்வளவோ ஜீவனம் நடத்துகிறார்கள். இந்தப் பல சரக்கு மண்டிகளைப்போல 'ஷாப்' (Shop) கடைகளிலும் இந்நாட்டில் செய்த பண்டங்களே நிறைந்து, யாவும் இந்திய மயமாக மாறுங் காலத்தில் தான் நம் நாடு செழிக்கும். நாட்டின் நெடுங்கால வறுமையும் நீங்கும். அது என்றோ?

## III

இந்தியா இன்று நேற்று உண்டானதல்ல. இராமாயணம், பாரதம் முதலிய பழய நூல்களில் சொல்லியிருப்பதை விட்டுவிட்டு, தற்காலச் சரித்திரத்தைப் பார்த்தாலும் இந்தியா 2000-வருஷங்களுக்கு முன்னதாகக் கூட நெருக்கமாய் ஜனங்கள் வசித்த பூமியாகத் தெரிகிறது. சந்திரகுப்தன், அசோகன் முதலிய மகா சக்கிரவர்த்திகள் இத்தேசத்தில் தர்மராஜ்யம் செய்துவந்தனர். மற்றப் பாகங்களிலும் ஹிந்து மன்னர்கள் ஜனங்களுக்குத் தாங்கள் பிதாக்கள் போலவும், தங்களுக்கு ஜனங்கள் பிள்ளைகள் போலவும் தெய்வத்துக்குப் பயந்து ஆளுகை செலுத்தினர். ஜனங்கள் கவலையில்லாமல் எதேஷ்டமாய்ப் புசித்து உடுத்து வாழ்ந்த பெருமை இந்தியாவினதே யன்றி, வேறு எந்தத் தேசத்தினதாகவும் சொல்ல முடியாது.

* * *

இந்தியாவிலுள்ள ஸ்ரீ காசி நகரம் புராதன புண்ணிய க்ஷேத்திரம்; பரமார்த்திகத் தோற்றமே வியாபித்த ஸ்தலம். அதைச் சுற்றிலும் எவ்வளவோ திவ்ய க்ஷேத்திரங்கள் அடங்கியுள்ள பூமி. இன்னும் புண்ணியாத்மாக்கள் பலர் மனித வர்க்கத்தின் நன்மையின் பொருட்டுப் பல பெருங் காரியங்கள் செய்து தேக வியோகம் பெற்ற ஸ்தலங்களும் வேறே யிருக்கின்றன. இவைகளை யண்டி இவைகளில் பக்தி பாராட்டிப் புண்ணியம் சம்பாதிப்பதே பிறவி எடுத்ததின் பயன் என்று நினைத்து ஜீவிப்பவர்கள் ஹிந்துக்கள். லக்ஷக் கணக்கான ஜனங்கள் வயது அந்தஸ்து முதலிய வேற்றுமைகளின்றி எந்த அசௌகரியத்தையும் பாராட்டாமல் பரலோகத்தில் நல்ல கதியை யடையும் பொருட்டுக் காலம் போக்கும் இயல்புள்ளவர்கள். இந்த ஹிந்து ஜனங்களுக்கும், மேல்நாட்டு ஜனங்களுக்கும் எவ்வளவு வித்தியாஸம்!

* * *

மேல் நாட்டு ஜனங்களின் நோக்கம் அநேகமாய் தங்களின் ஜீவன காலத்தைப் பல சிற்றின்பங்களைத் தேடிச் சுகப்படுத்திக் கொள்வதாம். லௌகீகத் தேவைகளுக்கும் சுகங்களுக்கும் வேண்டிப் பொருள் சம்பாதிப்பதைத் தவிர, மிகுந்த காலத்தை ஆட்டம் பாட்டங்களில் செலவு செய்வார்கள். அவர்களுக்குத் தீர்த்த யாத்திரை என்பதாவது, க்ஷேத்திர ஸேவை என்றாவது பரமார்த்திகமான முயற்சி எதுவு மில்லை. இருப்பினும் அது அபூர்வம். நாடகமென்றாலும் பாட்டென்றாலும் லக்ஷக் கணக்காய்க் கூடுவார்கள். பீப்பாய்களாகச் சாராயம் செலவாகும். குடித்து வெறித்து அடிதடியும் கலகமும் நேரிடும். இந்தியாவிலே நம்

பெரியோர்கள் இம்மாதிரியான பொழுதுபோக்குகளை அமைக்கவில்லை. அவர்களுடைய பொழுது போக்குக்குற்ற காரியங்களுக்காக லக்ஷக்கணக்காய் ஸ்ரீகாசி, பிரயாகை முதலிய இடங்களில் கூடும்போது அவர்களுள் குடி வெறியாவது கலகங்களாவது நேரிடாமல், அவ்வளவு கூட்டமும் சாந்தமாயும் அமைதியாயும் தாங்கள் வந்த காரியத்தை முடித்துக்கொண்டு கலைந்து போவார்கள். ஐரோப்பியர்கள் இதை நோக்கினால், லக்ஷக்கணக்கான ஜனங்களுக்கு இவ்வளவு பக்தி எப்படி உண்டாயிற்றென்றும், அதிகாரிகளுக்கு எவ்வித தொந்திரவுமில்லாமல் எப்படிக் கூடிப் பிரிகிறார்களென்றும் ஆச்சரியமாகத் தோன்றக்கூடும். இந்தப் பக்தி தேசவிஷயத்தில் திரும்பினால் இந்தியா ஒரு புது உலகமாக மாறிவிடுமென்ற சிந்தையும் கொள்வார்கள்.

***

ஹிந்து ஜனங்களின் தெய்வ பக்தி தேச பக்தியுடன் சேர்ந்தே எப்பொழுதும் பரிமளித்திருக்கின்றது. 'தேசபக்தி' என்பது புதிய பதம். 'ஸ்தல விசுவாசம்' என்பது பழய பதம். இரண்டின் பொருளும் ஒன்றே. கருத்துமட்டும் சிறிது மாறியிருக்கின்றது. அதைச் சரிவரத் திருத்திக் கொள்வதற்கே இப்பொழுது கிளர்ச்சி தோன்றியிருக்கின்றது. இக்கிளர்ச்சியிற் புகுந்து வேலை செய்வதில், நாம் செலுத்தும் ஊக்கம், விடா முயற்சி, உண்மைப்பாடு, இடையூறுகளுக் கஞ்சாமை முதலியவற்றை யனுசரித்து, அவற்றுக் கிசைந்தவாறு நமக்குப் பயன் கிடைக்கும். தற்காலம் மேல்நாட்டு ஸகவாசத்தால் ஹிந்துக்கள் பல முக்கிய விஷயங்களில் மாறுதல்கள் பெற்று வருகிறார்கள். ஆனால், அவர்களுக்கு அனாதி காலந்தொட்டு உண்டாயிருக்கும் தெய்வபக்தியும், அதனால் விளையும் சாந்தம் ஜீவகாருண்யம், சன்மார்க்கம், பெரியோர் பூஜை முதலிய உத்தம குணங்களும் மாறாமலிருக்க வேண்டுமென்பதே நமது பிரார்த்தனை.

---

## உதவிக்குப் பணம் கொடுத்துவிடு.

தாங்கள் இல்லாமல் உன் வேலை எதுவும் நடவாதென்று நினைப்போர் உண்டு. அவர்களின் முன்பு எந்த வேலையையும் நீயே செய்யப் பார். அதிக வேலையின்போது நீ அவர்களிடம் பெறும் உதவிக்கு—அதற்கு ஏற்ற பதில் உதவியாகப் பணத்தை எண்ணிக் கொடுத்துவிடு. அது உன்னைத் தங்கள் கைக்குள் அடக்கிவிட நினைப்போரிடமிருந்தும் நீ தப்பும் வழியாகும்.

# பழமொழிக் குறிப்புகள்

## 1. அன்பு

(67-வது பக்கத்தின் தொடர்ச்சி.)

### 11. அஞ்சி ஆண்மை செய்யவேணும்.

இது வீட்டு நிர்வாகத் தலைவன் இருக்கவேண்டிய ஒரு கிரமத்தையும், அவன் நடந்து கொள்ளவேண்டிய வழியையும் குறிப்பாய்ச் சுட்டிக் காட்டும் பழமொழியாகும். ‘அஞ்சி’ என்பதற்கு இங்கு ‘அன்பு கொண்டு’ என்று பொருள்படும். அஞ்சுதல் என்பது, எதிர் நோக்கி வரும் அபாயத்தைக் கருதியேனும், அதை விலக்கித் தடுத்துக்கொள்ள வசமற்றுப்போன திறமை யின்மையாலேனும், எது செய்யின் எது விளையுமோ வென்ற கோழைத் தன்மையாலேனும் நேர்வதாம். உள்ளத்திலே அன்பு தோன்றினால், அஞ்சுதலும் அங்கு தோன்றும். எவ்வளவோ அன்பு காட்டியும் கூட, அது காட்டில் எரித்த நிலவாய், மண்ணிற் கொட்டிய பாலாய் வீணாகி விடும்போது, தாங்கள் பாராட்டிய அன்பில் சலிப்பு கொள்கிறார்கள். சலிப்பு ஏற்பட்டதும் அதற்கேற்ப அன்பும் அங்கு குறைந்துவிடுகிறது. அன்பு குறையவே அஞ்சுதலும் குறைகிறது. இவ்விதம் அஞ்சுதல் குறைந்ததும் எதிர்ப்பும், எதிர் பேச்சும், சிறு சண்டையும், கலகமும், தடித்த வார்த்தைகளும், ஆத்திர புத்தியும் தோன்றிக் கொள்கிறது. ஆதலின் அன்புக்கும் அஞ்சுதலுக்கும் நெருங்கிய சம்பந்தமிருப்பதை நாம் உணர்ந்து கொள்ளலாம். வீட்டுத் தலைவன் யாவரிடத்தும் அன்பு மிகுந்து, அந்த அன்பினாலேயே அனைவரையும் அடக்கி யாளவேண்டியவனா யிருக்கிறான். ஒவ்வொருவரிடத்தும் ஒவ்வொருவித அன்பை வைத்துப் பொதுவில் யாவரிடத்தும் அன்புள்ளவனாகத் தன்னைக் காண்பித்துக்கொள்கிறான். இவ்விதம் அன்பை உணர்த்தும் இடத்தில் அஞ்சுதலின் தன்மையையும் அவன் மேற்கொள்ள வேண்டியதாகிறது. வீட்டிற்குள் நேரும் கலகத்தில் அன்பு காரணமாக அஞ்சுதலும் தோன்றி எவர் பக்கம் சேருகிறது என்று பின்னடைகிறான். ஒருவர் செய்தது அக்கிரமமாய் இருந்தும்கூட அவரிடத்தில் தனக்குள்ள அன்பு காரணமாக, உள்ளது தெரிவித்தால் அவர் மனம் நோகுமே என்று அஞ்சுகிறான். வீட்டிற்குள் இருப்பவர்கள் எல்லோரும் ஒற்றுமையுடன் சகித்துக் கொண்டு செல்லுபவர்களல்ல. பெரும்பாலும் மனக்குறை படுபவர்களாகவே யிருப்பார்கள். ஒருவருக்கொருவர் சுடுசொல் வழங்குபவர்களாகவும் இருப்பார்கள். இவ்வளவு பேரையும் அவரவருக்குத் தக்கபடி நடத்தி அடக்கி யாள வேண்டியது வீட்டுத் தலைவனின் பொறுப்பாவதனால், அவன் அன்பையும் உணர்த்தி அச்சமும் தாங்கிப் பெரிய பளுவைச் சுமக்க வேண்டியவனாகிறான். வீட்டுக்குள் ஒருவன் செய்யும் தகாத செய்கையானது தனக்கு அதிகம் வருத்தம் தருவதாயிருக்கையில், அவன் வீட்டில் இல்லாத தருணம் கண்டு அவ்வருத்தத்தை வெளியிட்டு, அவன் வரும் சமயம் தெரிந்ததும் தன் பேச்சைத் திடீரென்று நிறுத்திக் கொள்கிறான். அவன் மீது கொண்ட வருத்தம் அன்பினாலாகும்; ஐயோ! அவன் சொன்ன சொல் கேளாமல்

கெட்டு விடுகிறானே, வருங் காலத்தில் எப்படி அவன் பிழைப்பான்? என்று அவனிடத்துள்ள அன்பால் நொந்து தன் வருத்தத்தை வெளியிடுகிறான். அந்த வருத்தமான வார்த்தைகளை அவன் கேட்டு விட்டால் அதிலிருந்தும் ஒரு வீண் சண்டை தோற்றுமே என்று அஞ்சி, அவன் வருகிற சப்தம் கேட்டதும் தன் வார்த்தையை நிறுத்திக் கொள்கிறான். முன்பு வருத்தம் உணர்த்தியதும் அன்பால்; பின்னர் அஞ்சியதும் அன்பால். இவ்விதம் அஞ்சியும், அன்புடனும் வீட்டை நிர்வகித்தால்தான் அவ்வீடு பிரிவினையின்றி ஒன்றுபட்டிருக்க முடிகிறது. இன்னும் வீட்டில் அது இது இல்லையென்ற குறைப் பேச்சுகள் தோன்றும். அவற்றிற்கும் அஞ்சி அன்பின் காரணமாகப் பூர்த்தி செய்யவேண்டியிருக்கிறது. அன்புடனேயே ஒருவருக்கு ஒன்றைச் செய்தும், அதில் என்ன சொட்டுச் சொல் நேருமோவென்ற அச்சத்தையும் கொள்ளவேண்டியிருக்கிறது. இவ்வளவு உழைத்தும் பேர் இல்லாமற் பகையாக முடிகிற சங்கதிகளும் உண்டு. அதிலும் தான் அஞ்சி வாய் திறவாமல் சகித்தும் செல்ல வேண்டி வருகிறது. இவ்வளவு பொறுப்புத் தன்மையுடனும் அஞ்சி நடத்தும் நிர்வாகம் ஆண்மையுள்ளவராலேயே சாத்தியப்படும். குடும்பம் என்பது ஒரு சிற்றரசுக்குச் சமானம். ஒரு இராஜ்யத்தை நிர்வகிக்க எவ்வளவு ஆண்மை வேண்டுமோ, அவ்வளவு ஆண்மைத் தத்துவமும் ஒரு குடும்பத்தை நிர்வகித்து நடத்துவதற்கும் வேண்டும். குடும்பத் தலைவன் காலமாய் விடும்போது, அந்த ஆண்மைத் தத்துவமும் அவனோடு போய்விட, அது வரையில் ஒன்றாய் இருந்து வந்த குடும்பம் பின் பல பிரிவினைகளாகி ஒற்றுமை கெட்டுச் சிதறிப் போகின்றது; முன்பு இருந்த மதிப்பையும் இழந்து சாமான்யமாகி விடுகிறது. "அவர் இருந்தால் இப்படியாகுமா" என்று காலஞ்சென்ற குடும்பத் தலைவனை நினைத்துக்கொண்டு துக்கிப்பவர்கள் எத்தனையோ பேரைப் பார்க்கிறோம். குயவனுக்குப் பல நாள் வேலை, தடிகாரனுக்கு அரைநாழிகை வேலை; ஒரு வீட்டைக் கட்டுவது கஷ்டம், அதை இடிப்பது சுலபம். அதுபோல் பிரிவினையின்றி ஒரு வீட்டை அன்புடனும், அஞ்சுதலோடும், சகிப்புடனும் நடத்தும் குடும்ப நிர்வாக ஆண்மை சாமான்யமானதன்று. அது இராஜ்ய நிர்வாகத்தினும் பெரிது. இவ்வித ஆண்மைக்கு அன்பும் அஞ்சுதலும் சிறப்பான துணைக் கருவிகளாம். இவ்விதம் "அஞ்சி ஆண்மை செய்யவேணும்" என்பதையே இப் பழமொழி எடுத்துக் காட்டுகின்றது. இச்சிறு சொல்லுக்குள் எத்தனைப் பொருளும் ஞானமும் அடங்கி யிருக்கிறதென்பதைச் சிந்தியுங்கள்.

## 12. அஞ்சினவனைக் குஞ்சும் வெருட்டும்.

அஞ்சி ஆண்மை செய்வதிலுள்ள கஷ்டத்தை இன்னும் தெளிவாக எடுத்துச் சொல்லும் பழமொழி இது. எவ்வளவு அஞ்சி அடங்கி ஒரு குடும்பத்தின் தலைவன் நடக்கிறானோ அவ்வளவுக்கும் அவன் மீது குதிரை யேறப் பார்ப்பவர்களே அதிகமாயிருப்பார்கள். எங்கு என்ன தப்பிதம் வருமோவென்று அஞ்சி தன் கைக்கு வந்ததையெல்லாம் குடும்பத்துக்கே செலவழித்து, எவ்வளவு உட்பட்டு நடந்தாலும்—'நீ என்ன செய்துவிட்டாய்' என்ற பெயரே ஏற்படும். மனதில் எவ்வித கபடமும் இன்றி விசுவாசத்தோடு செய்தாலும் அவனை 'வஞ்சகன்' என்றே சொல்லத் தொடங்குவர். நல்லவிதமாகத் தாழ்ந்து பேசினாலும் அதிகாரத்தோடேதான் அவனை ஆட்டுவிப்பார்கள். நமது பிள்ளைகள்தானே நம்மைத் திட்டினார்கள், நம்மை

விட்டால் அவர்களுக்கு வேறு கதியேது என்று நினைத்து எவ்வளவோ பணிந்து வணங்கினாலும், அவர்கள் மீறியே நிற்பார்கள். நம்மை அதிகாரம் செய்து பேசுவதிலும், நம்மை இளப்பமாய் மதித்துக் கேவலப்படுத்துவதிலும் முதன்மை பெற்றவர்களாய் விடுவர். வீட்டுத் தலைவனுக்கு வேண்டியவர்களை யெல்லாம் விரோதம் செய்து கொள்வார்கள் ; அதை யவன் கேட்க வந்தால், அப்படித்தான் செய்வேன் ; நீ யார் கேட்கிறதற்கு என்று ஏசத் தொடங்கு வார்கள். வீட்டில் மறந்து எதையேனும் வைத்தால் உடனே அவற்றை யெடுத்துச் சென்று விற்று செலவு செய்துவிடுவர். கேட்கப் போனாலோ, ஜாக்கிரதையாய்ப் பேசு, நானா எடுத்தேன் என்று வம்புக்கு எதிர் நிற்பார்கள். வீட்டுத் தலைவன் எதிரில் வெகு மரியாதைப் பேச்சுகள் பேசிவிட்டு, மற்றவர் களிடம், அவனா—அந்தப் பயலா என்று ஏக வசனமாய் ஆரம்பித்துக் கொள் வார்கள். எவ்வளவு விசுவாசமாய் நடந்துங்கூட, அதைக் கொஞ்சமும் பாராட்டாமல் விசுவாசமற்ற தன்மையாகவே நடந்து 'வளர்த்த கடா மார்பில் பாய்ந்தது'போல் பாய்வார்கள். தன் ஸகோதரியின் குழந்தைகளென்று எவ் வளவோ அன்பும் பக்ஷமுமாய் ஆதரணை செய்து போஷித்து நடத்தப்போக, அதற்கு அவர்கள் ஸகோதரியின் குழந்தைகள் என்று நீ ஸம்ரக்ஷணை செய் கிறாய் ; உன் தாயாருக்காக வல்லவா போடுகிறாய் என்று பழிப்பாகப் பேசு வார்கள். இந்தச் சொல் வீட்டுத் தலைவனின் மனதில் சுரீர் என்று தைக்கவே, இது என்ன புது வார்த்தை?-அப்படி நாம் நினைக்கவில்லையே, ஸகோதரியின் குழந்தைகள் என்றல்லவா எண்ணிச் செய்கிறோம் என்று யோசித்துவிட்டு, அவர்களின் பேதமான போக்குக்காக உள்ளம் நோகிறான். வீட்டுத் தலைவ னின் தாய் தன் பேருக்குள்ள வீட்டைத் தன் குமாரத்தியின் மக்களுக்கும் தன் குமாரனுக்கும் பாத்தியமுடையதாக ஒருபத்திரம் எழுதுவதாகவைத்துக் கொள்வோம். வீட்டுத் தலைவன் தன் ஸகோதரியின் குழந்தைகள் தன் குழந்தைகள் போலத்தானே, அப்படியே செய் யென்று தன் தாயாரின் செயலை ஆதரிக்கிறான். இப்படிப் பத்திரம் ஏற்பட்டதும், அது வரையில் இருக்க நிழலற்றுக் கிடந்த ஸகோதரியின் குழந்தைகள் ஒருபடி உயர்ந்து திமிர்பிடித்து விடுகிறார்கள். வீட்டுத் தலைவன் உள்ளே வைத்த சாமான் ஒன்றைக் காணோமென்று தேடுகையில், இந்த ஸகோதரியின் மக்கள் என் மேலா பழி போடுகிறாய் என்று எதிர்க்கத் தொடங்கி விடுகிறார்கள். அந்த சண்டையில் வீட்டுத் தலைவன் என் வீட்டிற்கு நான் அதிகாரி யென்கிறான் ; உடனே அம்மக்கள் "உன் வீடா ?" என்று அவனை எதிர்த்துப் பேசி அடிக்க வும் நெருங்குகின்றனர். அப்போதுதான் வீட்டுத் தலைவனுக்குப் பத்திரத் தின் ஞாபகம் வருகிறது. தன் பராமரிப்பிலேயே இருந்துகொண்டு, இப் போது தன்னை எதிர்க்கவும் தொடங்கி, தன் சொந்தமாயிருந்த வீட்டை நேற்று ஆன பத்திரத்தின் துணிவால் "உன் வீடா ?" என்று கேட்கத் தொடங்கினானே, தன் கதை எவ்வளவு கேவலமாய்விட்டது என்று அங்க லாய்க்கிறான். மழைக்கு ஒதுங்கினவன் மனைக்கு வழக்கிட்ட கதை போலல்லவா ஆயிற்று என்று திகைக்கிறான். இன்னும் இந்த ஸகோதரி மக்கள் வீட்டுத் தலைவனின் தாயோடு சேர்ந்துகொண்டு, அவனுக்கும் தாய்க்கும் ஆகாதபடி செய்கிறார்கள். வீட்டுத் தலைவனிடம் புசிக்காமல், அவன் தாயாரிடம் புசிக்கத் தொடங்கி தாங்கள் வேறேயாக இருப்பதுபோல் காட்டுகிறார்கள். வீட்டுத் தலைவனின்மேல் கோள் குண்டுணிகளைச் சதா காலமும் அவன் தாயிடம் சொல்லுகிறார்கள். சில சமயங்களில் வீட்டுத்

தலைவனின் தாயையே கண்டபடி ஏசத் தொடங்குகிறார்கள். இதைச் சகியாமல் வீட்டுத் தலைவன் அவர்களைக் கேட்கப்போனால், உன்னிடம் வரவில்லை நீ பேச வேண்டாம் என்கிறார்கள். என் தாயைப்பற்றிப் பேசினால் நான் அப்படித்தான் கேட்பேன் என்று வீட்டுத் தலைவன் சொல்லுகிறான். அதற்கு அவர்கள் "அந்த டம்பத்துக்குக் குறைவில்லை" என்று அவனைப் பழிப்பாய்ப் பேசி எதிர்த்துக் கேவலப்படுத்துகிறார்கள். என்னடா! நாம் அஞ்சி அஞ்சி அன்புடனே நடக்கப்போக இப்படி வந்ததே என்று வீட்டுத் தலைவன் ஆத்திரப்படுகிறான். என் தாயிடத்தில் நீங்கள் இருந்தாலும், என் இடத்தில் இருப்பது போல்தான், நான் வேறு என் தாய் வேறு என்று பிரிக்கப் பார்க்கிறீர்களா? கணவன் வேறே, மனைவி வேறே, தாய் வேறே, மகன் வேறே—என்று பிரித்துப் பேதம் காட்டிவிட்டு நடுவில் சுரண்டப் பார்ப்பதற்கு மித்திர பேத தந்திரம் என்று பெயர்; பஞ்ச தந்திரத்திலே அது ஒரு தந்திரம்; இக்கபட தந்திரமும் ஒரு ஜீவியமா?—லட்டு வேறு, பூந்தி வேறு?—வேறேயாக்கப் பார்ப்பது தந்திரிகளின் சமர்த்து; அது தங்கள் லாபத்துக்காக; இப்படி நீங்கள் என்னை எதிர்த்து என்ன லாபம் கண்டுவிடப் போகிறீர்கள் என்று வீட்டுத் தலைவன் மனமெரிந்து சொல்லுகிறான்: ஸகோதரியினிடத்திலிருந்த அன்பு கருதி அவள் மக்களுக்கு அஞ்சி அஞ்சி வீட்டுத் தலைவன் நடக்கப்போக, இந்தக் குஞ்சுகள் அவனை வெருட்டுகிற விதத்தைப் பார்த்தீர்களா? அவனிடம் இருந்தாலென்ன, அவன் தாயிடம் இருந்தாலென்ன? அந்தத் தாய் இவர்களுக்குச் செய்யும் செலவு அவன் செய்த செலவாகாதோ? தாயின் சொத்துக்கள் குமாரனைத் தானே சேரும். அவனுக்குச் சேர வேண்டியவற்றிலிருந்து செலவிடப்படும் பொருள் அவன் தாய் செய்தாலென்ன? அவன் செய்தாலென்ன? அவன் தாயிடம் இருந்து கொண்டே அவனைப் பார்த்து, ஓ! உன்னிடம் இருக்கவில்லை, நீ செலவிடவில்லை, உன் பணமல்ல காசல்லவென்று சொல்லி எதிர்ப்பது என்ன வெட்கக் கேடு! என்ன தெரியாத்தன்மை! என்ன அகம்பாவம்! என்ன மித்திர பேதம்! ஸகோதரியின் குழந்தைகள் என்று அன்பு வைத்து அஞ்சி அஞ்சி சகித்துச் சகித்து வீட்டுத் தலைவன் ஸம்ரக்ஷணை செய்யப்போக, அதற்கு வரும் பிரதிபலன் எப்படியிருக்கிறதென்பதைக் கண்டீர்களா? இப்படியே பந்து வர்க்கத்துள் நிகழும் பலவித அனுபவங்களையும் எடுத்துக் காண்பிக்கலாம். அன்பால் "அஞ்சினவனைக் குஞ்சும் வெருட்டும்"—என்ற பழமொழியின் தாத்பரியம் இதுதான்.

## 13. அஞ்சி நடக்கிறவளுக்குக் கால மல்ல.

'அஞ்சினவனைக் குஞ்சும் வெருட்டும்' என்று ஆண்பாலுக்குச் சொன்னதை, இன்னும் விளக்கமாகப் பெண்பாலுக்கும் இப்பழமொழி குறிப்பிட்டுக் காட்டுகிறது. வீட்டு நிர்வாகம் சரிவர நடப்பதற்கு வீட்டுத் தலைவனைக் காட்டிலும் வீட்டுத் தலைவிக்கே அதிக பொறுப்பு ஏற்படுகிறது. வீட்டுத் தலைவியின் சகிப்புத் தன்மையில்லா விட்டால் வீட்டுத் தலைவன் என்னதான் நிர்வகிப்பினும் அது சீர்படாது. வீட்டுத் தலைவன் எப்பொழுதும் தூரத்திலேயே இருப்பவன். அவனுக்குச் சமையற் கட்டில் உண்டாகிற பிணக்குகள் தெரியவராது. வீட்டிற்குள் இருப்போர் வீட்டுத் தலைவனிடம் வெகு விசுவாசமும் அன்பும் உடையவர்கள் போல் பக்குவமாக அவனுக்கேற்றபடி நடந்துவிட்டு, தங்களைப்பற்றி அவன் உள்ளத்தில் நல்ல எண்ண

மும் பற்றுதலும் உண்டாக வைத்துவிட்டு, சமையற்கட்டுக்குள்ளே வீட்டுத் தலைவியிடம்தான் எல்லா முணுமுணுப்பும் கோபமும் காட்டிக் கொள்வார்கள். வீட்டுத் தலைவி அவர்களின் பிரியப்படி யெல்லாம் நடந்து திருப்தி செய்யவேண்டி யிருக்கும். தன் கணவனுக்குத் தெரியாமலே அவர்களுக்குப் பல செலவுகள் செய்யவும் நேரும். என்ன செய்யினும் குறைப் பேச்சுகளும் ஏச்சுக்களுமே மிகுதிப்பட்டு நிற்கும். விசுவாசம் என்பது கொஞ்சமும் இராது. எல்லாம் உதட்டு உறவாகவே போய்விடும். வீட்டுத் தலைவனுக்கோ இந்தச் சங்கதிகளெல்லாம் தெரிகிறதில்லை. மிக்க விசுவாசத்துடன் அவர்கள் நடந்து கொள்வதாகவே அவனுக்கு எண்ணம். என்ன அஞ்சி அன்புடனும் நடந்தாலும் கடைசியில் நல்ல பேர் ஏற்படுவதே யில்லை. தன் பெண்ணைக் கொடுத்த தோஷத்துக்காகத் தன் மருமகனிடத்தில் எவ்வளவோ அஞ்சி ஒடுங்கி நடந்துகொண்டாலும் அந்த மருமகன் அதை நினைப்பதே யில்லை. எனக்கா செய்தாள், அவள் தன் பெண்ணுக்காகச் செய்தாள் என்கிறான். தன் குமாரத்தியின் குழந்தைகளை எவ்வளவோ பக்ஷமாக வீட்டுத் தலைவி நடத்தினாலும் அவர்கள் அவளைத் தாறுமாறாய்ப் பேசிச் சண்டாளத் தனமாகக் கேவலப்படுத்தத் தொடங்குகிறார்கள். தன் குமாரனுக்கு எதுவும் கொடாமல் தன் குமாரத்தியின் பிள்ளைகளுக்கே சொத்து சேர்த்துக் கொடுக்க முற்பட்டாலும், அவர்கள் அவளை ஒரு நாயினும் கேடாகவே மதித்து அலக்ஷியம் செய்கிறார்கள். செய்ய வேண்டுமென்று அவள் தலைவிதி ஏற்பட்டுச் செய்கிறாள், சும்மாவா செய்கிறாள் என்று பழிப்பாகவும் பழித்துக் காட்டுவார்கள். அவளுடைய சுகத்திலோ, துக்கத்திலோ எவ்வித அநுதாபமும் அற்று வேற்று மனிதர்கள் போலவே ஆவார்கள். ஆனால் தந்தையைச் சேர்ந்த பந்துக்களிடமோ—அவர்கள் தங்களை ஒரு வேளைக்கு ஆதரிக்காவிட்டாலும் எவ்வளவோ அன்பும் பக்ஷமும் உழைப்புமாய் நடந்து கொள்வார்கள். இதற்குக் காரணமும் இல்லாமற் போகவில்லை. வீட்டுத் தலைவி தன் குமாரத்தி தன்னிடம் பாராட்டிய அன்பைப் போலவே அவளது மக்களும் பாராட்டுவார்களென்று நம்பிக் கொள்கிறாள். ஆனால் நடக்கும் சங்கதியோ அதற்கு எதிரிடை. ஏனென்றால், குமாரத்தியின் மக்கள், (ஸகோதரியின் மக்கள்) அன்னியமான வேறொரு வித்தினின்றும் குமாரத்தியாகிய (ஸகோதரியாகிய) மண்ணிலிருந்து முளைத்து வெளிப்பட்டவர்கள். தனது குமாரத்தியாகிய (ஸகோதரியாகிய) மண்ணிலிருந்தும் தோற்றியவர்களென்று விசுவாசத்துடன் நினைத்து ஆதரிக்கப் போக, அக் குமாரத்தியின் (ஸகோதரியின்) மக்களோ, மண்ணின் தன்மையைப் பின்பற்றாமல், விதைக்குத் தகுந்தபடிதான் செடியும் முளைக்கும் என்பதை ஞாபகப்படுத்துவோராய் மாறிப்போய் விடுகிறார்கள். அதாவது, வித்தாகிய (சுக்கிலமாகிய) தந்தையின் குணபாவங்களைத் தான் விசேஷமாக அமையப் பெருகிறார்களே யன்றி, மண்ணாகிய (சுரோணிதமாகிய) தாயின் குணபாவங்களை அவர்கள் வெகுவாய்ப் பின்பற்றுகிறதில்லை. எனவே, குமாரத்தியின் (ஸஹோதரியின்) மக்களென்று எவ்வளவு அன்புணர்த்திச் செலவுகள் செய்து விசுவாசம் காட்டினாலும், அதற்கு அவர்கள் நன்றியற்ற தன்மையராகவே போய்விடுகிறார்கள். இதே நிலையில், குமாரத்திக்கு ஒருபெண் இருந்து அவளை ஆதரிப்பதாயின், அப் பெண் தன் தந்தையை அவ்வளவாகச் சேராமல் தன் தாய் வீட்டாரிடமே அதிக பக்ஷம் வைக்கிறாள். அதாவது குமாரத்தியாகிய பெண்தன்மை

அக் குமாரத்தியிடம் உதிக்கும் பெண் மகவுக்கும் படிந்துபோய் விடுகிற தென்றபடி. இந்தத் தத்துவத்தை விரிக்கிற் பெருகும். தன் ஸகோதரியின் குமாரனென்று எண்ணி அவனுக்குத் தன் புத்திரியை மண முடிப்பித்து தன் சொத்துக்களெல்லாம் அவனுக்குத் தருகிறான். சில காலம் கழிகிறது. தன் குமாரத்தி கண் மூடிக்கொள்கிறாள். பிறகு தன் ஸகோதரியின் குமாரன் வேறொரு பெண்ணை விவாகம் செய்துகொண்டு, தன் தந்தையைச் சேர்ந்தவர்களோடு கலந்துபோய், தனக்குப் பெண்ணையும் ஸர்வ சொத்துக்களையும் கொடுத்த தன் தாயைச் சேர்ந்தவர்களை விரோதித்துக் கொண்டு விலகி விடுகிறான். தன்னை ஆதி நாளிலிருந்து ஆதரித்துக் காத்தவனை என்ன வாரிக் கொடுத்து விட்டானென்று பழித்துப் பெரிய பகையாளியாய் விடுகிறான். இது வித்தின் தன்மையை அதன் சேடி பின்பற்றும் வகையதாகும். அன்பு மிகுதியால் எவ்வளவோ அஞ்சி நடந்தும் இப்படியெல்லாம் தாறுமாறுகள் சிற்சில இடங்களில் நேர்ந்து போகின்றன.

இன்னும் இளையாளுக்கு மூத்தாள் எவ்வளவோ அஞ்சி நடக்கிறாள். அவளுக்கு நற்பெயர் உண்டாகிறதா? கணவனுக்கு மனைவி அவன் சொற்படி யெல்லாம் நடந்தும் அவளுக்கு நல்ல பெயர் ஏற்படுவதில்லை. மாமியிடம் மருகியும், மருகியிடம் மாமியும் எவ்வளவுதான் அஞ்சி நடந்தும் பழிப்பும் கலகமுமாகவே முடிகிறது. பெண்ணைக்கொடுத்த வீட்டுக்கு எவ்வளவு அஞ்சி நடந்தும் அங்கு விசுவாசமற்ற தன்மையே மேலோங்கி நிற்கிறது. வயிற்றுப் பாட்டுக்காக வீட்டுக்கு வந்துள்ள ஓர் மாது அவ்வீட்டுக்காரருக்கு எவ்வளவு அஞ்சி நடப்பினும் அவள்மீது குற்றஞ் சொல்வோரும், சிடுசிடுப்போருமே அதிகமாகிறார்கள். மாற்றாந்தாயிடத்தில் எவ்வளவு அன்பாக நடந்துகொண்டாலும் அதை அவள் நினைக்காமலே போகிறாள். எல்லோருக்கும் நல்ல மனுஷியாக நடக்க வெண்ணுகிற பெண் எவ்வளவு அஞ்சி நடந்தும், அதில் குறைப்பேச்சுகளே மிகுதிப்படுகிறது. இதற்குத்தான் "அஞ்சி நடக்கிறவளுக்குக் காலமில்லை" என்பது. அஞ்சி நடக்காதவர்களிடமெல்லாம் எவ்வளவோ வணக்கமும் விசுவாசமுமாக நடந்துகொண்டு, அஞ்சி நடப்பவர்களிடத்தில் மட்டும் அவர்களை ஏறி மிதிப்பதென்றால்— இதைக்கொண்டு உலகத்தின் போக்கை ஒருவாறு நிதானித்துக் கொள்ள வேண்டியதுதான்.

## 14. அஞ்சா நெஞ்சு படைத்தால் ஆருக்கு ஆவான்?

இந்தப் பழமொழியை மூன்று வகையாகப் பிரித்துப் பொருள் சொல்லலாம். தான் காலமுழுதும் அன்பு உணர்த்தி, அந்த அன்பால் அஞ்சி அஞ்சி நடந்தும், அத்தனையும் வீணாகி, போதாததற்குத் தானும் ஏதுமே செய்யவில்லையென்ற கெட்ட பெயரும் தாங்கித் தூற்றுதலுக்கு வீட்டுத் தலைவன் ஆளாகும்போது, அவன் மனம் புண்பட்டுக் கசந்து வெறுப்புற்றுப் போகிறது. இப்படிப்போகவே அவன் பாராட்டிவந்த அன்பும் குறைந்து, அதன் பயனாக அஞ்சுதலும் அற்றுப்போய், எவர் எப்படி வேண்டுமானாலும் என்னைத் தூற்றிக்கொள்ளட்டும், கடவுளுக்கும் என் மனஸாக்ஷிக்கும் சரியாக நான் நடந்தேனா என்று என்னைக் கேட்டுக்கொண்டு அவ்வளவில் திருப்தி பெற்றுக்கொள்கிறேன்; எவருடைய வார்த்தையும் எனக்கு ஓர் லக்ஷியமல்ல என்று துணிந்துவிடுகிறான். எந்தப் பகை விரோதம் வந்தாலும் வரட்டும், நான் இவ்வளவு காலம் உழைத்தும் வீணான

போது, இனிமேல் உழைத்தா இவர்களுக்குப் பிரியமுள்ளவனாகப்போகிறேன்; இதுவரை செய்து அவர்களுக்கு ஏற்படாத விசுவாசமா இனி ஏற்படப்போகிறது என்று சொல்லி, தனது அன்பையும் விட்டு, அந்த அன்பால் அஞ்சுதலாகிய தன்மையையும் அகற்றிவிட்டுத் தலை நிமிர்ந்துகொள்கிறான். இப்படி அஞ்சா நெஞ்சுபடைத்தபின் இவன் யாருக்கு ஆகப்போகிறான். ஒவ்வொருவரையும் உள் ஆழம் பார்த்துத் தெளிந்து விழித்துக்கொண்டுவிட்ட இவன் இனிமேல் எவருடைய மயக்குதலிலும் சிக்கிக்கொள்ளப் போவதில்லை. இந்த நிலையில் அவன் எவருக்குப் பயப்படப்போகிறான்? ஒரே வார்த்தையில் சீ! போ! என்று தள்ளி வீசிக் கையுதறி விடுவோனாக ஆகிவிடுகிறான். அவ்வளவுக்கு அவன் மனம் கசந்துகிடக்கிறது. ஒரு காசு தேடுவது குதிரைக்கொம்பாக இருக்கும் இந்நாளில், தனக்கென்று ஒரு பைசாவும் வைத்துக்கொள்ளாமல் சத்தியத்தையே துணையாகக் கொண்டு தன்னைச் சேர்ந்தவர்களென்று எல்லாம் செலவிட்டுப் பிச்சாண்டியான பின்பு, முன்பு கூட இருந்து குலாவியவர்களெல்லாம் 'எனக்கா செய்தாய், எனக்கா சாதித்தாய், அப்படி என்ன பண்ணி விட்டாய், இந்தப் பிச்சைக்காரப் பயல் எனக்கு என்னென்னவோ செய்துவிட்டதாய் மாரடிக்கிறானே' என்று பழித்துக் குதித்துக் காட்டும்போது அந்த அன்போடு செலவிட்டவன் மனம் என்ன பாடுபட்டுப் போகிறது? அவனது சத்திய ஹிருதயம் என்னகுத்து குத்துகிறது? இந்நிலையில் அவன் வெறுத்துச் சலித்துத் தன்னுள் ஒரு துணிகரத்தை எழுப்பிக்கொண்டு அஞ்சா நெஞ்சுபடைத்தவனாய் விடுகிறபோது அவன் எல்லோருக்கும் விரோதியாக முடிவதால், அப்போது அவனைப் பார்த்து இந்த "அஞ்சா நெஞ்சு படைத்தவன் ஆருக்கு ஆவான்" என்று சொல்லிக்காட்டும் பழமொழி இது. அவன் முன் உபகாரங்களையும், அவனை ஏமாற்றியவர்களுடைய சங்கதிகளையும் உள் நுழைந்து அலசிப்பாராதவர்கள் வெளியில் நின்றுகொண்டு சொல்லும் பழமொழியாகவும் இதைக் கொள்ளலாம்.

இனி, மற்றொரு பொருளாவது :—ஒருவன் எதற்கும் துடுக்காய்ப் பேசுகிறான். எந்த சிறு விஷயத்திலும் எதிர்த்துக்கொண்டு தூஷிக்க வருகிறான். பெரியோர்களென்று மரியாதை வைக்காதவனாய் எல்லோரும் தனக்குட்பட்டவர்களென்றும், தன் சொற்படி நடக்கவேண்டுமென்றும் அகங்கரிக்கின்றான். தன்னிலும் பெரியவர்களுக்கே புத்திசொல்ல வந்துவிடுகிறான், தனது உடையும், பணமும், தடபுடலும் எவரையும் அஞ்சவைக்குமெனத் துள்ளுகிறான். எவரையும் அலக்ஷியமாய் வீசி எறிகிறான். சொல்லடா, பேசடா என்று ஏக வசனத்தில் வார்த்தையை நீட்டுகிறான். அவன் என்ன பிரமாதம், இவன் என்ன மகா தெரிந்தவனோ, வரட்டும் ஒருகை பார்க்கிறேன், என் முன்னால் எவனாவது நிற்கட்டும்—அப்போது தெரியும் அவன் பாடு என்று மீசையை முறுக்குகிறான். ஏதோ சொற்ப காசு இருக்கும் பெருமையால் கர்வம் மிஞ்சி அஞ்சா நெஞ்சுபடைத்து எல்லோரையும் பழித்து, எவருடனும் சண்டைக்குத் தயாராகி முடிவில் முரட்டு மனிதனாய் ஆகிறான். இவனுக்கு அன்புமில்லை; அஞ்சுதலுமில்லை. இப்படி "அஞ்சா நெஞ்சுபடைத்தால் ஆருக்கு ஆவான்" என்று அத்தகையோனைப் பார்த்தும் சொல்லும் பழமொழியாகவும் கொள்ளலாம்.

இதற்கு வேறொரு பொருளாவது :—காலமுழுதும் தன்னை ஆதரித்துக் காத்து முன்னுக்குக் கொண்டு வந்தவர்களிடத்தில் எள்ளத்தனையும்

விசுவாசமில்லாமல், அவர்கள் செய்ததையெல்லாம் மறந்து அவர்களைக் கண்ட கண்ட இடங்களில் தூற்றும்போது, அதைக் கேட்பவர்கள், அவ்வளவு தாங்கிச் சுமந்தவர்களையே இப்படி இவன் தூறுகிறானே, அவர்கள் இல்லாமற்போனால் இவன் இவ்வளவுக்கு முளைத்திருப்பானா, அவர்கள் பட்ட பாட்டிற்குக் கொஞ்சமாவது அஞ்சிப் பேசவேண்டாமா—இவன் என்ன மூர்க்கன், இப்படி " அஞ்சா நெஞ்சுபடைத்தவன் ஆநக்கு ஆவான் " என்று அவனைத் தாழ்த்திப்பேசும் பழமொழியாகவும் இது கொள்ளப்படும். சாலமுழுதும் உழைத்தவர்களிடமே இவன் நன்றி யறிவற்றவனாய் விசுவாசம் கெட்டுத் துரோகியாய் நீசனாய் அஞ்சா நெஞ்சுபடைத்து நிற்கையில் இத்தகையோன் இனிமேல் எவருக்குத்தான் நல்லவனாகப்போகிறான் ; ஒருபோதுமில்லை ; அவன் ஜன்மகுணத்தை மாற்றவும் முடியாது ; இத்தகையோருக்கு உழைத்தும் பயனில்லை ; வீணுக்கே பாடுபட்டதாய் முடியும்—என்று எச்சரிப்பதாகவும் இப்பழமொழியின் கருத்து இருக்கிறது. உலக இயல்பையும் ஒருவாறு இது விளக்குகிறது. (தொடர்ந்து வரும்)

## உன் நம்பிக்கையில் ஒரு எச்சரிக்கை.

நீ யாரை உண்மையில் நம்பி யிருக்கிறாயோ அவர்கள் அப்படி யில்லை. ஆனால், உனக்கு உண்மையுள்ளவர்கள் போல் பாவனை காண்பித்து நீ நம்பும்படி செய்வதற்கு மட்டும் அவர்கள் பிரயாசைப்படுகிறார்கள் என்று தெரிந்துகொள்.

**மாணாக்கர்களின் நிலைமை :**—அநேக வித்யார்த்திகள் நுனிப்புல் மேயும் மாடுகளைப்போல் அற்ப படிப்பைப் படித்து, அத்துடன் போதுமென்று திருப்தியடைகின்றனர். இவர்களுக்குக் கல்வியாகிய கண்கள் முளைப்பதற்குள் ஊனக் கண்கள் ஊனமாகின்றன. எத்தனையோ மாணவர்கள் இரத்தம் குறைந்து வெளுத்த முகத்துடன் வெளியே திரிகின்றனர். கவலையால் முகம் சிறுத்துக் கறுத்துப் பிரகாசத்தை இழக்கிறது. மாணாக்கர்களின் சரீராரோக்யம் கெட்டுப்போவதற்குப் பால்ய விவாகமும் பரீக்ஷைகளுமே காரணம். விவாகம் செய்துகொண்டவனுக்கு வித்தையில் விருப்பம் செய்வது கடினம். அதற்கென்று செலவிடும் திரவியமும் வியர்த்தம். பள்ளிக்கூடத்தில் படித்த பல சாஸ்திரங்கள் பின்னாட்களின் வாழ்வுக்குத் துணையாகாது பயனின்றிப் போகின்றன. பிரபுத்துவமானது தையற்காரனாலும் வண்ணானாலும் ஆகக் கூடிய விஷயமென்று மாணாக்கர்கள் நினைக்கின்றனர். மத கிரந்தங்களையாவது படிக்கிறார்களா ? அந்த விஷயமே அவர்களுக்குத் தெரியவராது. வேதாந்திகளைக் கண்டால் அலக்ஷியமாய்த் தாழ்மைப்படுத்தும் அசட்டு கர்வம் நமது வித்யார்த்திகளின் ஹிருதயத்தில் குடிகொண்டிருக்கிறது.

# சென்று போன நாட்கள்

## 1. ஸ்ரீமான் வி நடராஜ ஐயர்

(77-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஸ்ரீமான் நடராஜ ஐயர் "லோகோபகாரி"ப் பத்திரிகையை வெகு உன்னதமாய் நடத்தி வந்ததுடன் "ஞானசந்திரிகா" என்ற மாதாந்த ஸஞ்சிகையையும் 1897-ம் வருஷம் அக்டோபர் மாத முதற் கொண்டு வெளியிட்டு வந்தார். "லோகோபகாரி"யைப் போலவே "ஞானசந்திரிகா"வும் பரமசிலாக்கியமாயிருந்தது. ஒரு பத்திரிகை எத்துணை சிறந்ததாய் இருந்தபோதிலும் அதற்கு நீண்ட ஆயுளின் அதிர்ஷ்டமும் கூடியிருக்கவேண்டும். எத்தனையோ உத்தமமான பத்திரிகைகள் சொற்ப ஆயுளைப் பெற்று மறைந்து விட்டன. சில பத்திரிகைகள் வெகு காலமாகத் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. அது தொடங்கப் பெற்ற காலத்தின் ராசிபோலும்! "ஞானசந்திரிகா" பிறகு நிறுத்தப்பட்டுப் போயிற்று. அதன் பின் 1901-ம் வருஷம் ஆகஸ்டு மாத முதல் "இந்தியன் நியூஸ்" (The Indian News) என்று ஒரு ஆங்கில வாரப் பத்திரிகையை வெளியிடுவதானார். அதை ஆங்கில முணர்ந்தோரிற் பல்லோர் வெகு பிரியமாய் வாங்கி வாசித்து வந்தனர். எனினும் செலவுக்குத் தகுந்த வரவு இன்மையால் அப்பத்திரிகையும் ஒரு வருஷத்துடன் நின்று விட்டது. உலகத்தில் ஒரு மனுஷ்யன் எத்தனையோ காரியங்களைத் தொடங்குகிறான். தொட்டதனைத்தும் நிறைவேறி விடுவதில்லை. உண்மையாகவே அவன் மிக்க பாடுபட்டு உழைப்பினும் பல பிரயத்தினங்கள் பலன் தராமலே போகின்றன. அதிர்ஷ்ட வசமாய் ஏதோ ஒன்றிரண்டு கூடி வருகின்றது. அதுபோல நடராஜ ஐயருக்கு "லோகோபகாரி"ப் பத்திரிகை ஒன்று தான் கைகூடிய பொக்கிஷமாயிற்று.

**1902-ம்** வருஷத்தில் "லோகோபகாரி"ப் பத்திரிகைக்குப் பண்டிதை விசாலாக்ஷியம்மாள் உதவி ஆசிரியராக அமர்ந்தார். அதற்கு முன்பு ஒரு பெண்மணி தமிழ்ப் பத்திரிகைக்கு ஆசிரியராக வெளித் தோன்றியதில்லை. இதில் விசேஷமென்ன வெனில், நடராஜ ஐயரின் இனிய நடையைப் பண்டிதை விசாலாக்ஷியம்மாளும் கொண்டிருந்தது தான். இருவரும் சூரிய சந்திரர்கள் போன்றும் "லோகோபகாரி"யின் ஆசிரியர்களாய் விளங்கிப் பிரகாசித்தனர். பத்திரிகை முன்னிலும் அதிதீவிரமான விருத்தியை யடைந்தது. "லோகோபகாரி"யை வாரம் இரு முறையாக்க வேண்டுமென்ற எண்ணமும் நடராஜ ஐயருக்கு இருந்தது. அந்தப் பத்திரிகைக்கு இணையாக வேறு எந்தப் பத்திரிகையும் இருக்கவில்லை. அதன் அமைப்பே ஒரு தனி அமைப்பு; அபூர்வமான அழகிய இனிய கம்பீரமான நடை. "லோகோபகாரி"யில் ஸம்ஸ்கிருத பதங்களை சமயோசிதமாய் உபயோகித்துவந்ததானது வாசக நடைக்கு ஒருவித மேன்மையைத் தந்து கொண்டிருந்தது.

**1903-ம்** வருஷம் வரையில் நடராஜ ஐயர் தமது மனைவி ஜானகி அம்மாளுடன் இல்லறம் நடத்தி வந்தார். ஆனால் சந்தானபாக்கியம் லபிக்க வில்லை. அதன்பின் இரண்டாவது விவாகம் செய்து கொண்டார். இதில் ஜானகியம்மாளுக்கு விசேஷ மனவருத்தம் உண்டாகி தம் கணவரை விட்டுப் பிரிந்து தாய் வீட்டுக்குச் சென்று விட்டார். தமது மனைவி தம்முடன் இருக்கவேண்டுமென்று ஹைகோர்ட் வரையில் சென்றும் ஐயருக்கு வெற்றி யுண்டாகவில்லை. அது அவர் மனத்தைப் பெரிதும் புண்படுத்திற்று. இந்த வியவகாரத்தில் வெகு பணம் செலவழிந்தது. ஸதா காலமும் ஸ்திரீ வித் யாப்யாஸத்தைப் பற்றியும், தம்பதிகளின் அன்னியோன்னிய அவசியத் தைப் பற்றியும் பத்திரிகையில் எழுதிப் பெண்மணிகளின் நலத்தையே பிரதானமாய்க் கோரி நின்ற அவருக்கு இந்த ஸம்பவம் ஒரு தீராக்குறையாய் முடிந்தது. இரண்டாவது மனைவியினிடத்தும் ஸந்தானம் உண்டாகவில்லை. இது அவரது பெரிய ஆற்றொணாத் துயரம். பிள்ளை யில்லாதார் பெரும் பித்த ரன்றோ ?

**ப**ண்டிதை விசாலாக்ஷியம்மாள் எழுதிய லலிதாங்கி, ஜலஜாக்ஷி என்ற இரு நாவல்களையும் நடராஜ ஐயர் தாமே இயற்றியது போன்றும் வெளியிட்டார். அந்தக் காலத்தில் நாவல்கள் விசேஷமாக இல்லை. அத் துடன் ஐயரவர்கள் இயற்றிய நூல் என்றால் அதற்குப் பிரத்தியேகமான ஒரு சிலாக்கியம் ஏற்பட்டிருந்தது. எனவே மேற்சொன்ன இரு நாவல்களை யும் தமிழ் நாட்டினர் மிக்க அபிமானத்தோடும் பெற்றுப் பரவசமடைந்தனர். அதற்கு முன்பு அவ்வாறான தமிழ் நடையில் வேறு எந்தப் புஸ்தகமும் அவ் வளவு ஸ்வாரஸ்யமாய் எழுதப்படவில்லை. அவ்விரு புஸ்தகங்களாலும் நடராஜ ஐயரின் பெயர் ஓங்கிற்று. இவ்வளவு பிரக்யாதி அப்புஸ்தகங்களுக்கு ஏற் பட்ட பின்னர் "ஜோதிஷ்மதி" என்ற நாவலில், அப்புஸ்தகங்களை இயற் றியவர் பண்டிதை விசாலாக்ஷியம்மாள் என்று வெளியாகவே, 'ஒரு பெண்ணா எழுதிற்று' என்று எல்லோரும் பிரமித்துப் போயினர். அது முதற்கொண்டு தான் விசாலாக்ஷியம்மாளின் வித்வத்வம் தமிழுலக மெங்கும் பரவிற்று. அம்மாளால் லோகோபகாரிக்கு முன்னிலும் அதிகமான பெருமை யும் கீர்த்தியும் உண்டாயிற்று. இருவரும் இரண்டு ரத்னங்களாகப் பிர காசித்தனர். 1906-ம் வருஷத்தில் "லோகோபகாரி"ப் பத்திரிகையின் பாத்தியதையைப் பண்டிதை விசாலாக்ஷியம்மாளுக்கு உரிமையாக்கினர்.

**லோ**கோபகாரிப் பத்திரிகை பதினொரு வருஷகாலம் அதாவது 1907-ம் வருஷம் வரையில் வெகு திவ்யமாய் நடைபெற்று வந்தது. அதன் பின் நடராஜ ஐயருக்குப் பலவித வியாகுலங்கள் உண்டாகித் தேகம் மெலிந்து பத்திரிகையை நடத்தக்கூடாமற் போகும்படி நேர்ந்தது. வாழ்க்கை யும் அவருக்கு ருசிக்கவில்லை. பல வகையிலும் கஷ்ட நஷ்டங்கள் நேர்ந்தன. இங்ஙனம் மனப்பிணியும் தேகப் பிணியும் ஒன்று சேர, அவற்றால் நடராஜ ஐயர் மிக மிக நொந்து 1908-ம் வருஷம் ஜனவரி மாதம் 12-ந் தேதி கால மாயினார். அவருடன் அவரது இனிய தமிழ் நடையும் மறைந்து போய் விட்டது. அந்த அபூர்வ நடை இப்பொழுது தமிழ் நாட்டில் இல்லவே யில்லை. நடராஜ ஐயர் ஒரு பெரிய ஞானாசிரியர், பத்திரிகாசிரியர், நூலாசிரியர், நட்பிற் சிறந்தவர், ஸாதுஜன சீலர், பகவத் பக்தி நிறைந்தவர், யாவரோடும் இனிய சொல் புகன்று வெகு சுலபமாய்ப் பழகும் உத்தமர், ஆங்கிலத்திலும்,

தமிழிலும் ஓங்கிய புகழ் கொண்டவர். போதனு ஸக்தி பெரிதும் நிரம்பப் பெற்றவர். நாட்டிற்கு நல்ல பத்திரிகை இல்லாத காலத்தில் அவர் தேஜோமயனுன ஸூர்யனைப் போலும் தோன்றி "லோகோபகாரி" யை வெளியிட்டார். தமிழுலகமெங்கும் ஸாத்வீகமும், உத்தம சிந்தையும், ஆஸ்திக புத்தியும், தேச ஞானமும், ஸ்திரீ வித்யாப்பியாஸமும் உண்டாகுமாறு அவர் மனதார உழைத்தார். அவரது திருவுருவம் மறைந்து இப்போது 18-வருடங்கள் ஆய்விட்டன. ஆயினும் அவரது ஹஸ்த விசேஷத்திற்குப் பாத்திரமாய் அவரால் ஸ்தாபிக்கப்பட்ட "லோகோபகாரி"ப் பத்திரிகை நாளைக்கும் பிரக்யாதியுடன் நடைபெற்று வருவதே அவருக்குப் பெரிய ஞாபகச் சின்னமாகும். தமது பெயர் நடராஜரானதால் லோகோபகாரியின் முதல் பக்கத்தில் நடராஜப் பெருமானின் திருவுருவத்தைத் தடவை தோறும் பதிப்பித்து வந்தார். அந்தத் திருவுருவம் இப்பொழுது நடைபெறும் "லோகோபகாரி" யிலும் விளங்கி வருகின்றது. பத்திராசிரியர் மறைந்த பின்னரும் நடைபெற்று வரும் பத்திரிகைகள் தமிழ் நாட்டில் "லோகோபகாரி" யும் "சுதேச மித்திர" னுமே.

1908-ம் வருஷத்தில் நடராஜ ஐயர் காலஞ்சென்ற பின்னர், பண்டிதை விசாலாக்ஷியம்மாள் "லோகோபகாரி" யை ஸ்ரீமான். பி. வைத்தியநாத ஐயர் என்பவருக்கு விற்று விட்டார். ஆயினும் தாமே பத்திராசிரியராக இருந்து நடத்தி வந்தார். அதன்பின் விசாலாக்ஷியம்மாள் விலகிக்கொள்ள, பத்திரிகையும் பண்டித். வடிவேல் செட்டியா ரவர்களுக்கு விற்கப்பட்டுப் போயிற்று. அது முதற்கொண்டு அப்பத்திரிகைக்கே இயற்கையும் உரிமையுமாக இருந்து வந்த இனிய செந்தமிழ் நடை போய், பண்டிதத் தமிழில் பத்திரிகை மாறிற்று. ஸ்ரீமான் செட்டியாரவர்களுக்குப் பிறகு, தேச மகா கவி ஸ்ரீமான் ஸி. சுப்பிரமணிய பாரதி யவர்களுக்கு அடுத்தபடியாயுள்ள பெரியோரான வித்வசிரோமணி ஸ்ரீமான். பரலி. சு. நெல்லையப்ப பிள்ளையவர்களின் கைக்கு மாறி அவரது பத்திராதிபத்யத்தில் இப்போது "லோகோபகாரி" மிகு திவ்யமாய் நடைபெற்று வருகின்றது. அதன் ஆதி ஞான கலா விலாஸம் இப்போதைய "லோகோபகாரி" யிலும் ஜ்வலித்து வருகின்றது.

ஸ்ரீமான் நடராஜ ஐயர் இயற்றியவும் வெளியிட்டனவுமான நூல்களையும் நாவல்களையும் வருஷக்கிரமப்படிக் கீழே குறிப்பிடுகிறோம். அப்பொழுது தான் அவரை யறியாதவர்களும் அவரது தமிழ்த் தொண்டினை நன்குணர்ந்து கொள்வர்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1896-ம் ஹு | 'ஞானபூஷணி' | | 1902-ம் ஹு | 'தேவி சந்திரப்ரபா' | |
| * 1898-ம் ஹு | 'ஞானதரிசனி' | * | 1903-ம் ஹு | 'ஜோதிஷ்மதி' | |
| ,, ,, | 'ஞானத்திரட்டு' I | | ,, ,, | 'நிர்மலா' | |
| ,, ,, | ஷை இரண்டாம் பாகம் | * | 1903-ம் ஹு | 'ஆநந்தம்கிளா' | |
| * 1899-ம் ஹு | 'தத்துவதரிசனி' | | 1904-ம் ஹு | 'ஹேமாம்பரி' | |
| * 1900-ம் ஹு | 'ஞானலோசனி' | * | 1905-ம் ஹு | 'ஸரஸ்வதி' | |
| * 1901-ம் ஹு | 'நீதிமாலினி' | * | 1906-ம் ஹு | 'கௌரி' | |
| 1902-ம் ஹு | 'லலிதாங்கி' | | 1907-ம் ஹு | 'ஞானரஞ்சினி' | |
| ,, ,, | 'ஜலஜாக்ஷி' | | | | |

* இக்குறியிடப் பெற்றவைகள் "லோகோபகாரி" யின் சந்தாதாரர்களுக்கு அந்தந்த வருஷங்களில் வெகுமதியாகக் கொடுக்கப்பட்ட புஸ்தகங்களாகும். நடராஜ ஐயர் தமிழ் மக்களுக்குப் பத்திரிகா ஞானத்தை நன்கு ஊட்டியதோடு, புஸ்தக வாசிப்பிலும் அவர்களுக்கு ருசி தோன்றுமாறு பிரயாசைப் பட்டுள்ளா ரென்பதை இவற்றிலிருந்தும் ஊகிக்கலாம். "லோகோபகாரி" க்குத் துணை ஆசிரியராய் விளங்கிய பண்டிதை விசாலாக்ஷியம்மாள் இப்பொழுது பல நூல்களை வெளியிட்டவாறு ஞான பக்தி வைராக்கியங்களையே கோரி, பகவத் பக்தி செய்து காலங்கழித்து வருகின்றார். 'லோகோபகாரி' யும், நடராஜ ஐயரின் நாமமும் என்றும் விளங்குக. பெரியோர்களுடையவும் கல்விமான்களுடையவும் சரித்திர வரலாறுகளை யறிவது ஒருபோதும் வீண் போகாது. அவர்களைப் போலவே நம்முடைய ஜீவிய காலத்தையும் மாக்ஷிமையான உன்னத ஸ்தானத்துக்குக் கொண்டு போகக்கூடும் என்பதை நினைப்பூட்டி அதற்கான ஆவலையும் நம் உள்ளத்தில் உண்டாக்கிப் புதிய ஊக்கத்தை விருத்தி செய்கின்றது. 'நல்லார் குணங்கள் உரைப்பதுவும் நன்றே' என்று படித்திருக்கிறோமன்றோ?

---

## இரு பக்கமும் தலையசைப்போரிடம்

### எச்சரிக்கை கொள்.

---

வெகு ஆத்திர சிந்தையுடன் அந்தக் கலக சங்கதியை ராமு சோமுவிடத்தில் சொல்ல வரும்போது, அந்த சோமுவைத் தனக்கு மிக்க வேண்டிய மனுஷ்யனாக ராமு முற்றிலும் நம்பி விடுகிறான்.

ஆனால், சோமுவோ உள்ளுக்குள் அக்கலகத்தைத் தூண்டி விட்டவனா யிருந்து கொண்டு, வெளிக்கு மட்டில் ராமுவின் பக்கம் பரிந்து பேசுவதுபோல அபிநயித்து, இரு பக்கத்திலும் தலையை யாட்டுகிறான். இந்த இருபக்கத் தலையாட்டி வெகு பயங்கர வஸ்து.

# கவிதா விலாஸம்

## மனோதியானம்.

1 சன்மார்க்கந் தன்னில் வருவோமே, நல்ல
சற்சனர் வேண்டுவது தருவோமே.

2 பாதகருடன் சென்று திரியோமே, எம்மான்
பாதத்தை அரைநாழிப் பிரியோமே.

3 துட்டர்க ளுறவை யாடோமே, கெட்ட
துர்க்குணப் பதங்களைப் பாடோமே.

4 ஆசாரியரே நமது தெய்வம், அவர்
ஆநந்தத் திருத்தாளால் நாமுய்வம்.

5 சித்தம் வைத்துக்கண் பாராயோ, இச்
சிறியனை யனுதினங் காவாயோ.

6 நம்பினே ஞனினி உந்தனையே, நின்
நல்வரந் தந்தாள் என்றனையே.

7 ஏழைமுகம் வந்து பாராயோ, நின்னை
ஏத்திப் பணிவோரைக் காவாயோ.

8 வேறுதுணை யெனக்கிங் காரையா, நின்னை
வேண்டு மடியேன்முகம் பாரையா.

9 உனையன்றி வேறு துணையில்லை, இந்த
உலகி லெவருமனக் கிணையில்லை.

10 என்றன் குறைகளை இனிக்கேளாய், நான்
எண்ணினே னின்பதம் வெகுநாளாய்.

11 தீன தயாபர மூர்த்தியே, என்
தீவினை தீர்ப்பதுன் கீர்த்தியே.

12 மாதவ முள்ளதே வசிபாலா, நல்ல
மாமுனிவர் தொழும் கோபாலா.

# ஆநந்த குணபோதினியைப்பற்றி.

வாஸனையால் புஷ்பத்தின் இருப்பை யறியலாம். செய்கையால் மனிதர்களின் குணங்களை ஊகிக்கலாம். அநுபோகத்தால் ஒவ்வொரு பொருளின் உபயோகத்தையும் நிச்சயிக்கலாம். அதுபோல் இந்த மூன்று ஸஞ்சிகைகளைக்கொண்டு நமது "ஆநந்த குணபோதினி"ப் பத்திரிகையின் அருமையையும் பெருமையையும் அதை யாதரிக்கும் நண்பர்கள் நன்றாக அறியலாம். ஆகவே, அவர்கள் இப்பத்திரிகையின் விருத்தியைக் கோரித் தங்களால் இயன்றமட்டில் புதிய கையொப்பங்களைச் சேர்த்துக் கொடுப்பது ஸத்கருமமாகும்.

தமிழ் நாட்டில் ஒரு ரூபாய் சந்தாவுக்கு 48-பக்கங்களும் சில சமயங்களில் அதற்கு மேற்பட்ட பக்கங்களும் கொண்டு பெரிய உருவுடன் வெளிவரும் பத்திரிகை "ஆநந்த குணபோதினி" யைத் தவிர வேறில்லை. "ஆநந்த குணபோதினி" யைப்பற்றிச் சிலாகித்தும் பாராட்டியும் நமக்கு அநேக கடிதங்கள் வந்திருக்கின்றன. இதுவரையிலும் பணம் அனுப்பிய நாலாயிரம் சந்தாதாரர்களின் பெயர்கள் பதிவு செய்யப் பெற்றிருக்கின்றன. இவ்வருஷ முடிவுக்குள் ஐம்பதினாயிரம் சந்தாதாரர்கள் சேர்ந்து விடக் கூடுமென்று எதிர்பார்க்கிறோம்.

## பத்திரிகா அபிப்பிராயங்கள்.

"லோகோபகாரி":—சென்னையில் திருவாளர் தி. ராஜகோபால் முதலியாரால் வெளியிடப்படும் ஆநந்த குணபோதினி என்ற மாத சஞ்சிகையின் முதல் இலக்கம் வரப்பெற்றோம். ஸ்ரீமான் எஸ். ஜி. ராமாநுஜலு நாயுடு இதன் ஆசிரியராவார். ஸ்ரீமான் நாயுடு பத்திரிகைத் தொழிலில் நீண்ட அநுபவம் பெற்றவர். இந்த முதல் இலக்கத்தில் பல அரிய கட்டுரைகள் வெளியா யிருக்கின்றன. இதனைத் தமிழ் மக்கள் ஆதரிக்கவேண்டும்.

"பொதுநலம்":—ஆநந்த குண போதினி.—இஃதோர் மாதாந்தப் பத்திரிகை. இதனை நமது பார்வைக்கனுப்பி வைத்தவர் அதன் சொந்தக்காரர் தி. இராஜகோபால் முதலியார். நமக்கு கிடைத்தது முதல் கமலத்தின் முதல் இதழாகும். அதன்கண் பல அரிய விஷயங்களும், ருசிகரமான குறிப்புகளுங் காணப்படுகின்றன. கல்வி, கணக்கு, ஆத்துமார்த்தமான விஷயங்கள் பல நல்ல தமிழில் வரையப்படுகின்றன. அது தன் நாமத்துக்கேற்பப் பலர்க்கும் ஆனந்தத்தைத் தரும் குண விசேஷங்கள் மலிந்த வியாசங்களை இந்த முதலிதழைப் போலவே எப்போதும் எழுதி வருமானால், அதனைத் தமிழ் மக்கள் போற்றி யாதரிப்பார்கள் என்பது திண்ணம். அதன் வருட சந்தா ரூ. 1. யாகலின், அதன் சந்தாதார் தொகை மிகவாய் விர்த்தியாகுமென எதிர்பார்க்கிறோம்.

"தமிழ் நாடு":—"ஆநந்த குண போதினி":—இது ஒரு மாதப் பத்திரிகை. இவ்வாண்டு சித்திரைமாதம் முதல் வெளிவருகின்றது. பிரஜானுகூலன் ஆசிரியரான ஸ்ரீமான் எஸ். ஜி. இராமானுஜலுநாயுடு இத



காலஞ்சென்ற

ஸ்ரீமான் வி. நடராஜ ஐயர்.

ஞாசிரியராவர். முதல் சஞ்சிகையில் தத்துவ ஞானம், ஈஸ்வரபக்தி, சிறு மணித்திரள், பழமொழிக் குறிப்புகள், பத்திரிகாசாரம், நானுவிஷயக் குறிப்புகள், விகடம், விநோதம், பிரபஞ்ச தரிசனம், கண்பார்வை முதலிய 18 வகையான கட்டுரைகள் திகழ்ந்து விளங்குகின்றன. மனதைச் சுத்தப் படுத்தி, பிரபஞ்ச அனுபவங்களைத் தெளியவுணர்த்தி, லௌகீக ஞானமும், உலகியலை உணரும் சக்தியும், ஈஸ்வரப் பக்தியும் பெருக உழைப்பதுதான் இதன் நோக்கமென்று இதில் கூறப்பட்டுளது. இதைப்பற்றிய விரிவான விளம்பரத்தை வேறொரு பக்கத்தில் காணலாம். இதன் வருடச் சந்தா ரூபாய் ஒன்று. வேண்டுவோர் சென்னை தங்கசாலை வீதி, 302 எண்ணுள்ள விலாசத்திலுள்ள இதன் சொந்தக்காரர் ஸ்ரீமான் தி. இராஜகோபால் முதலியாருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

"தேசபந்து" சென்னை :—ஆநந்த குண போதினி : ஆசிரியர் :— எஸ். ஜி. இராமானுஜலு நாயுடு. வெளியிடுவோர் :—தி. இராஜகோபால் முதலியார், நெ. 302 தங்கசாலைத் தெரு, சென்னை. பத்திரிகையின் வருட சந்தா ரூ. 1-0-0 வெளிநாடுகளுக்கு ரூ. 1-4-0.

அக்ஷயவருடம் சித்திரைமாதம் முதல் தேதியன்று சென்னையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள "ஆநந்த குணபோதினி" என்ற அழகிய மாதாந்தப் பத்திரிகை வரப்பெற்றோம். இப்பத்திரிகையின் பெயருக்கு ஏற்ப இப்பத்திரிகையில் பல சிறந்த கட்டுரைகளும், அழகிய சிறு கதைகளும் மற்றும் பல அரிய விஷயங்களும் சிறந்து விளங்குகின்றன. பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள விஷயங்களைக் கண்ணுறும் தமிழர்கள் இப் பத்திரிகையின் பெருமையை நன்கு அறிந்துகொள்வர். இந்தப் பத்திரிகையைப் பற்றி நாம் தமிழ் மக்களுக்கு அதிகமாகச் சிபார்சு செய்யவேண்டிய அவசியமேயில்லை. ஏனென்றால் இந்தப் பத்திரிகைக்கு ஆசிரியராக இருக்கின்ற எமது நண்பர் ஸ்ரீமான் எஸ். ஜி. இராமானுஜலு நாயுடுவைப் பற்றி தமிழ் நாட்டிலுள்ள தமிழர்கள் நன்கு அறிவர். தமிழ் நாட்டிலுள்ள சிறந்த பத்திரிகாசிரியர்களில் ஸ்ரீமான் நாயுடுவும் ஒருவர் என்பதைத் தமிழுலகம் நன்கு அறியும். ஸ்ரீமான் நாயுடுவுக்கு பத்திரிகைகளை நடத்துவதில் திறமையும் ஆற்றலும் வாய்ந்திருப்பதுபோல் கதைகள் எழுதுவதிலும், நூல்கள் எழுதுவதிலும் திறமையும், ஆற்றலும் நன்கு அமையப் பெற்றிருக்கின்றது. ஸ்ரீமான் நாயுடு நமது தமிழ்நாட்டில் பல பத்திரிகைகளுக்கு ஆசிரியராக இருந்து வந்ததுமன்றி தமிழ் நாட்டிலுள்ள பல பத்திரிகைகளுக்கும் பல கட்டுரைகளை எழுதி வந்திருக்கின்றார். அவர் "திராவிடாபிமானி" என்ற வாரப் பத்திரிகைக்கு ஆசிரியராக இருந்ததுமன்றி, தற்பொழுது திருச்சியில் நடைபெற்று வரும் "பிரஜானுகூலன்" என்ற மாதாந்தப் பத்திரிகைக்கும் ஆசிரியராக இருந்து வருகின்றார். ஸ்ரீமான் நாயுடு எழுதியுள்ள ஆநந்த கதாகல்பகம் என்ற நூலைப்பற்றி தமிழர்கள் நன்கு அறிவர். பத்திரிகைத் தொழிலில் சிறந்த அனுபவமும், ஞானமும் வாய்ந்த ஒரு சிறந்த ஆசிரியர் "ஆநந்த குண போதினிக்குக்" கிடைத்ததைப்பற்றி நாம் அளவில்லா மகிழ்ச்சி யடைகின்றோம். தமிழ் மக்களின் முன்னேற்றத்திற்காகவும் தமிழின் அபிவிருத்திக்காகவும் அப் பத்திரிகை தைரியமாக முன்வந்து உழைக்குமென நாம் பெரிதும் நம்புகிறோம். மாதா மாதம் நடைபெறும் முக்கியமான செய்திகளும், நீதியைப் போதிக்கக்கூடிய பல அரிய விஷயங்களும், ஆச்சர்யத்தையும், விடா நகைப்பையும் உண்டு

பண்ணக் கூடிய பல ஹாஸ்யங்களும், தமிழ் நாட்டுப் பெண்மணிகளின் முன்னேற்றத்திற்கு அவசியமான பல சிறந்த நீதிகளும் "ஆநந்த குண போதினி" யில் மிளிர்வதைக் கண்டு நாம் களிபேறுவகை யெய்துகின்றோம். நம் தமிழ்நாட்டிலுள்ள தமிழர்கள் இப் பத்திரிகையை ஆதரிப்பார்களென்று நாம் உறுதியாக நம்புகின்றோம். "ஆநந்த குணபோதினி" தமிழ் நாட்டில் தமிழர்களின் அபிவிருத்தியை நாடி உழைக்குமாறு எல்லாம் வல்ல ஈசன் அருள் புரிவாராக.

**குடியரசு :**—திரு. எஸ். ஜி. இராமானுஜலு நாயுடு அவர்களை ஆசிரியராகக் கொண்ட "ஆநந்த குணபோதினி" என்னும் மாதவிதழ் வரப் பெற்றோம். திரு. இராமானுஜலுவை தமிழ் நாட்டாருக்கு நாம் அறிமுகம் செய்துவைப்பதென்பது பொருந்தாது. எனினும் நெடு நாட்களாய் அவரது சொற்களைப் பார்த்து வரும் நாம், அதனால் எழுந்த மன எழுச்சியை இரண்டொரு எழுத்துக்களாலாவது சொல்லித் திருப்தி அடைய விரும்புகிறோம்.

தமிழ் நாட்டிலே ஒரு பிறவி ஆசிரியனைக்காண வேண்டுமானால் அவர் திரு. எஸ். ஜி. இராமானுஜரேயாகும். இவரது எழுதுகோல் அதியற்புதமான தொன்றாகும். மூர்க்கமிகுந்த புலி கரடிகளையும் ஆண்மைமிகுந்த சிங்கம் மான்களையும் அடக்கி ஆண்டு சாந்தப்படுத்தி வைத்திருக்கும் விலங்காட்டக் (சர்க்கஸ்) காரனுக்கொப்பாய் முரட்டுச் சொற்களைப் பதப்படுத்தி அடுக்கடுக்காய் அணிவகுத்து படை திரட்டுவதில் நிபுணத்துவம் வாய்ந்தவர் இவரேயாகும். முத்துப்போன்ற எழுத்துக்களையும், வீரஞ்செறிந்த சொற்களையும், சுவைபொருந்திய நடையையும், இனிமை நிறைந்த தமிழையும் சொரியும் சித்திரக்கோல் திரு. இராமானுஜலு ஒருவருக்கே உண்டு. உலகானுபவத்தை-தமிழ் இலக்கியத்தேனை-அன்பின் ரசம் சொட்டும் அழகிய எழுத்தை-காதற்சுவைகொண்ட கன்னல் மொழிகளைக் காணவேண்டுமானால் திரு. நாயுடுவால் ஆக்கப்பட்ட நூல்களில் காணலாம். இவரால் எழுதப்படும் வருணனைகளைப் படித்தால் அவ்வுரு சித்திர சிங்கார சஜீதமாய் நம்முன் நிற்பதுபோன்றே தோணும். இத்தகைய சிறந்த கல்விக் களஞ்சியத்தை ஆசிரியராகக்கொண்ட "ஆநந்த குணபோதினி" யைப் பற்றி அதிகமாய் எழுதவேண்டியதில்லை. இப்பத்திரிகையில் பல சீரிய செம்பொருட் கட்டுரைகள் தலைசிறந்து மிளிர்கின்றன. இதன் சந்தாவை உயர்த்தியாகிலும் இப்பத்திரிகையை வழவழப்பான கடிதத்தில் பிரசுரிக்குமாறு இதன் பதிப்பாசிரியரைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

கடவுள் பக்தியை ஊட்டும் 'ஆனந்த தரிசனம்' அனுபவத்தைப் புலப்படுத்தும் 'பழமொழிக் குறிப்புகள்' 'சிறுமணித்திரள்,' 'விகடப்பிரதாபன்,' உலகவர்த்தமானங்களனைத்தையும் ஒருங்கே திரட்டிக் காட்டும் 'விஷயக் குறிப்பு' முதலிய தலையங்கங்களின் கீழ் காணும் பகுதிகள் நம்மைக் கவர்கின்றன. இதனைத் தமிழர் ஆதரிக்கப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

தாருல் இஸ்லாம்:—ஆனந்த குண போதினி ஒரு மாதப் பத்திரிகை; சென்னையினின்றும் "ஆங்கில ஆசான்" பல பதிப்புக்கள் வெளியிட்டிருக்கும் ஸ்ரீமான் தி. இராஜகோபால் முதலியாரால் வெளியிடப்படுவது; இதன் ஆசிரியர் நமது நண்பர் ஸ்ரீமான் ஸ்ரீரங்கம் எஸ். ஜீ. இராமாநுஜலு நாயுடு ஆவர். இவருடைய ஆசிரியத் திறமையைப்பற்றி நமது சந்தாநேயர்களுள் பலர் நன்கு அறிவர்.

# பே பே செட்டியார்

பேபே செட்டியார் மஹா பெரியவர். வாங்கினதைத் திருப்பிக் கொடுத்தறியாத உத்தமர். எவரையும் அவர் வலியப் போய்க் கேட்கும் வழக்க மில்லை. மற்றவர்களே அவரது காலில் வீழ்ந்து வணங்குவார்கள். வலுவில் பணத்தைக் கொண்டுவந்து கொட்டி சொற்ப வட்டி தரும்படி கெஞ்சுவார்கள். எத்தனை கோர்ட்டேறினாலும் செட்டியாரை ஜெயிக்க முடியாது. ஐகோர்ட் ஜட்ஜுகள் கூட அவர் ரிக்கார்டுகளை ஒழுங்காக வெகு பத்திரமாய் வைக்கும் விதத்தைப் பார்த்து ஆச்சரியப்பட்டிருக்கிறார்கள். அவர் மேல் 'கேஸ்' என்று வந்தால் எதிர் வழக்காடி ஜெயிக்க பாரிஸ்டர் நார்டனால் கூட முடியாது. அத்தனை விவகார பக்குவமாய் அவர் நடந்து கொள்ளுவார்.

***

இவ்வளவு பிரதாபம் கொண்ட செட்டியார் மீது எப்படியோ ஒரு வழக்கு ஏற்பட்டு விட்டது. செட்டியாருடைய கம்பீரமான ஸ்வபாவத்தைப் பார்த்து மயங்கி கடன் தொல்லைக்குப் பயந்த நீலமேகம் பிள்ளை தனது நிலத்தை ஐயாயிரம் ரூபாய்க்குச் செட்டியாருக்குக் கிரயத்துக்கு விற்றுவிட்டதாய் செட்டியார் பேருக்கு எழுதி வைத்தார். செட்டியார் ஒத்தைக்காசு கூடக் கொடுக்கவே யில்லை. நீலமேகம் பிள்ளையோ பிரவசித்தமான டாக்டர். ரண வைத்தியத்தில் நிபுணர். இரண்டு தடவை சட்ட சபைக்கு நின்று தோல்வி யடைந்ததில் சம்பாதித்த சொத்துக்களில் முக்கால் பாகம் தொலைந்துவிட்டது. மீதியிருந்ததைப் பிறகுபெற்றுக்கொள்ள எண்ணி செட்டியார் பேருக்கு எழுதி வைத்தார்.

***

செட்டியாரோ தன் பெயருக்கானதைத் திருப்பித் தரும்படி நேர்ந்து போகுமோவென்றெண்ணி அதைக் கந்தநாத தேவனுக்கு விற்றுவிட ஏற்பாடு செய்து நாலாயிரம் ரூபாய் வரையில் பெற்றுக்கொண்டுவிட்டார். பத்திரம் இன்னும் எழுதிக் கொடுக்கவில்லை. அதற்காக அவன் நாள்தோறும் வந்து அலைந்து போய்க் கொண்டிருந்தான். ஒரு தினம் செட்டியார் வீட்டுக்கு வந்தபோது செட்டியார் வீட்டில் இருக்கவில்லை. வெளியில் சென்றிருந்தார். திண்ணையில் வேற்றூர் மனிதராகத் தோன்றிய ஒருவர் உட்கார்ந்திருக்கக் கண்டு அவரை விசாரிக்கப்போக, தான் இருப்பது மாயவரம் என்றும், அங்கே செட்டியார் புதிதாக வாங்கிய நிலங்கள் இருக்கின்றன வென்றும், அதைத் தனக்கு விற்பதாகச் சொல்ல, அதன் மேல் முன் பணமாக ஆயிரம் ரூபாய் வரை கொடுத்து ரசீது பெற்றிருப்பதாயும், கிரய சாசன பத்திரம் எழுதி வாங்கிப்போக வந்திருப்பதாயும் சொன்னார். மாயவரத்தார் சொன்னதைக் கேட்டதும் கந்தநாத தேவனுக்கு வந்துவிட்டது கோபம்! விட்டேனா செட்டியை; என்னை மற்றவர்களைப் போல இளிச்சவாயன் என்று நினைத்துக் கொண்டானே வென்று பேசிவிட்டு ஆத்திரமாய் அப்பொழுதே வக்கீல்

வீட்டுக்குச் சென்று எல்லாம் பேசி வழக்கை ஆரம்பித்து விட்டான்.

***

டேபே செட்டியார் திரும்பி வந்ததும் மாயவரத்தான் நடந்த சங்கதிகளைச் சொல்லவும், செட்டியார் சிறிது நேரம் யோசித்துவிட்டு, கம்பீரமான குரலுடன் மாயவரத்தானைப் பார்த்து, இனி கந்தநாத தேவனுக்குக் கொடுப்பதில்லை என்று முந்தியே தீர்மானித்த சங்கதிதான்; ஆனதால் தான் அவனுக்குப் பத்திரம் எழுதித் தராமல், உனக்கே அதை விற்றுவிடுவதற்கு முன் பணமும் பெற்றேன். கந்தநாதனுக்குக் கொடுக்கவேண்டிய தொகைக்காக இப்போது வெளியில் போய் ஒரு நிமிஷத்தில் பணத்துடன் வந்திருக்கிறேன். இப்போது என்னைக் கோர்ட்டுக்கு இழுப்பதாக அவன் சொல்லிச் சென்றானென்று நீ சொல்வதால், இனி அவன் அந்தப் பணத்தைக் கோர்ட்டின் மூலமாகவே பெற்றுக் கொள்ளட்டும். நிலம் இனி உனக்கு ஆனது போலவே நம்பியிரு. எங்கே அவன் ஜெயிப்பதைப் பார்ப்போம். இந்த வியவகாரம் தீர்ந்ததும் உனக்குக் கிரயசாசன பத்திரம் எழுதிக் கொடுத்துவிடுகிறேன் என்றார்.

***

கந்தநாதன் கொண்டுவந்த வழக்கு விசாரணையாயிற்று. தன்னிடம் நிலத்துக்காக மோசமாய் முன்பணம் வாங்கிக்கொண்டு மாயவரத்தானுக்கு நிலத்தைக் கொடுக்க முன் பணம் பெற்றதாய் வழக்கு. செட்டியார் அதை நிரூபிக்கும்படி கேட்டார். கந்தநாததேவன் மாயவரத்தானைப் போய்க் கேட்க, அவன் தான் செட்டியாருக்கு விரோதமாய்ச் சாக்ஷி சொல்ல முடியாதென்று தெரிவித்து விட்டான். பிறகு சாக்ஷி ஸம்மன் அனுப்பியும் அவன் வராமல் மறைந்து கொண்டான். கந்தநாத தேவன் தான் கொண்டுவந்த வழக்கை ரூபிக்க முடியாததாலும், செட்டியார் பணம் வாங்கியதற்கான ஆதரவு ஒன்றையும் காட்டாததாலும் வழக்கு தள்ளப்பட்டதுடன் செட்டியாரின் கோர்ட்டுச் செலவையும் அவனே தரவேண்டியதாயிற்று. செட்டியார் தர்மமே ஜெயம் என்று கோர்ட்டில் சொல்லிவிட்டு வீட்டுக்குப் போனதைப் பார்த்தால் செட்டியார் மகா சத்தியவந்தரென்றும், அவர்மேல் வேண்டுமென்றே கந்தநாதன் வழக்காடினான் என்றும் எல்லோரும் நினைக்கும்படியா யிருந்தது.

***

வழக்கு வெற்றி யடைந்ததைக் கேட்டதும் மாயவரத்தான் பழம் வெற்றிலை புஷ்பத்தோடும் செட்டியாரிடம் வந்து க்ஷேமம் விசாரித்தான். செட்டியார் அவனுக்கு ஒரு தலை யசைப்பு அசைத்து இன்னும் ஆறு மாதங்கள் போகட்டும், பணத்துக்குத் தான் ரசீது இருக்கிறதே, நான் சாவகாசமாய் மாயவரம் வந்து யாவும் முடிப்பிக்கிறேன் என்று சொல்லியனுப்பினார். ஆறு மாதமும் சென்றது. வருஷமும் ஆயிற்று. மாயவரத்தான் தொந்தரை அதிகரித்தது. 'உன்னால் ஆனதைப் பார்த்துக்கொள்' என்று ஆசீர்வாதம் செய்து அனுப்பிவிட்டார். உடனே மாயவரத்தான் விவகாரம் தொடங்கினான். வழக்கின் விசாரணையில் செட்டியாரைக் கோர்ட்டார் கேட்க, மாயவரம் நிலத்தைக் கொடுப்பதாகச் சொல்லவே யில்லை யென்றும், ரசீதும் தான் எழுதியதல்லவென்றும், எவ்விதப் பணமும் தான் பெறவில்லை யென்றும், அவ்விதம் பெற்றிருந்தால், கந்தநாத தேவன்

அதை அப்போதே தன் வழக்கில் ருசு செய்திருப்பா னென்றும், அவன் சாக்ஷி ஸம்மன் அனுப்பியும், மாயவரத்தான் ஆஜராகவில்லை யென்றும், வேண்டுமென்றே தன் மேல் வீண் வழக்குகள் கொண்டு வருகிறார்களென்றும் வெகு வணக்க மாய்த் தெரிவித்துக் கொண்டார். கோர்ட்டார் மாயவரத்தானைப் பார்த்து நீர் கந்தநாததேவன் சாக்ஷியாக அழைத்தபோது அந்த ரசீதைக் காண்பித்திருக்கலாமே, ஏன் அப்படிச் செய்யவில்லை யென, மாயவரத்தான் செட்டியாருக்கு விரோதமாக நிற்கப் பின்வாங்கித் தான் அப்படிச் செய்யவில்லை என்றான். கோர்ட்டார் இதை ஒப்புக் கொள்ளாமல் வழக்கைத் தள்ளி, செட்டியாரின் கோர்ட்டுச் செலவு களையும் மாயவரத்தானே கொடுக்க வேண்டு மென்று தீர்ப்புச் செய்தார் கள். செட்டியார் வழக்கம்போலவே "தர்மமே ஜெயம்" என்று சொல்லி நியாயாதிபதியை வணங்கி விட்டு வீட்டிற்குச் சென்றார். மாய வரத்தான் தலையில் கைவைத்துக் கொண்டு கதறியபடியே சென்றான்.

***

வெளியூரிலிருந்த டாக்டர் நீல மேகம் பிள்ளைக்கு இவ்வளவு சங்கதி களும் எட்டிற்று. இனி தாமதித் தால் ஆபத்து என்று செட்டியா ரிடம் வந்து நிலங்களைப் பழயபடி தன் பேருக்கு எழுதித் தந்துவிடும் படி கேட்டார். செட்டியார் வாய் திறக்கவே யில்லை. கடைசியாகக் கண்டித்துக் கேட்டதில் உனக்கும் பே பே! உன் அப்பனுக்கும் பே பே! என்றார். டாக்டர் என்ன செய்வார். அவரை நீதி ஸ்தலத் துக்கு இழுக்கவோ ஆதாரமில்லை. தெய்வம் விட்ட வழியென்று வாயி லும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு வெளியில் நடந்தார். பே பே செட் டியார் என்று அன்றுமுதல் அவர் பெயர் பிரக்யாதி யடைந்தது. எல் லாருக்கும் தெரிந்த சங்கதியானா லும் கோர்ட்டில் தக்க ஆதாரமில்லா மல் ஜெயிக்க முடிகிறதில்லை!

எவ்வளவு நாளைக்கு அக்கிரமங் கள் நடக்கும்? எவ்வளவு பாவங்கள் வரைக்கும்தான் பூமாதேவி தாங்கு வாள்? வஞ்சனைக்காரர்களின் வஞ் சகம் நெடுநாளைக்கு ஓங்குமா? செட்டியாருக்கு ராஜபிளவை தோன்றிற்று. பெரிய டாக்டரே வந்து பார்க்கவேண்டியதாகி, அவ ருக்குத் துணையாக சிறிய டாக்டர் நீலமேகம் பிள்ளையும் வந்திருந்தார். பிள்ளையைச் செட்டியார் காணவும் நடுங்கினார். பிள்ளைக்கோ உள்ளுக் குள் ஆத்திரம். பெரிய டாக்டர் ராஜபிளவையைப் பார்த்துவிட்டு நாளைக்கு அறுத்தாகவேண்டு மென் றும், புரை ஏறிவிட்ட தென்றும், சீக்கிரம் உயில் முதலிய முன்னேற் பாடுகளைச் செய்துகொள்ளும்படி யும் தெரிவித்தார். செட்டியாருக்கு ஏக்கம் பெருகிப் போயிற்று. நீல மேகம் பிள்ளையை ரகசியத்தில் அழைத்து அவர் நிலங்களைத் திருப் பிக் கொடுத்துவிடுவதாயும், தன் உயி ரைக் காப்பாற்றிவிட வேண்டுமென் றும் கெஞ்சினார். நீலமேகமோ பத்திரத்தின் மூலம் நிலங்கள் தனக்குச் சொந்தமான பிறகே எது வும் செய்ய முடியுமென்றும், சுப வஞ்சக சண்டாளனை நீர் செத் துப் போவதே மேலென்றும், ஆனால் நன்றாக அவஸ்தைப்பட்டு அலறி அலறித் துடித்து உயிர் நீங்கவேண்டு மென்றும், அதைக் கண்ணால் தான் பார்த்து விட்டால் தனக்குத் தன் நிலங்கள் வந்து சேர்ந்தது போல் திருப்தி யடைவே னென்றும் கடுகடுத்துப் பேசினார். செட்டியார் அதற்குப் பதில் சொல் லாமல் நாளையதினம் வந்தால் நிலத்

தின் பத்திரங்களைப் பெற்றுப் போகலா மென்றும், அதன் மேல் டாக்டர் தனக்கு நல்லதைச் செய் யட்டு மென்றும் தெரிவித்தார்.

அன்று முழுதும் செட்டியார் தன் வேதனையோடு வேதனையாக நீலமேகம் பிள்ளைக்கு அவரது நிலங் களைக் கிரய சாசனத்துக்கு விற்றது போல் பத்திரம் எழுதச் செய்வித்து, வீட்டுக்கு ரிஜிஸ்தாரைத் தரு வித்துப் பத்திரத்தை ரிஜிஸ்தரும் செய்தார். நீலமேகம் பிள்ளை இதை யெல்லாம் தூர இருந்து, தெரிந்து கொண்டு கந்தநாதனையும், மாயவரத் தானையும் உடனே வரும்படி தந்தி கள் அனுப்பினார். அவர்களும் இரவு வண்டியில் வந்து சேர்ந்தனர். அவர் களை நீலமேகம் பிள்ளை பார்த்து, தன்னிடம் நாளையதினம் செட்டி யார் வீட்டில் செட்டியின் மோசங் களை விவரித்துக் கூச்சல் போடும் படித் திட்டம் செய்வித்தார். மறு நாட் காலையில் பெரிய டாக்டரும் நீலமேகம் பிள்ளையும் செட்டியார் வீட்டுக்குச் சென்றனர். செட்டி யார் பரம விஸ்வாஸத்துடன் நீல மேகம் பிள்ளையை வணங்கி பத்தி ரம் ரிஜிஸ்தரான விவரம் தெரி வித்து, அதை அவர் பெற்றுக் கொள்ளும்படியான ரசீதையும் அவ ரிடம் சேர்ப்பித்தார். அதற்குள் கந்தநாத தேவனும் மாயவரத்தா னும் உட்புகுந்து செட்டியார் செய்த படுமோசங்களை விவரித்துக் கூச்ச லிடத் தொடங்கினர்.

பெரிய டாக்டர் இது என்ன வென்றார். நீலமேகம் பிள்ளை செட்டி யார் படுமோசக்காரர்; எத்த னையோ பேர்களின் சொத்துக்களை பயகரித்துக் கோர்ட்டில் ஜெயித் துக் கொண்டும் வரப்பட்டவர். தர்மமே ஜெயம் என்பது அவரது தியான ஸ்லோகம். இவ்வுத்தம ரிடம் இவ்விருவரும் ஏதோ கொடுத்து ஏமாறியதாகத் தெரி கிறது என்றார். பெரிய டாக்டர் செட்டியைப் பார்த்து, நாங்கள் உமக்கு வைத்தியம் செய்தாலும், மேலுக்குத் தெய்வ பலம் ஒன்று இருந்தால் தான் நீர் குணப்பட முடியும்; ஆனால் இந்த மோசம் போனவர்களின் வயிற் றெரிச்சல் அந்தத் தெய்வ பலத்தைத் தடுத்து விட்டால் நாங்கள் என்ன சிகிச்சை செய்தும் குணப்படாது; ஆதலின் அபாயத்தி லிருக்கும் நீர் கடவுளுக் குப் பயந்து ஸத்தியமாக நடந்து கொள்ளும் என்றார். நீலமேகம் பிள்ளை அவ்விருவரிடமும் தொகை கள் பெற்றது உண்மையா, உள்ள தைச் சொல்லிவிடும் என்று கண் டித்தார். செட்டியாருக்கு எப்படி யாவது உயிர் பிழைத்தால் போது மென்றாய் விட்டது. அவ்விருவர் தொகைகளையும் வட்டியும் முதலு மாய்த் திருப்பிக் கொடுத்துவிட, அவர்களும் நீலமேகம் பிள்ளையை வாழ்த்திக் கொண்டு சென்றனர்.

கடைசியில் இராஜ பிளவையை யறுத்துச் செட்டியார் குணப்பட இரண்டு மாதங்கள் சென்றன. டாக்டருக்கும் மருந்துக்குமாக ஏராளமான பணம் விரயமாயிற்று. தனது அக்கிரமங்களின் பலன் இது என்று செட்டியார் உணர்ந்து கொண்டார். முடிவில் நற்சுகமும் பெற்றார். இப்போது செட்டியார் மறுபடியும் ராஜ பிளவை வருமோ வென அஞ்சி தெய்வத்துக்குப் பயந்து நடந்துகொள்கிறா ரென்று ஊரார் சொல்லிக் கொள்கிறார்கள். "தர்மமே ஜெயம்" என்ற செட்டி யார் வாக்கு மற்றவர்களுக்குப் பலித்து அவர்களும் சுகமாயிருக்கின் றனர். எப்போதும் மோசம் நாசம் தான்—வட்டியும் முதலுமாகப் பின் னுக்கு அநுபவிப்பது இருக்கவே இருக்கிறது; அது விடாது.

# பத்திரிகா சாரம்.

"லோகோபகாரி"ப் பத்திரிகையில் பின்வரும் குறிப்பை ஸ்ரீ மஹேச குமார சர்மா எழுதியிருக்கின்றார்:—தினசரிக் காரியக் கட்டளையொன்றை வகுத்துக்கொண்டு அதை உறுதியுடன் பின்பற்றி ஒழுகியவர்களுக்குள்ளே பெஞ்சமின் ப்ராங்க்லின் என்பவர் பேரொளி வீசும் உதாரணமாய்த் திகழ்கிறார். அவர் தமது வாழ்க்கைச் சரித்திரத்தில் சேர்த்திருக்கிற அக் காரியக் கட்டளை பெரிதும் அறிவுச்சுடர் கொளுத்தத் தக்கதாயிருப்பதால், அதை இங்கே எடுத்துக் காட்டுவது பொருந்தும்.

## ப்ராங்க்லினுடைய தினசரிக் கட்டளை.

| | மணி நேரம். | |
|---|---|---|
| காலை. கேள்வி:— இன்று நான் என்ன நற்கருமம் செய்வேன்? | 5 6 7 | துயிலெழுதல், காலைக் கடன் தீர்த்தல், பகவத் பிரார்த்தனை, செய்ய வேண்டிய காரியங்களை நிர்ணயித்தல், படிப்பு, காலைப் போஜனம். |
| | 8 9 10 11 | தொழில். |
| நண்பகல். | 12 1 | படிப்பு, வரவு செலவு கணக்குப் பார்த்தல், மத்தியான போஜனம். |
| பிற்பகல். | 2 3 4 5 | தொழில். |
| மாலை. கேள்வி:— இன்று நான் என்ன நற்கருமம் செய்தேன்? | 6 7 8 9 | வஸ்துக்களை அவ்வவற்றின் உரிய விடங்களில் வைத்தல், இராத்திரி போஜனம், சங்கீதம், வேடிக்கை, விநோதம், அல்லது சம்பாஷணை, அன்றைய காரியங்கள் சம்பந்தமாய் ஆத்ம பரீக்ஷை. |
| இரவு. | 10 11 12 1 2 3 4 | நித்திரை. |

இந்தக் காரியக் கிரமத்தை அனுஸரித்து நம்மில் ஒவ்வொருவரும் தம் தம் வாழ்க்கை நிலைமைக்கும், சூழ் நிலைமைக்கும் தக்கவாறு ஒரு தினசரிக் கட்டளையை வகுத்துக்கொண்டு அதன்படி ஒழுக முயலவேண்டும். உறு

திப்பாட்டுடன் இதைச் செய்துவந்தால், யதேச்சாப்பிரவர்த்தி அகன்று போம்.

* * * *

சாதாரண மூக்குத்தூளை விட்டு விடுவதாகப் பிரதிக்ஞை செய்து பின் அதைப் போடுகிறவர்களைப் பார்க்கும்போது தானும் போடத் தூண்டுத விருப்பது எல்லாரும் கண்ட விஷயம். பொடியைவிடப் பெரிய தூண்டு தலாயுள்ளது சாராயம். இதன் உபயோகத்தால் விளையும் கெடுதியைப்பற்றிச் சொல்லப்புகுவது கொல்லன் தெருவில் ஊசி விற்பதுபோலாகும்.

—சுதேசமித்திரன்.

* * * *

பிறதேசத்தார் முன்னேற்றத்திற்குச் செய்வதைப் பார்த்தும் நமக்கு ரோஷம் வராவிட்டால் இந்தியர்களுக்கு உயிருண்டோ எனப் பலர் சந்தேகிக்கக் காரணம் உண்டாகும். —சுதேசமித்திரன்.

* * * *

ஜீவகாருண்யத்தையும் அன்பையும் பட்சபாத மின்மையையும் அடிப்படையாகக் கொள்ளாத அமைப்புக்கு மதம் என்ற சொல் ஏற்காது.

—தமிழ்நாடு.

* * * *

**திபேத்தில் விவாகமுறை**:—திபேத்தில் ஒரு குடும்பத்தில் மூத்த பிள்ளைக்கே சொத்துகள்போய்ச் சேருவதால், மூத்தபிள்ளை மட்டும் விவாகம் செய்துகொள்ள உரிமையுண்டு. மூத்தவனுக்குக் கலியாணமானால் இளைய சகோதரர்களும் அந்த மனைவியை அநுபவிக்கிறார்கள். ஆனால் அந்த ஸ்திரீக்குப் பிறக்கும் பிள்ளைகள் மூத்த சகோதரருடைய பிள்ளைகளாகப் பாவிக்கப்படுகிறார்கள். —“ சுதேசமித்திரன்.”

* * * *

**ஏகபத்தினி விரதம்**:—பறவைகளில் கொக்கு, நாரை, அன்னம், வாத்து, இவை ஏகபத்தினி விரதமுடையனவாம். விலங்குகளில் ஊராங் ஊட்டாங் என்னும் குரங்குகள் ஓர் ஆணும் பெண்ணுமாய் ஆயுள் முழுமையும் வாழ்க்கை நடத்துகின்றனவாம். ஆறறிவுள்ள மக்கள் எப்படி?

—“ தமிழ் நேசன்.”

* * * *

**காங்கிரஸ் மகாசபை**:—காங்கிரஸானது தேசசேவை செய்யும் ஒரு மகா ஸ்தாபனம். ஜாதிவகுப்பு மதம் முதலிய பிரிவினைகளால் அது அசைக்கப்படுவதன்று. இந்த தேசத்திலுள்ள ஜனங்கள் தொண்டமான் முதல் தோட்டிவரையில் எல்லோரும் பாரத புதல்வர்கள் என்பதையும், எல்லோரும் சகோதரர்கள் என்பதையும், சமஉரிமை உடையவர்கள் என்பதையும், தாய்நாட்டின் க்ஷேமம் எல்லோருக்கும் க்ஷேமத்தை உண்டுபண்ணுமென்பதையும் காங்கிரஸ் ஒன்றுதான் காரியத்தில் அனுஷ்டிக்கிறது.

—“சுதேசமித்திரன்.”

* * * *

**பக்தி யோகம்**:—நாம் பல தடவைகளிலும் லோக நிந்தைக்கு அஞ்சி இம்மையிலும் மறுமையிலும் பெரு நிதியமான பரமார்த்தத்தைப் பாதாளத்

தில் எறிந்துவிட்டு வறியராகிறோம். எம்பெருமானுடைய திருநாமத்தைச் சொல்லிச் சிறிது நேரமாயினும் சிந்திக்கவோ, ஏகாந்தத்திலிருந்து அவரைத் தியானிக்கவோ விருப்பம் உண்டாகும்பொழுதே, அப்படிச் செய்வதைக் கண்டு பிறர் பரிஹஸிப்பார்களோ அலைக்கழிப்பார்களோ என்று ஐயங்கொண்டு, அம்முயற்சியை அடியோடு விட்டுவிடுகிறோம். மனிதனை விடக் கடவுளிடத்து அதிகமாய் அஞ்சுகிறவனுக்கு நமக்குள்ளே முட்டாள், பைத்தியக்காரன், என்ற பட்டங்களே பெரும்பாலும் அளிக்கப்படுகின்றன.

"ஜய காலீ ஜய காலீ போலோ,
லோக போலோ போல்பே பாகல்ஹொலோ"

"வெல்க காளி வெல்க காளி என்றுரை,
வெறியனென்று மனிதர் கூறின், கூறுக."

—"லோகோபகாரி."

* * * *

தொழிலாளி என்பவன் நாட்டின் நன்மைக்கான ஒரு தொழிலைக் கற்று அத்தொழிலைத் தானாகவே சுயேச்சையுடன் செய்து, அதன் பலன் முழுவதையும் தானும் தன் நாட்டு மக்களும் அடையும்படியான முறையில் தொழில் செய்பவன்தான் தொழிலாளி. நீங்கள் அப்படியில்லை. ஏதோ ஒரு முதலாளியின்கீழ் தினக்கூலிக் கமர்ந்து, உங்களுக்கு எவ்வித சுதந்திரமு மில்லாமல் முதலாளி சொல்லுகிறபடி செய்துவிட்டு, அதன் பலன் முழுவதையும் அவனே அடையும்படி செய்து, உங்கள் ஜீவனத்திற்குக்கூடப் போதுமானதாயில்லாத கூலியை வாங்கிப் பிழைக்கிறீர்கள். —"குடியரசு."

* * * *

சுயமதிப்பு, அதிகார ஆசை, அறநெறி, முக்தி இவைகள்தாம் வாழ்வுக்குப் பெரிய தூண்டுதல்களாகும். சுயமதிப்பு இல்லாதவர்களுக்கு ஏனைய மூன்று உணர்ச்சிகளும் ஏற்படமாட்டா. சுயமதிப்பு உள்ள மனிதன் அற்பத்தனத்தில் ஒருபொழுதும் ஆசைகொள்ளான். அகம்பாவம் கொடிதாயினும், சுயமதிப்பு இல்லாத மனிதனும், கூட்டத்தாரும் ஒருபொழுதும் உருப்பட மாட்டார்கள். —"தமிழ் நாடு."

* * * *

ஸ்ரீமான் ஆர். கே. ஷண்முகம் செட்டியாரின் வாக்கு:—நாட்டு நலனோடு வகுப்பு நலனையும் நாடிப் பிணக்கில்லாமல் உழைக்கவேண்டும். ஒவ்வொரு வகுப்பாரும் தேசத்தின் முன்னேற்றத்தைக் கவனியாமல் தத்தம் வகுப்பின் நலனை மட்டும் நாடுவார்களேயானால் தேசத்துடன் வகுப்புகளும் நாசமடையும். நாட்டின் நலமே நமது நலம் என்று நாம் அறியவேண்டும்.

பிறர் கீழ்மக்கள் என்னும் எண்ணம் நமக்குள் குடிகொண்டிருக்கும் வரையில், நம்மைக் கீழ்மக்கள் என்று ஒருவன் சொல்லும்போது அவன் மீது குற்றம்கூற நமக்குப் பாத்தியதை இல்லை.

மானிடனாய்ப் பிறந்த எவனையும் கீழ்ஜாதியானென்று நான் கருத மாட்டேன்.

பரீக்ஷைகளில் தேர்ந்தவர்களின் தொகைக்கேற்ப உத்தியோக பீடங்கள் எந்த நாட்டிலும் இருக்கமுடியா.

ஸ்ரீமான் எஸ். ஸ்ரீநிவாசய்யங்காரின் வாக்கு :—நம் சத்திரிகள் நம்மைப் புகழ்வது சிற்சில சமயங்களில் அபாயகரமானது ; ஆனால், அவ்விதம் புகழ்ந்துவிட்டு சில அபிப்பிராயங்களையும் தெரிவித்தால், அதனின்றும் விஷயத்தை யறிந்துகொள்வது சுலபமாகும்.

பெரிய பேருடையவர்களைக் கண்டு மயங்கி விடக்கூடாது.

அதிகாரத்தை வகித்த ஒரு தேசத்தாரும், அவ்வதிகாரத்தை யாரிடமிருந்து பெற்றாரோ அவர்களிடம் மீண்டும் மனமொப்பிக் கொடுக்க இசைந்ததே கிடையாது.

---

# சென்றமாதம்

**பாரிஸ்டர் நார்ட்டனின் கூற்று.**

நமது மாகாணத்திலும் பிற இடங்களிலும் பாரிஸ்டராயிருந்து பிரவித்த புருஷரான மிஸ்டர் நார்ட்டன் தமக்கு நண்பர்களால் பிரிவு உபசாரம் நடத்தப்பட்ட சமயத்தில், ஹிந்து-முஸ்லிம் குழப்பமும், பிராமண—அப்பிராமண வாதமும் ஸ்வராஜ்யத்துக்குப் பங்கம் விளைக்கின்றனவென்றும், ஆதலின் ஸ்வராஜ்யம் கிடைப்பது அருமையென்றும் கூறினார். எத்தனையோ சிக்கலான வழக்குகளை யெல்லாம் அலசி ஆராய்ந்து வெற்றி கண்ட நார்ட்டனுக்கு இந்தியர்கள் ஸ்வராஜ்யத்துக்குத் தகுதி யுடையவர்களே என்பது தெரியாமற் போகுமா? தெரியும் தான். ஆனால் தம்மால் ஒரு கிளர்ச்சி ஏற்படவேண்டாமென்றெண்ணி, உள்ள உண்மையை மறைத்து மேலுக்கு இப்படி, ‘வெள்ளை யடித்திருக்கிறார்’ என்று தான் நினைக்க நேருகிறது.

***

**“புதிய வஸ்துக்கள்”**

இப்போது தோன்றி யிருக்கும் ‘புதிய வஸ்துக்க’ளில் சீயக்காய்த் தூளும் ஒன்று. இது உண்மையான சீயக்காய்க்கு சமம் ஆகாது. இவ் விதமே காப்பித் தூளும் நாமே வறுத்துக்கொள்ளும் காப்பிக் கொட்டைக்கு இணையாகாது. நெய்க்குப் பதிலாகத் தோன்றியுள்ள போலி நெய்களையும் நம்மவர் தூர எறிதல் வேண்டும். உண்மையான நெய்யின் ருசிகரமும் குணமும் இதற்கு வராது. வெண்ணெய் காய்ச்சிய நெய்யில் ஒரு கறண்டி நெய் இட்டுக்கொண்டால் ஒரு பானைச் சாதத்தையும் சாப்பிட்டுவிடலாம். இவ்விதமே டப்பிப் பால்களும், மற்ற ‘குழந்தை ஆகாரங்க’ளும், பசும்பாலுக்கும் தாய்ப் பாலுக்கும் ஈடானவை யன்று. இளைப்பு, புஷ்டி என்பவை பெரும் பாலும் இயற்கையையே பொருத்தவை. புஷ்டியுள்ள குழந்தையின் படத்தைப் பார்த்து மயங்கி வாங்கு

தல் பேதமை. சனியன் பிடித்த இந்தப் புதிய வஸ்துக்களைக் கையாடாதிருப்பதே ஆரோக்கியத்திற்கு மார்க்கமாம்.

* * *

**புதியன புகுத்துதல்**

**து**ருக்கியில் துருக்கிய மாதர்களை மேனாட்டு மாதர்களைப்போல் பயிற்றுவிப்பதற்காக அரசாங்கத் தூண்டுதலுடன் ஒரு முயற்சி செய்யப்பட்டதாம். எல்லா ஸ்திரீகளையும் நாடகம் காண அனுப்பினராம். அங்கு ஆடவர்களோடு கலந்து உட்கார வெறுப்புற்றுப் பலர் திரும்பினர். நாடக ஆபாஸத்தைப் பலர் காரியுமிழ்ந்தனர். நாடகத்தின் முதல் அங்கம் பூர்த்தி பெறுவதற்குள் பெண்மணிகள் வெளியேறி விட்டனர். நெடுங்காலமாய் ஊன்றி வரும் ஸம்பிரதாயத்தைத் திடீரென மாற்றப் பார்ப்பது நடவாத காரியம். கடைசியில் பெரிய அலங்கோலத்தில் முடிந்துவிடும். நமது தமிழ் நாட்டில் விதவா விவாகப் பிரசினையும் இவ்விதமே. வாயால் 'பந்தல்' போடலாம், புஸ்தகங்கள் எழுதலாம். நடத்திக்காட்டும்போது தான் வண்டியிலுள்ள மாடு படுத்துக்கொள்கிறது. வழக்கம் என்பது நல்லதோ கெடுதலோ—உடனே மாற்றுவதென்பது சுலபத்திலில்லை.

---

# பிரார்த்தனை எதற்காக?

மனிதர்கள் செய்யும் பிரார்த்தனையானது கடவுளினது தன்மையையும் பெருந்தகைமையையும் விளக்கவல்ல மார்க்க மன்று. ஒவ்வொருவரும் தத்தமக்கு வேண்டியவற்றைப் பிரார்த்தனை மூலமாய்க் கடவுளை வேண்டினால் தான் அளிப்பர் என்று எண்ணிச் செய்யும் பிரார்த்தனை சர்வக்கியானமும் சர்வ நன்மையுமுள்ள கடவுளின் இலக்கணத்துக்கு முற்றிலும் முரண்படுவதாகிறது. கடவுள் யார் யாருக்கு எதுவெது வேண்டுமோ அதைத் தாமே யுணர்ந்து அளிக்கவல்லவரல்லர் என்றும் ஆகிறது. கடவுள் பிரார்த்தனையைக் கேட்டு ஜீவர்களுக்கு அருள்புரிவாரானால், பிரார்த்தனை செய்தபோது எதை அளிக்கின்றனரோ, அதைப் பிரார்த்தனை செய்யாதபோது அளிக்கா ரன்றோ? சர்வக்கியானியாகிய கடவுள் எதைத் தானே உணர்ந்து செய்யாரோ, அதனையே மனிதன் பிரார்த்தனை வாயிலாக அவருக்கு அறிவுறுத்தி அவரைத் தன் வசப்படுத்திப் பெறவோனாகிறான். பரம கருணாநிதியாகிய கடவுள் தமது சிருஷ்டிகளுக்கு இன்னது நன்மையைப் பயக்கும் என்று தாமே யுணர்ந்து செய்யாமல், அதனைப் பிரார்த்தனையால் தெரிந்து செய்கிறாரெனல் ஸர்வ பரிபூரணராகிய கடவுளின் பூரணத்திற்குக் குறைவாகு மன்றோ?

**நி**ர்விகாரியாகிய கடவுள் தமக்குள் ஓர் தீர்மானத்தை-முடிவை ஸங்கல்பித்துக்கொண்டு விதித்து அதன்படி பிசகாது நடத்திவர, அதனை மாற்றுவதற்காக மனிதன் தன் பிரார்த்தனை மூலமாகத் துன்மார்க்க ரீதி

யில் முயலுகிறுனென்று ஏன் சொல்லக்கூடாது? கடவுள் விதித்த விதியே விதியாயின், அதனைப் பிரார்த்தனை மாற்றவல்ல தல்லாதபோது, மனிதர்கள் செய்துகொள்ளும் பிரார்த்தனையால் பயன் யாது? பிரார்த்தனை என்பது கடவுளின் மனதைத் திருப்பும் திறன் உள்ளதாகவல்லவோ இருக்க வேண்டும். அவ்விதம் பிரார்த்தனையானது கடவுளின் ஆதி ஸங்கல்பத்தை மாற்றிவிடக் கூடிய சக்தி கொண்டிருக்குமாயின், கடவுள் மனிதர் வசப்பட்டு, தாம் முன்னர் விதித்த விதியும் கொண்ட எண்ணமும் பிசகென்று நீக்கி, அல்பனுகிய மனிதன் காட்டிய-கேட்டுக்கொண்ட மார்க்கத்திலே நடப்பவராகின்றுர். அப்பொழுது பகவத் தன்மையின் மகாத்மியம் குறைவு பட்டுவிடுகின்றதே. அது பொருந்துமா? அவ்விதமில்லாமல் கடவுளுக்குப் பூரணத்துவத்தை ஏற்றி, பிரார்த்தனையானது கடவுளின் மனத்தைத் திருப்ப வல்லதல்லவென்று முடிவு செய்வோமாயின், அப்பொழுது மனிதன் எவ்வளவுதான் பிரார்த்தித்தாலும் கடவுள் விதித்த விதியும், அவரது ஸங்கல்பமும் மாறப்போகின்றதில்லை யானபடியால், அப்படிப்பட்ட பிரார்த்தனையால் யாதொரு பயனும் இல்லையென்று ஏற்படுகின்றது. அவ்வாருயின், பயனில்லாத பிரார்த்தனை செய்துகொள்வதில் என்ன பயன்? இவ்விதம் பயனில்லாதபோது அறிவிற் சிறந்த பெரியோர்கள் முதலாகப் பிரார்த்தனை செய்துகொள்வது ஏன்? இவ்வினுவுக்கு விடை விரும்புகிறேன்.

தீராச் சநதேகி.

விடை

பிரார்த்தனை என்பது இருவகை: ஒன்று—தன் சொந்த விஷயங்களை உத்தேசித்தும், தனக்குற்ற கஷ்டங்களின் நிவர்த்தி கோரியும் பகவானைப் பிரார்த்தித்தலாம். இது சாமான்ய லௌகீகச் சார்பானது; ஒரு வியாபாரம்போன்றது; அதமமானது. இன்ன கோரிக்கையை நிறைவேற்றினுல் இன்னது செய்விக்கிறேனெனல் முற்றிலும் அறியாமையால் விளைவதாம். எனினும், அவரவர்தம் சித்த பக்குவத்திற்கேற்பப் பிரார்த்தனைகள் நிகழ்வதால் இந்த அல்பமானவற்றையும் கடவுள் உகந்து ஏற்றுக் கொள்ளுகின்றுர். மற்றொன்று—பகவானுடைய சேவையிலும் அவரது வைபவங்களிலும் ஈடுபட்டு, அவரையே யாவுமாய்ப் பாவித்து, அவரது தரிசனப் பிராப்திக்காகவே அவரது அருளைப் பிரார்த்தித்துக் கிடத்தலாம். இது, உயர்நலஞ் சார்ந்த தன்மையதாம்.

பிரார்த்தனையானது தூரவிருக்கும் மனிதனைக் கடவுளின் அருகில் செல்லவைக்கின்றது. அவரை மறந்துவிட்டவனது உள்ளத்தில் மீண்டும் அவரது சாயலைத் தோற்றச் செய்விக்கின்றது. தான் என்ற அகங்காரத்தினின்றும் விட்டொழிய வைக்கின்றது. தான் செய்தல், நான் முடித்தல் என்று அவன் தன்னையே தலைமையாக நினைத்துக்கொண்ட ஞானத்தை அகற்றுகின்றது. யாவும் பகவத் ஸங்கல்பமென்று தெரிந்துகொள்ளச் செய்கின்றது. இவ்விதம் பிரார்த்தனை என்பதொன்றில்லையாகில், பிரபஞ்ச மாய்கையிலுழலும் மனுஷ்யனுடைய சித்தத்தில் ஈசுவர ஸ்வரூபமே தோற்றுவதற்குச் சந்தர்ப்ப மில்லாமற் போய் நாஸ்திகனுகச் செய்ய வைத்து விடும். அவ்விதக் கேட்டிற்கு இடமில்லாமல் அடிக்கடி மனுஷ்யனைப் பக்குவப்படுத்தும் பரமரகசியக் கருவி பிரார்த்தனை என்ப தொன்றேயாம்.

ஒவ்வொருவருக்கும் இன்னின்னவாறு "படியளப்பு" என்று அவரவர்களின் உலகத் தோற்றத்தின் முதலில்தானே ஸங்கல்பிக்கப்பட்டுப் போய், அவ்விதம் நடந்துவருமிடையே, கஷ்டங்கள் தவிப்புகள் காரணமாகவோ, அல்லது பரிபக்குவ மேலீட்டின் காரணமாகவோ பகவானைச் சிந்தித்து மன்றாட வேண்டுமென்றுள்ள எல்லைக்கு நெருங்கியவுடனே, ஆதி ஸங்கல்பத்தில் விதித்தவாறு அவனும் பிரார்த்தனை வழியில் கடவுளைப் பிரார்த்திக்கத் தொடங்குகிறான். இது கடியாரத்தில் 12-எண்ணுக்குப் பெரிய முள் வந்ததும் மணியோசை கேட்பதுபோலாம்; பொழுது விடிகிற தருணங் கண்டு கோழி கூவுவதுபோலவுமாம்.

இனி, வேண்டிக்கொள்ளப்படும் பிரார்த்தனைகளெல்லாம் சித்தித்து விடுவதில்லை. இதனாலேயே, பிரார்த்தித்துக் கொண்டாலுங்கூட ஆதி நியமத்தின்படி நிறைவேறுகின்றதே யன்றி, பகவான் முதலில் விதித்த விதியைப் பிரார்த்தனையானது மாற்றிவிடுகிறதில்லை யென்பது தெளிவாகும். பிரார்த்தனை பிரக்ஞையும் அந்த நியமத்துக்கு ஒத்தே அது தோற்ற வேண்டிய காலங்களில் தோற்றுகின்றது. பிரார்த்தித்தபடி சித்தியாவிடில் யாது பயனோவெனில், நமது சித்தம் அந்த சமயம் பிரார்த்தனை மார்க்கத்தில்-பகவத் பக்தியில் ஈடுபட்டுப் பக்குவத்தன்மைகொண்டதொன்றையே அதன் பரம பிரயோஜனமாகப் பாவிக்கவேண்டும். நமது நன்மையின்பொருட்டே நமது பிரார்த்தனைக்குச் செவிகொடாதிருந்திருக்கலாம். அந்தப் பரம ரகசியத்தை யறிய நமக்கு சக்தி ஏது? முன் ஊழ்வினை விலகும் தருணமாயிருந்து, பிரார்த்தனைபலனை ஒருவன் பெறத் தகுதியுள்ளவனாய்ப் பரிணமிக்குங் காலையில் கடவுளும் அவனுக்கு அந்தப்படியே அநுக்கிரகிக்கிறார்; இது பூர்வ நியமனத்தின்படியே நிகழ்வதாம்.

நாம் ஒருவனுக்கு ஆறு அணா கூலியென்று நிச்சயித்துப் பிறகு இரக்க சிந்தையுடன் அவனுக்குப் பத்து அணா கொடுத்தனுப்புகிறோம். இதனால் நமது முதல் தீர்மானத்தை மீறி நடந்ததாய்விடுமோ? அதனால் நமக்கு ஒரு தாழ்வு ஏற்பட்டுப்போமோ? ஒருபோதுமில்லை. அவ்விதமே சிற்சில காலங்களில் கடவுள் சித்தமுவந்து தமது ஆதி ஸங்கல்பத்தையே மாற்றி விசேஷாநுக்கிரகம் செய்வதுமுண்டு.

ஒரு பக்தருக்கு ஏழரை வருஷத்துச் சனியன் தொடரவிருந்த காலத்தில், அந்தப் பக்தர், ஏழரை மாதமும், ஏழரை நாளுங்கூடத் தம்மால் தாள முடியாதென்று பகவானை வேண்டிக்கொள்ள, அதற்குப் பகவான் அசரீரியாகத் தோன்றி, கர்மத்தை எவ்விதமும் அனுபவித்தே தீரவேண்டுமாதலால் சனி திசையை ஏழரை நிமிஷங்களுக்குமட்டும் இருக்குமாறு அனுக்கிரகித்தார். மறுதினம் கோவிலில் ஆபரணமொன்று காணமற்போக, அதற்கு முந்திய இரவில் காத்துநின்ற இந்தப் பக்தரே எடுத்திருக்க வேண்டுமென்று அவரைக் கட்டியடித்து ஹிம்ஸிக்கத் தொடங்க, அதற்குள் ஏழரைநிமிஷ சனி திசையும் ஒழிந்துபோக, அதற்கடுத்த நிமிஷத்தில் காணமற்போன நகை அது இருந்த இடத்திலேயே இருப்பதாய்த் தெரிய வந்து பக்தரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு அவரை விட்டுவிட, இங்ஙனம் பகவான் ஏழரை வருஷச் சனிதிசையை ஏழரைநிமிஷ அளவில் தீர்ந்துவிடும்படி கடாக்ஷித்ததையே விசேஷாநுக்கிரகம் என்பர். இது அவரது

ஒப்பற்ற கருணையால் அபூர்வமாக நிகழ்வதில், அது ஆதி ஸங்கல்பத்தினின்றும் பிறழ்வதாயிருப்பினும், அது தீனதயாளராகிய அவரது கருணை ரஸத்தின் பெருமையைக் காட்டுமேயன்றி ஆதி நியமத்தைக் கடந்து சென்றதாக ஆகமாட்டாது. ஆதி நியமத்தை ஓரளவிலேனும் தழுவியே அது இருக்கும்.

இதுகாறும் கூறியவற்றால், பிரார்த்தனையானது வீண்போகாதென்றும், உடனே இல்லையாயினும் பிறகேனும் அது சித்திக்குமென்றும், அவ்வாறு பிரார்த்தனை பலன் கிடையாவிடின் அதுவும் நமது நன்மைக்காகவே இருக்கவேண்டுமென்றும், பிரார்த்தனை நிறைவேறாவிடினும் அதனால் பகவானைத் தியானித்தற்கான சித்தபக்குவம் நமக்கு உண்டானதே பரம பிரயோஜனமாகக் கருதவேண்டுமென்றும், பிரார்த்தனையானது கடவுளின் ஆதி நியமத்தை ஒருபோதும் மாற்றுவதில்லையென்றும், ஒருகால் விசேஷானுக்கிரகம் காரணமாக மாறினும் அது ஆதி ஸங்கல்பத்தைச் சிறிதேனும் ஒட்டியே யிருக்குமென்றும் கண்டறியலாம். (பத்திராசிரியர்.)

---

## சிறு மணித் திரள்

(69-ம் பக்கத் தொடர்ச்சி.)

57. போன ஜன்மத்தில் செய்த புண்ணிய பாபங்களுக்கேற்ப நல்ல குணமும் கெட்ட குணமும் படைக்கிறார்கள். அந்த குணம் இந்த ஜன்மத்தில் செய்த ஸவகாஸத்துக்கேற்றபடி விருத்தியையும் க்ஷீணத்தையும் அடைகின்றன.

58. எத்தனை சோப்புக் கட்டிகளைப் போட்டுக் கழுவினாலும் கழுதைக்குக் குதிரையின் பளபளப்பு மேனி உண்டாகாது. இப்படியே எத்தனை நல்லுரைகள் கூறினாலும துர்க்குணி திருந்தமாட்டான்.

59. உன்னுடைய ஜீவனத்தை வெகு நுட்பமாய் ஆராய்ந்து, அதன் சூக்ஷுமங்களைத் தெரிந்துகொண்டு உன்னைக் கவிழ்க்கப் பார்ப்பவனைப்பற்றி நீ உன் நெஞ்சிலே அதிகமான எச்சரிக்கை கொள்.

60. எவ்வளவு செல்வமிருந்தும் என்ன பயன்? பிறரைப் பார்த்துப் பொறாமைப்படுவோர்களுக்குத் தங்களின் செல்வமெல்லாம் அற்பமாகவே தோன்றும்.

61. மகா வித்வானாயினும் அவனிடம் நல்லொழுக்கமில்லையேல் அவன் ஸ்நேகத்துக்குப் பாத்திரனாகான்.

62. காவேரி, கங்கை முதலிய மகா நதிகள் தங்களிடம் வரும் அசுத்தங்களைப் பெற்று சுத்த நதியென்று பெயர் பெறுவதுபோல், ஆசாரியன் சிஷ்யர்களிடமுள்ள அசட்டுக் குணங்களைப் பரிகரித்து அவர்களுக்கு சுறுசுறுப்பும் நல்லொழுக்கமும் கற்பிக்கவேண்டும்.

63. தன் பிள்ளை, தன் பெண் என்ற அபிமானத்தால் அவர்கள் செய்யும் தப்பிதங்களை மறைத்துப் பிறரையே தூற்றுவது சிலர் வழக்கம்.

தன் விரல் கண்ணைக் குத்தினால் நோவாமலிருக்குமா? அதுபோல் தன் பிள்ளையாலும் அது உடைக்கும் பாத்திரம் மறுபடியும் கூடுமா?

64. நீ பழகுகிற புதிய இடத்தில் உன் வரலாறுகள் தெரிந்த பழய மனிதன் இருக்கக்கூடாது. அவனால் உனக்கு வெகு கேடுகள் உண்டாக லாம். உன்னைப்பற்றிக் கேவலமாக அங்கு சொல்லவும்கூடும். அநுகூல சத்துருவுக்கு எப்போதும் பயப்படு.

65. இன்று நாம் சிரித்துப் பேசி ஒன்றாய் உண்டு நமது உள்ளத்தை யெல்லாம் வெளியிட்டு எவரெவர்களிடமெல்லாம் பழகுகிறோமோ, அவர் கள்தான் நாளைக்கு நமக்குப் பூரண விரோதிகளாகிறவர்கள். ஆதலின் எதி லும் மிதமாய் இரு. உன் உள்ளத்தை எவரிடமும் திறந்துவிடாதே.

66. நீ ஒரு காலத்தில் மன்னிக்கப்படாத சில தவறுகள் செய்து அதைப் பிறர் அறியாமலும் இருந்திருக்கலாம். அவற்றை உனக்கு மிகவும் வேண்டியவனென்று இப்போது தோன்றுகிறவனிடம் வெளியிடாதே, உன் மனத்தில் உள்ளது அப்படியே இருந்து ஒழியட்டும். பிறர் அறிவதில் கேவலமே வரும்.

67. ஒருவர் அடைந்த கீர்த்தியைக் கண்டு பொறாமைகொள்ளும் துர்க்குணிகள் சிலருண்டு. இவர்கள் ஸ்வர்ணக் கட்டியைப் பித்தளைக் கட்டி என்பர். ஆயினும் நாளடைவில் அந்தக் கட்டியைப் பலர் தேய்த்தும் உரைத் தும் உருக்கியும் தங்கமென்று உணர்ந்துகொள்ளாது போகார்.

68. உலகத்தின் ஸ்வபாவம் யார் என்ன சொன்னாலும் அதை யுடனே நம்புகிறதுதான். விவேகிகள் மட்டும் எந்த சமாசாரத்தையும் உடனே நம்பிவிடமாட்டார்கள். அந்த சமாசாரம் யாரால் உண்டாயிற்று?—அது நடந்திருக்கக் கூடுமாவென்பதைக் கூடியவரை முந்தியே யோசித்துப் பார்ப்பர்.

69. நம்முடைய கருத்து நிறைவேற அநேக நாட்கள் செல்லுமென் பது உண்மையே. ஆயினும் ஈசுவரனுடைய செயலால், எந்த நற்காரிய மும் நிறைவேறுமென்ற உட்கருத்தோடும் உழைக்கவேண்டிய தவசியம்.

70. நமது தேசத்தில் நடந்து வரும் விஷயங்கள் நம்மை ஒரு நெருக் கடியை நோக்கிச் செலுத்திக்கொண்டிருக்கிறது. ஒரு வார்த்தை சொல்லு முன் ஒன்பது தரம் யோசித்து நிதானிக்கவேண்டியு மிருக்கிறது.

71. சாந்தி, சமாதானம், சமரஸம் ஆநந்தம் இவைகளில்தான் கவிகளுக்குப் பிரியம். மனதுக்குச் சாந்தியும், வாழ்வில் ஓர் ஆநந்தமும் இருந் தால் தான் ஸங்கீதம் எழும்.

72. குடிப்பதால் எவனும் நல்ல பிரஜையாக முடியாது; நல்ல தொழிலாளியாகவும் முடியாது; நல்ல புருஷன் அல்லது தகப்பனார் ஆவ தும் துர்லபம். (மகாத்மா)

73. மற்றவர்களுடைய சொத்துக்குத் தீங்கிழைக்காமல் உங்கள் சொத்தை உபயோகியுங்கள் என்பது ஒரு சித்தாந்தம். (மகாத்மா)

74. ஹிந்துக்களும் முஸ்லிம்களும் சண்டை போடுவது, ஒரு கையால் ஸ்வராஜ்யம் கேட்டுக்கொண்டே மற்றொரு கையால் ஒரே யடியாக அதைப் புதைக்க ஆழக் குழி தோண்டுவதாகும். (ஸ்ரீமதி ஸரோஜினி தேவி.)

75. எல்லோருக்கும் க்ஷேமம் ஏற்படும்படியான தோற்றங்கள் சிலர் மூலம் தான் வரக்கூடும். இன்னும் சிலர் அதை உருப்படுத்த உதவி செய்ய லாம். முடிவாக அதைத் தயாரிப்பதில் பலர் உதவிசெய்ய முடியும். பொறுப்பை யுணர்ந்து நடப்பதின் பலத்திலிருந்து தான் உண்மையான முன்னேற்றம் ஏற்பட முடியும். (இராஜப் பிரதிநிதி.)

76. நம்பிக்கையோடும் தைரியத்துடனும் தங்கள் வேலையை உணர்ந்து செய்வதின் மூலம்தான் வெற்றி யேற்பட முடியும். பரஸ்பரம் ஒருவரையொருவர் அறிந்து நம்பிக்கை வைப்பதின் மூலமாகத்தான் வேலை பூர்த்தியாக முடியும். (இராஜப் பிரதிநிதி.)

77. சோம்பேரித்தனமும, ஸன்மார்க்கக் குறையும் நெறிகெட்ட நடத்தையுந் தான் குற்றம் செய்யத் தூண்டுகின்றது. இன்றைக்கு வேலை யில்லாமல் திரியும் சோம்பேரிப் பையன் நாளையதினம் குற்றம் செய்ய ஆரம்பித்துவிடுகிறான்.

78. பட்டினியைக் காட்டிலும் அரை ரொட்டி மேலானது—என்பது ஆங்கிலப் பழமொழி.

79. அபிப்பிராய பேதங்களை ஸகித்துக்கொள்ள முடியாமலிருப்பது பழய காட்டு மிராண்டித்தனத்தின் சின்னமேயாகும். (கவி ரவீந்திரர்.)

80. எல்லாம் கல்வியைத் தான் பொறுத்திருக்கிறது, ஜனங்கள் தங்கள் மூட நம்பிக்கைகளையும், தாமத புத்தியையும் விட்டுவிட்டுப் பல வான்களானுலொழிய வேறு எதுவும் அவர்களைக் காப்பாற்ற முடியாது. (கவி ரவீந்திரர்.)

81. ஒரு ஆடவன் திருந்துவதால் அது அவனளவிலேயே இருக்கும். ஒரு பெண் திருந்துவதால் ஒரு குடும்பம் முழுவதுந் திருத்தமடையும். (ஸ்ரீமதி ந. பத்மாசனி அம்மாள்.)

82. மார்க்கட்டில் அன்றாடம் காய் கறி விற்று ஜீவனம் நடத்தும் பழுத்த கிழவியின் சுதந்திரம் 300-ரூபாய் சம்பளம் பெறும் உத்தியோகஸ்த ருக்கு உண்டென்று எவரும் துணிந்து கூறமுடியாது.

83. பெருந்தன்மையென்பது பணத்தால் வருவதல்ல. பணமுள்ளோரிற் பலர் அற்பத் தன்மையைக்கொண்டிருக்கிறார்கள். எத்தனை தனவான்கள் அற்பர்களோடு இணங்கி நாடோடிகளாய்த் திரிவதைக் கண்டிருக்கிறோம். எவ்வளவு பணக்காரர்கள் ஹீனமான காரியங்களைச் செய்து அவமானமடைந்திருக்கிறார்கள். ஆதலின் பெருந்தன்மை மனதைப் பொறுத்தது. எவனுடைய மனம் நற்காரியங்களில் பிரவர்த்திக்கிறதோ அவனே பெருந்தன்மையுள்ளவன்.

84. சாக்கடைக்கு அருகே யிருந்து துர்நாற்றம் வீசுகிறதென்று மூக்கைப் பிடித்துக் கொள்வதுபோல, துஷ்டர்களின் பக்கத்தில் வசித்து-கஷ்டமடைகிறேனே என்று மனம் வருந்துவதில் என்ன பிரயோஜனம்? சாக்கடையை விட்டு விலகினால் துர்க்கந்தம் தொலையும். அதுபோல் துஷ்டனைவிட்டுத் தூரச் சென்றால் கஷ்டம் நீங்கும்.

85. நீ செய்யவேண்டிய முதற் கடமை உன்னை இன்னானென்று அறிந்துகொள்ளவேண்டியதே. இதற்காக உன் நிலைமையை இன்னதென் றறி.

86. உனக்கு வந்த பெருமை யெல்லாம் உன் பெற்ருேரிடமிருந்தே; நீ மனுஷ்யனுய்ப் பிறந்ததற்கு அவர்களே காரணம். உன் பெற்ருேர்கள் என்ன ஸ்திதியில் இருக்கிருர்களோ அந்த ஸ்திதியில் நீயும் இருக்கிரு யென்பதைத் தெரிந்துகொள்.

87. ஸாதாரணமாய்த் தெருக்களில் அலேயும் ஏழைப் பிள்ளைகளை விட நாம் உயர்ந்த நிலேயிலிருக்கிருேமென்று கர்வம்கொள்ளாதே. உன்னை விட இன்னும் அதிக அந்தஸ்தில் எத்தனையோ பேர் இருக்கின்றனர்.

88. நற்குணமும் நன்னடக்கையும் பெருந்தன்மையுமுள்ள பிள்ளை களை விட இரத்தினக் கற்கள் அதிகமாய் மதிக்கப்படா.

89. எந்த மனிதன் தானே உயர்ந்தவனென்று தன்னை நினைத்துக் கொள்ளுகிருனே அவன் கடைத்தேறமாட்டான். எவன் மரியாதையின்றிப் பேசுகிருனே அவனுக்கு மற்றச் செல்வங்கள் இருந்தாலும் அவமரியாதையே கிடைக்கும். கடவுள் தன்னை நல்ல ஸ்திதியில் வைத்திருந்தும் பிறரது வருமானத்தை நோக்கிப் பொருமைப்படுவோனை, இந்த ஜன்மத்தில் எதை யும் அநுபவிக்கக் கொடுத்து வைக்காதவனென்றே தீர்மானிக்கவேண்டும்.

---

**காலத்தின் மகிமை** :—காலம்செய்யும் கோலம் என்கிருர்கள். காலத் துக்குள்ள சக்தியும் பெருமையும் அபாரம். சூரர்களின் தீரச் செயல்களும், பாபிகளின் தீச்செயல்களும், அனுபவித்த இன்ப துன்பங்களும் காலத்துக் குப் பலியாகின்றன. முற்காலத்திலிருந்த மகா பராக்கிரமசாலிகளின் செயல்கள் இதிஹாஸங்களால் தெரியவருகின்றன. ஜப்பான், சீனு, மங் கோலியா, உருஷியா, ஜெர்மனி, பிரான்சு, துருக்கி முதலிய தேசங்களில் வஸித்து செய்தற்கரிய பெரிய காரியங்களைச் செய்துமுடித்த தீரர்களின் பெருமை காலத்துக்குப் பலியாய்விட்டது. நமது முன்னோர்களின் நிலே மையும், அவர்களின் செயலும் மறைந்துபோயின. காலமானது பெரிய மலேப்பாம்பைப்போல் எல்லாவற்றையும் விழுங்கிக்கொண் டிருக்கிறது. போனவருஷம் பாராட்டிய நேசத்துக்கு இந்த வருஷம் மோசம்வந்தது. இது எதனுல்; காலத்தாலன்ருே? நம்முடைய அழகு, யௌவனம், ஞாப கம் முதலியவற்றைக் காலமானது பெரிய கள்வனைப்போல் திருடிக் கொண்டே செல்கின்றது. நாம் அதை யறிந்தும் சும்மா விருக்கிருேம். என்ன பரிகாரம் தேடுகிருேம்? ஒன்றுமில்லே. பொழுது புலர்ந்ததென்று பூரிக்கிருேமேயன்றி, நமது வாழ்நாளில் ஓர் தினம் குறைந்துவிட்டதென்று உணருகிருேமா?

---

| விவேகம்<br>விநோதம்<br>விசித்திரம்<br>விகடம் | **விகடப்<br>பிரதாபன்<br>(Registered.)** | அநுபவம்<br>அற்புதம்<br>ஆச்சரியம்<br>ஆநந்தம் |
|---|---|---|

# ரெயில்வே பிரயாண தமாஷ்!



**வி**கடன் பார்த்தாலும் பார்த்தேன், இந்த ரெயில் பிரயாண தமாஷைப் போல எந்தக் கண்ராவியையும் காணவில்லை. 'அடித்தாலும் புருஷன் புடைத்தாலும் புருஷன்' என்பதாய், அதை விட்டாலும் கதியில்லை—அப்புறம் போனாலும் வழியில்லை' என்ற மாதிரியில், 'உடம்பையும் கொடுத்து அருமையும் குலைகிற' நிலையிலே, 'அன்று கண்ட மேனிக்கு அழிவில்லை' என்பது போல் என்றும் பெருந்தொல்லையாய், 'ஆலைக்குள் அகப்பட்ட சோலைக் கரும்பாய்' சொல்லொணாத் துன்பம் படவேண்டியிருக்கிற இந்த ரயில் பிரயாண சங்கதியை என்னென்று கூறுவது? இடி, குத்து, அடிதடி, தள்ளல். தலைக்குட்டை — தலைப்பாகை தடுமாறுதல், தலைத்துணி போதல், ஜேபியில் உள்ளதைச் சாப்பிட்டுவிடுதல், அவசரத்தில் சருக்கிவிழுதல், முழங்கால் உடைதல், முட்டல், தட்டல், கிட்டல், வெருட்டல், குட்டல், திட்டல், ஓடல், ஏங்குதல், வீங்குதல், உட்காருதல், உறங்கல், நிற்றல், படுத்தல், சாய்தல், நிமிர்தல், ஓய்தல், அசைதல், இசைதல், சண்டையிடல், சமாதானமாகல், வேண்டல், வெறுத்தல், முறைத்தல், இறைத்தல், சிரித்தல்-முதலிய விநோதக் கூத்துகளையெல்லாம் ரயில்வே டிக்கட்டு வாங்குதல் முதலாக வண்டியேறி இறங்கவேண்டிய இடத்தில் இறங்கி வெளியே போகும்வரையிலும் நன்றாகப் பார்க்கலாம். அநுபவிக்கவும் அநுபவிக்கலாம்.

***

'உடல்மெச்சப் பால் குடிக்கிறாயா, ஊர்மெச்சப் பால் குடிக்கிறாயா' என்பதுபோல், வேடிக்கை விநோதங்களுக்காகவும், உல்லாஸத்துக்காகவும் ரயில் பயணத்தைத் தொட்டுக் கொள்வோர் சிலராக, ஆறுமாதத்துக்கு முன்பே பிரயாயாணத்தைத் தீர்மானித்துக் கொள்கிற விகடனைப்போன்ற தலைகாய்ந்த குண்டிகள் தான் வெகுபேர்.

"குண்டி காய்ந்தால் குதிரையும் வைக்கோல் தின்னும்" என்பதாக, குண்டாக் கரணம் போட்டாலும் பிண்டச் சோற்றுக்கு வழியில்லை, என்ற நிலைக்கு வந்துவிட்டவர்களும் இந்த ரயில் பிரயாணத்தில் நினைவை நாட்டுகிறார்கள். 'அஷ்டமத்துச் சனி பிடித்து பிட்டத்துத் துணியையும் உரிந்துகொண்டது' என்ற ஸ்திதியில் தவிப்பவர்களும், 'அஷ்ட தரித்திரம் தாய்வீடு—அதிலும் தரித்திரம் மாமியார்வீடு'—என்ற நிலையில் வெந்து நொந்து படுபவர்களும், 'அண்டை வீட்டுக் கடனும் பிட்டத்துச் சிரங்கு மாகாது' என்றபடி அயல் அண்டையிலெல்லாம் ஒன்றிரண்டு காசாகவே வாங்கிப் பல ரூபாய் சில்லறைகளுக்குக் கடன் ஏறி, அதைத் தீர்க்க வழியின்றி வெளியில் சென்றாவது வசூலித்து வந்து தொலைப்போ மென்பவர்களும், 'அமுதுபடி பூஜ்யம்—ஆடம்பரம் அதிகம்' என்பதாக வெளியில் வெள்ளையும் சள்ளையுமாக மேல் மினுக்குக் காட்டிவிட்டு, வீட்டிலே அன்றைய கூழுக்கும் வழியற்றோராய்க் கடைசியில் வேறிடம் மாறி வயிற்றுக்கு 'வயணம்'தேட எண்ணுபவர்களும், வீட்டுக்குள்ளே என்றைக்குமே சச்சரவும் சங்கடமுமாய் 'அருவருப்புச் சோறும் அசங்கதக் கறியும்' தின்ன வெறுத்து வெளியேறிவிட நினைப்பவர்களும், 'அவரவர் அக்கரைக்கு அவரவர் பாடுபடுவார்' என்பதாக, அவரவர்களும் தங்களின் காரியத்தில் கண்ணுயிருந்து ஜாடையாக விலகிக் கொள்ள, தன்பாடு அம்பலமாக, இதுவரை அவர்கள் சாதிப்பார்கள் என்று நம்பியதெல்லாம் வீணுகி வீங்கித் தெருக்கடக்கப் பார்ப்பவர்களும், 'அடிவயிற்றில் இடிவிழுந்தாற்போல' தனக்கு வேண்டிய மனுஷ்யர்களுக்கு ஆபத்து-பிராண பயம்-தொல்லை வந்துவிட்டதெனக் கேட்டு வாரிச் சுருட்டிக்கொண்டு அப்பொழுதே அந்த ஊரை யடைந்துவிட மாட்டோமா வென்று ஆத்திரப் படுகிறவர்களும் இன்னும் பல்வேறு சிந்தையினருமாக—இந்த ரயில்வே பிரயாணத்தை ஆரம்பித்துக் கொள்ளுகிறார்கள்.

***

பிரயாணம்—என்றால், என்ன அது ஒரு இலேசா? புறப்படுதல்-என்றால் கொஞ்சத்தில் இருக்கிறதா? வீட்டைவிட்டுச் செல்லுவது என்றால் அதற்கு மனம் வருகிறதா? இளகிய மனத்தையும் இரும்பாக்கிக் கொண்டுதான் பயணப்பட வேண்டும். நாலு மாசத்திற்கு முன்பே நிச்சயித்த பிரயாணம், எட்டு வருஷங்களுக்கு முன்பே போட்ட திருப்பதி உண்டியல், பழனிக்குப்போக பத்து வருஷத்திற்கு முந்தியே போட்ட திட்டம், வெளியூர்போய் உள்ள கடனெல்லாம் தீர்த்துச் செல்வம் திரட்ட எத்தனையோ நாளாக நினைவு, கடைசியில் அய்யனிட்ட நாள் வந்தே எதுவும் ஆக வேண்டியிருக்கிறது. 'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்பது தவறித் தவறி நிச்சயிக்கும் பிரயாணத்திலே தான் நன்றாகத் தெரிகிறது. அப்பால் பிரயாணத்துக்குப் பஞ்சாங்கத்தைத் திறக்கப்போனாலோ ஆகாத 'பஞ்சாங்கத்துக்கு அறுபது நாழிகையும் தியாச்சியம்' என்பதாய் மரணயோகம், கரிநாள், வாரசூலை, யோகினி எல்லாம் குறுக்கே வந்து முட்டிக்கொள்ளுகின்றன. எல்லாவற்றையும் தள்ளி ஒரு நாளை நிச்சயித்தால் வராத விருந்துகள் அதற்கு முந்தியேவந்து குந்திக்கொள்கின்றன; அல்லது பிரயாண தினத்தில் மாத விலக்காகி விடுகிறார்கள். எல்லாம் சித்தமாகியும் 'பணம் என்ன செய்யும்—பத்து

விதம் செய்யும்' என்பதுபோல் முக்கியமாய் வேண்டிய பணம் எதிர் பார்த்தபடி நேர்ந்துகொள்ளாமல் அதிலும் தடையாகிறது. 'பணம் பத்தாயிருக்க வேண்டும்—பெண்ணும் முத்தாயிருக்க வேண்டும்—முறையிலேயும் அத்தை மகளாயிருக்கவேண்டும்'—என்று பார்த்தால் எல்லாம் பொருந்தி வருமாவென்று தேறி, கிடைத்ததைச் சரி செய்துகொண்டு பயணத்துக்குத் துவக்குகிறான். தான் போகப்போகும் ஊரிலே தன் வீட்டுக்குள் இருப்பதைநினைத்துக்கொண்டால்கிடைப்பது கஷ்டமாயிற்றே யென்று ஒவ்வொன்றுக்கும் ஓர் முழ நீளம் யோசனைசெய்து பெட்டி நிறைய எடுத்து அடுக்கிவைக்கிறான். கொள்ளாத பாக்கி சாமான்களை வேறொரு மூட்டை கட்டுகிறான். பிறகு மூட்டைகள் பெருத்துவிட்டதேயென்று ஏங்குகிறான். ஒன்று இரண்டு என்று எண்ணுகிறான். புறப்படுகிற நாளையிலேயே எல்லா வேலையும் செய்யத் தொடங்கி, எதுவும் முடியாமல் பயணத்தை மறுநாள் மாற்றுகிறான்.

***

இவன் ஊருக்குப் புறப்படுகிறான் என்று தெரிந்ததும் ஆப்பக்காரி என் கடனுக்கு என்னவழி என்று எதிர்ப்பட்டுக் கொள்ளுகிறாள். தயிர்க்காரி நடுவீட்டில் நின்றுகொள்கிறாள். எண்ணெய்க்காரி வீட்டுக்குள் பெண்களிடம் போய் வெகு பக்குவமாய்த் தன் பாக்கிக்குத் தூபம்போட ஆரம்பிக்கிறாள். இதில் வீட்டுப் பெண்கள் தங்களுக்கு யார் யார் வேண்டுமோ அவர்களின் கடன்களை யெல்லாம் வரிசையாய்ப் பாடம் ஒப்புவிக்கிறார்கள். மாலையிட்ட மனைவி தன்னிடம் அன்று வாங்கிக்கொண்ட பணத்தைத் திருப்பிக்கொடு என்கிறாள். எவ்வளவு செலவுக்குக் கொடுக்கிறீர்கள், போன இடத்திலிருந்து எவ்வளவு பணம் அனுப்புகிறீர்கள், போய்த் திரும்புகையில் என்னென்னவாங்கிவருகிறீர்கள்? என்று வரிசை வரிசையாய்க் கேள்விகளைத் தொடங்குகிறாள். ஊருக்குப் புறப்படுகிறவன் தன் உள் அங்கலாய்ப்பை யாருக்குச் சொல்லி அழுவான்? போன இடத்தில் எப்படியோ என்னவோ, தான் போட்டுக்கொண்டு செல்லும் திட்டம் நிறைவேறுகிறதோ—இல்லையோ, என்று அவன் தத்தளித்துக் கிடக்க, இடையே இவற்றையும் கேட்டுக்கொண்டு, புறப்படுகிற வேளையில் முகச்சுளிப்பு வேண்டாமென்று அடக்கி ஒவ்வொன்றுக்கு ஒவ்வொரு வகையாய் இசைவாய்ச் சொல்லிச் சமாளிக்கிறான். பிரயாணத்துக்கென்று வைத்திருந்த தெல்லாம் சில்லரைக் கடனிலும் செலவிலும் தீர்ந்துபோக, அதன்மேல் கடனுக்கு நாலு பக்கமும் கையை நீட்டுகிறான். வட்டி உயர்வைக் கவனியாமல், 'அம்மைக் குத்தினாலும், பொம்மை குத்தினாலும் வேண்டியது அரிசி' என்று கிடைத்த பணத்தைப் பெறப் பார்க்கிறான். நகைகளையும் அடகு வைக்கிறான். எல்லாம் சேகரமான பின்பு புறப்படும் நேரத்தை நிமிஷம் நிமிஷமாய் எண்ணுகிறான். வீட்டை விட்டுப் பிரிய ஏங்குகிறான். மனைவியின் முகம் பார்க்கிறான், மக்கள் முகம் பார்க்கிறான், வளர்த்தோர் முகம், தாய் முகம் கண்டு கலங்குகிறான். பிறகு புறப்படுகிற வேளையிலே அப்பா, நாயனாவென்று குழந்தைகள் காலைச் சுற்றிக் கொள்கின்றன. அவற்றை யெல்லாம் சாந்தப்படுத்திக் கையிலும் பணம் தந்து கருத்தை மாற்றிப் புறப்படுகையில், கைக் குழந்தை ஓயா அழுகை எடுத்துக் கொள்கிறது. அதை யொரு

வர் பக்கத்து வீட்டுக்குக் கொண்டு போக, எல்லா பிரயாணமும் தயாராகி, 'போய் வருகிறேன், போய் வருகிறேன்' என்று ஒவ்வொருவரிடமும் சொல்லிக்கொண்டு ஒவ்வொரு முகத்தையும் திரும்பிப் பார்த்தபடியே தன் பெட்டி மூட்டைகளோடு வண்டி யேறுகிறன். எல்லோரும் க்ஷேமமாய் இருக்க வேண்டுமென்று ஊரிலுள்ள தெய்வங்களை யெல்லாம் பிரார்த்தித்துக் கொள்கிறன். அடிக்கடி கடிதம் போடும்படி வீட்டாரை அடிக்கடி கேட்டுக் கொள்கிறன். எல்லாம் சரியாய் எடுத்துக் கொண்டோமா வென்று அந்த அவசரத்தில் ஒரு நினைப்பும் நினைத்துக் கொள்கிறன். வண்டியில் ஏறியும் ஏதோ மறந்ததை எடுக்க வருகிறவன் போல் இறங்கி வந்து மற்றொரு தரம் முகங்களைப் பார்த்துக் கொண்டு மீண்டும் வண்டி யேறுகிறன். அப்பால் நல்ல சகுனமாக எதிர்ப்பட வேண்டுமே யென்று அதிலும் ஒரு திகில் கொண்டு தெருவில் செல்வோரை யெல்லாம் கவனிக்கிறன். பிரிவால் உண்டாகிய கண்ணீரையும் தன் கையாலேயே துடைத்துக் கொள்கிறன். வண்டியும் வேகமாகச் சென்று மறைகிறது.

***

ஒருவனாய், ஒண்டியாய் புறப்படுகிற சங்கதி இதுவாக, இனி மனைவி மக்களோடு புறப்படுவோரும் இருக்கிறர்கள். ஊருக்குப் போக வென்று இரவல் நகைகளுடன் தயாராகிறவர்களும் இருக்கிறர்கள். திருவிழாவுக்காக, கலியாணத்துக்காக, விநோதங்களுக்காக, விசேஷங்களுக்காக, வியாபாரங்களுக்காக, கோர்ட் விவகாரங்களுக்காக, இன்னும் ஆயிரம் சங்கதிகளுக்காகவும் புறப்படுவோர்களும் உண்டு. இத்தனை பேர்களும் கூடிக் கடைசியில் ரயிலைத் தான் நம்பிப் புறப்படுகிறர்கள். எத்தனை ரயில்கள் விழுந்தாலும், மோதிக் கொண்டாலும் மறுபடியும் அதிலேயே பிரயாணம் செய்யவேண்டிய கதியில் இருக்கிறர்கள். வீட்டுப் பாடுகள் இவ்வளவு அமக்களத்திலாகிப் புறப்பாடுகள் ஆன பிறகோ உள்ளூர் வண்டிக்காரர்கள் படுத்தும் பாடு தொடங்குகிறது. அவசரத்துக்குத் தருக்தபடி நொண்டி மாடும், ஓடாத கிழக் குதிரை வண்டியும் வெகு சுலபமாய் வாய்த்துக் கொள்ளுகிறது. வண்டியில் ஏறிச் சிறிது தூரம் சென்ற பிறகே அந்த லக்ஷணம் தெரிகிறது. இதென்ன இப்படி மெதுவாய்ப் போகிறதே யென்றால் அந்த நிமிஷத்துக்கு ஒரு அதட்டு அதட்டிவிட்டு வண்டிக்காரன் ஓய்ந்து விடுகிறன். என்ன சொன்னலும் அவன் செவியில் ஏறுவதில்லை. கடைசியில் ரயில்வே ஸ்டேஷன் சேரவும், நான் நீ என்று மூட்டைகளையும் பெட்டிகளையும் தூக்க ஓடி வருகிறர்கள். தூக்குவதற்கு முன்னே கூலி பேசாமல் பிறகு அவ்வளவு இவ்வளவு தர வேண்டுமென்று சண்டை பிடிக்கிறர்கள். இதிலும் சாமான்கள் கொஞ்சம் கனமா யிருந்தாலோ தருகிறயா இல்லையா—எல்லாவற்றையும் எடை போடச் சொல்லவா வென்று நெருக்குகிறர்கள், பயமுறுத்துகிறர்கள். அவர்களுக்கும் தொலைக்க வேண்டியதை அழுது விட்டு டிக்கட்டு வாங்குவதற்கு ஓடுகிறர்கள்!

***

டிக்கட்டு கொடுக்கும் இக்கட்டு ஜன்னலின் கதவு திறக்கப்பட்டால் மோட்ச லோகம் கண்ணுக்குத் தெரிந்த மாதிரி தான். அரைப் பணம் சேவகமானலும் அரண்மனைச் சேவகம் போலாகுமா வென்று தான் தேடிக் கொண்ட

உத்தியோக விமர்சையைக் காட்டிக் கொண்டு உள்ளே ஒருவர் இருவர் தென்படுகிறார்கள். அவர்களுக்குத் தங்கள் ஜனங்களாயிற்றே என்ற எண்ணமே அபூர்வம். வெளியில் ஜனங்கள் மோதிக் கொண்டும் முட்டிக் கொண்டும் படும்பாடு அவர்களுக்குத் தெரிகிறதேயில்லை. அவர்கள் வாக்கு அந்தச் சமயம் தேவ வாக்குதான். இட்டதுசட்டம் தான். இந்த லக்ஷணத்திலே ரூபாய் கொடுத்தால் சில்லரை கிடையாது. துட்டாய்க் கொடுத்தாலும் வாங்குகிறதில்லை. முடுக்காய்க் கேட்டாலோ ரூபாய் செல்லாதென்று பதில்! 1, 2, 3 தம்பிடி பிரயாணிக்குச் சேர வேண்டியதானால் சில்லரையே இருப்பதில்லை. இத்தோடு கால் அணா, அரையணா தங்களுக்குக் கொடுக்கவில்லை யென்று காவலிருப்போர் பிடித்துத் தள்ளுவது ஒரு பக்கம்; போக்கிரிகள் சட்டை சேபியில் கைபோடுவது ஒரு பக்கம்; நான் தொந்தரை யில்லாது டிக்கட்டு வாங்கித் தருகிறேனென்று ஒரு ரூபாய்க்கு அரையணா டிக்கட்டு வாங்கிக் கொடுத்துவிட்டு மறைபவர்கள் ஒரு பக்கம்; டிக்கட்டு வாங்கிக்கொண் டிருக்கையிலேயே பெட்டிகளில் ஒன்றிரண்டு மாயமாகி விடுவது ஒரு பக்கம்; ஒரு அணா, இரண்டணா தட்டிக் கொண்டு போர்ட்டர்கள் சொகுசாய் உள்ளே போய் டிக்கட்டு வாங்கிக் கொடுப்பது ஒரு பக்கம்; 'பரம்பரை யாண்டியோ பஞ்சத்துக் காண்டியோ' என்று 'ஈஸ் பீஸ் இங்கிலீஷ்' பேசக்கற்றுக்கொண்டு காதில் கடுக்கனின் ஜ்வலிப்போடு கால்சட்டை—மேஜோடு — பூட்சு போட்டுக் கொண்டு காலை மிதித்துத் துவைக்கும் நாகரீக டம்பர்களுடைய கோஷ்டம் ஒரு பக்கம்!

***

இத்தனை யவதியோடு டிக்கட்டுகளை வாங்கிக் கையில் பிடித்துக் கொண்டு, தலைக் குட்டை யொரு பக்கம், மேல் அங்க வஸ்திரம் வேறொரு பக்கம், தடி—சோடு—குடை யொரு பக்கம் போக, மற்றவர் காலில் தன் துணி சிக்கிக் கொண்டு மிதிபட, வெயர்த்து—வெந்து — விரிந்து — சொக்காய்—நனைந்து—குண்டி நனைந்து—அதுவும் நனைந்து—ஆவி யொடுங்கி—மூச்சுப் பெருகி—அப்பாடா—அய்யாடா—போதுமடா வென்று டிக்கட் ஜன்னலைவிட்டு வெளியில் வந்து, பெண்சாதி தாயார்—மாமியார்—ஆண் பெண்—5—வயது 4—வயது 2—1 ஆறுமாசம் 1-ஒருமாசம் குழந்தைகளை இழுத்துக் கொண்டு, சொம்பு – தவலை—பெட்டி—பேழை – படுக்கை—திண்டு — தலையணைகளை வாரிக் கொண்டு வண்டியேறப் போனால், 'ஆர் ஓய்! எத்தனை சாமான்—உங்கப்பன் வீட்டு ரயில் சும்மா வந்ததா வென்று அந்தண்டை ஒரு 'போர்ட்டர்'—இந்தண்டை யொரு 'போர்ட்டர்' அதட்ட மிரட்ட பிடிக்க இழுக்க மல்லு கொடுத்து, எடைபோடத் தராசண்டை போய் ஒவ்வொரு சாமானை நிறுக்க, அங்கே அதற்கு சார்ஜ் கொடுக்கையில், முதல் மணியோ, கடைசி மணியோ, எந்த மணியோசையோ ஒன்று, எதற்காகவோ எந்த 'இஞ்சினோ' ஊதிய 'பிகில்' ஓசை யொன்று காதில் விழ, கெட்டேன், பிழைத்தேன் என்று அருண்டு மிரண்டு காலி வண்டியைப் பார்க்க நேரமில்லாமல், உள்ளே இருப்பவர் யார்—எத்தனை பேர் இருக்கிறார்கள்—இடம் இருக்கிறதா வென்று பார்க்கக் கண்கள் இருட்டிப் போய், 'கழுதை பாரம் வண்ணானுக்கு என்ன தெரியும்' என்று முன்னையே குந்த—

சாய - படுக்க - நிமிற-இடமில்லாது அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் பிள்ளை - குட்டி - பெண்டுகள் - நஞ்சான்கள் - குஞ்சான்கள் மேல் போய் விழ, அவர்கள் பெட்டி திறக்கப்பட்ட பாம்பு போல் புஸ்ஸென்று எழும்பி சீத்—பூத் என்று சீறி விழ, அத்தேறி என்று சாயபு ஒரு பக்கம் துள்ள, இதி ஏமி எளவு—அப்பா இச்சிந்தி இச்சி ஈ லச்சை படே தானிக்கி * * * என்று தெலுங்குப் பெண் பிள்ளை வாயால் மொணர, ஒருவரை யொருவர் கழுத்தைக் கட்டிக்கொண்டு சாமான்களெல்லாம் பந்துகளாய்ப் பறக்க, அந்த மூட்டையை ஏற்றவில்லை—இந்த மூட்டையைக் கீழே வைத்துவிட்டேன் என்று ஆரவாரிக்க, இவ்வளவில் வண்டியும் புறப்படுவதற்கு மணி யடித்து அசைகிறது. இதன் நடுவே, பால் காப்பிவடை முறுக்கு சுண்டல், மோர் மோரு என்ற வியாபாரங்கள் வேறே நடக்க, தாகத்துக்கு ஜலம் என்று அலறும் போதெல்லாம் எதுவும் வாராமல் சோடாபுட்டிகளே கண்ணுக்குத் தென்படுகிறது. நல்ல வண்டியைச் சாவி போட்டுத் திறந்து ஏற்றினேன் என்று போர்ட்டர் துட்டுக்கு ஒரு பக்கம் தொங்கிக் கீச்சு என்று கத்துகிறான். ஆச்சுது நேரம் என்று வண்டியும் புறப்பட்டு விட, அச்சமயத்தில் வண்டி யேற்ற வந்தவர்களுக்குப் பிரயாணம் சொல்லிக் கொள்வது ஒரு பக்கம், கண்ணீரை விட்டுத் துடைத்துக் கொள்வது ஒரு பக்கம், ஏங்கி வீங்கி பரஸ்பரம் முகத்தைப் பார்த்துக்கொண்டு அங்கலாய்ப்பது ஒரு பக்கம், சந்தோஷமாய் வழி யனுப்புவது ஒரு பக்கமாக இத்தனைக் கூத்துகளும் நடந்து ரயிலும் ஸ்டேஷனை விட்டு வெளியேறுகிறது.

***

இனி வண்டிக்குள்ளோ 'யானைக்கு ஒரு காலம் பூனைக்கு ஒரு காலம்' என்று ஏற்கனவே தகுந்த இடத்தில் அமர்ந்து கொண்டவர்கள், 'உண்டவன் உண்டு போக என் தலைப்பூண்டு நோகிறதா' என்று தங்கள் சௌகரியத்தை மட்டும் பார்த்துக்கொண்டு பரப்பியபடி காலை நீட்டியும் படுத்தும் கொள்ளுகிறார்கள். 'கோட்டையிலே பெண் பிறந்தாலும் போட்ட புள்ளி தப்பாது' என்று, 'பூனைபோன்ற புருடனுக்கு வாழ்க்கைப்பட்ட சுண்டெலிப் பெண்போல்' வலியாருக்கு எளியார் அடங்கிப் பல்லைக் காட்டிக் கெஞ்சி மன்றாடி சந்து பொந்து பார்த்து உட்கார்ந்து கொள்ள, அதற்கு அடுத்த ஸ்டேஷனிலும் பிரயாணிகள் பெரும் கும்பலாய்க் காத்திருந்து, ஏற்கனவே இருப்போர் மீது விழுந்து புளிமூட்டைகளாக்க, ரெயில்வே பிரயாணம் செய்யும் இந்த அநுபவ திருஷ்டாந்தத்தை யறியாதவர்கள் ஒருவரு மிரார். இன்னும் இப்பொழுது அறைக்கு எட்டு ஜனங்கள் அடங்குகிற வண்டி போய்விட்டதில், காலை நீட்டி படுக்கவும் வழியின்றி, ஒரு அறையில் கூட்ட மானாலும், மற்றொரு அறையில் சௌகரியமாயிருந்ததும் போய், ஒரே நீள வண்டியானதால், எவ்விடத்திலாவது இடம் அகப்படுமெனக் கடைசி வரையிலும் போய் பாலைவனத்தில் தண்ணீர்க்கு அலைந்த மான்கள் போல் தவிக்கிறார்கள். இடம் இருந்தாலும் படுத்து சுகம் அநுபவிக்க வசதியில்லாமல் ஆள் நிகளத்துக்கு அரை நிகளம் பெஞ்சுகள் ஏற்பட்டு விட்டதில் இன்னும் பெரிய தொல்லை! இவைகளுடன் வண்டியில் உள்ள அசங்கிதங்களும் நாற்றங்களும் மூட்டைப்பூச்சியின் தினவுகளும் வேறே!!

***

இவ்வளவு சுகமான வண்டிக்குள் இனி நடக்கிற சங்கதிகளோ இன்னும் வேடிக்கை! ஒருவருக்கொருவர் க்ஷேமம் விசாரித்துக் கொள்ளுகிறார்கள். நீங்கள் எந்த ஊருக்குப் போகிறது என்று வெகு பிரியமாய்க் கேட்கிறார்கள். இந்தப் பிரிய விசாரிப்பு, அவர்கள் எப்போது வண்டியை விட்டு இறங்கித் தொலைவார்கள், நாம் எப்போது அந்த இடத்தில் ஹாயியாக உட்காரலாம் என்ற உள்நோக்குடனேயே தவிர உருக்கத்தாலல்ல. இதன் நடுவில் ஒருவன் வெற்றிலைப் பெட்டியைத் திறக்க, மற்றவர்கள் இலவசத்திலே தங்கள் வாயை மெல்ல வழி தேட, வேறொருவன் பொடி போட, இன்னொருவன் இரவல் பொடி கேட்க, இடையே பிச்சைக்காரர்களின் தொல்லை சூழ, இரக்கத்துக்குச் சிலரும் டம்பத்துக்குச் சிலரும் பிச்சையிட, நடுவே விளம்பரங்கள்—மருந்துகள் புகுந்து வியாபாரங்கள் நடக்க, ஒவ்வொரு ஸ்டேஷனிலும் கண்டது வாங்கி வயிற்றை நிரப்ப, அதுவே சமயமென்று புகை குடிப்போர் மற்றொரு பக்கம் 'குப் குப்' என்று புகை விட, அத் துர்வாடை சகியாமல் சிலர் மூக்கைப் பிடித்துக் கொள்ள, சிலர் பெண்களைத் திரும்பித் திரும்பிப் பார்க்க, பெண்களோ தங்களுடன் பக்கத்திலிருக்கும் ஸ்திரீகளுடன் ஊர் கதையை வளர்க்க, அந்த ஊர் சங்கதி—இந்த ஊர் சங்கதிகளென்று ஓட்டை வாயர்கள் தங்களின் வாயை மெல்ல, புத்திமான்கள் இவற்றில் எதிலும் கலக்காமல் தங்கள் யோசனையிலும், பத்திரிகைப் புஸ்தகப் பார்வையிலும் தங்கள் நேரத்தைப் போக்க, வண்டியின் ஓரத்து முதலில் உட்கார்ந்திருப்போன் ஒய்யாரமாய்ச் சாய்ந்து நிற்க, மற்றவர்கள் முதுகு வலி எடுத்துக்கொண்டு நோக, இதன் மத்தியில் டிக்கட் பரிசோதகர் தனது உத்தியோகத் திறமையைக் காட்ட, சிலர் வண்டி நிற்கும் போதெல்லாம் இறங்கி ஒய்யார நடை நடந்துவிட்டு ஏற, கடைசியில் இறங்கவேண்டிய ஸ்டேஷன் வந்ததும், 'அவசரக்காரனுக்குப் புத்தி மட்டு' என்பதாய் சாமான்கள் சிலதை எடுத்துக்கொண்டும் சிலவற்றை மறந்துவிட்டும் ஆத்திரத்துடன் ஒரே கதவின் அருகேபோய் எல்லோரும் மோதிக்கொள்ள, அப்பால் முட்டி மோதிக்கொண்டு இறங்குகையில் வண்டியில் ஏற வருவோர் எதிரே தள்ள, பாடான பாடு பட்டு இறங்கிய பிறகு வண்டியில் மறந்து வைத்துவிட்டதாய் மறுபடியும் ஏறி எடுக்க, பிறகு வீடுபோய்ச் சேர்ந்து, இலையில் அன்னம் புசிக்கையில் ஊறுகாய்க் கேட்டு, அடடா ஊறுகாயை வண்டியில் வைத்துவிட்டு வந்து விட்டோமே யென்று விரலைக் கடித்துக் கொள்ள—இவ்வளவும் இன்னும் உள்ள தவிப்பு—பாதவிப்புகளோடு ரயில் பிரயாண தமாஷ் வேடிக்கையிலும் கன வேடிக்கையாய், கண்ராவியிலும் பெரிய கண்ராவியாய் முடிந்துத் தீருகிறது.

***

ரயில் வண்டியில் ஏறியவன் எப்படியும் இறங்குவான் என்கிற சங்கதியில், பிறந்தவன் எவ்விதமும் மரிப்பான் என்கிற ஞானத்தையும் காண்கிறோம். உலகமே சந்தையிற் கூட்டம் என்பதை ரயில்வண்டிக் கூட்டம் நன்றாய் எடுத்துக் காட்டுகிறது. அந்தந்த ஸ்டேஷன்கள் வந்ததும் அவரவர்கள் இறங்கி மறைவதுபோல, அவரவர்களுக்குக் குறித்த ஆயுளின் எல்லை நெருங்கியதும் உலகை விட்டுப் போய்விடுகிறார்கள் என்ற தத்துவத்தையும் இது நன்கு போதிக்கிறது. கடை

சியாக, ரயில்வண்டியே அரசாங்கத்துக்குப் பெரிய பலம்—அதுவே கனத்த ராஜதந்திர நிபுணத்வம் என்பதையும் விகடன் சொல்லாமற் சொல்லிக் காட்டித் தெரிவித்து விட்டேன். ராம்! ராம்! சுபம்! சு!! சுவாஹா!!!

---

## பெண்கள் பக்கம்

### சந்திராவும் சரஸ்வதியும்

(94-ம் பக்கத் தொடர்ச்சி)

சரஸ்வதி :—நேற்று சொன்னது போல் வந்து விட்டாயே சந்திரா! வா, வா. இந்தப் பக்கம் நீயாகவே எப்போது வருவாயோ வென்று காத்திருந்தேன். பிரதி நித்யமும் உன்னுடன் கூட்டம் போடுகிறவர்களை யெல்லாம் ஒரு நிமிஷத்தில் ஒதுக்கி உதறி விட்டு அவ்வளவுக்குப் பக்குவம் பெற்று விட்டாயே. பெண்கள் மட்டும் சரியான விதமாகப் பயிற்சி செய்யப் பட்டால், இப்போது புருஷர்கள் தேசத்துக்கு உழைப்பதைக் காட்டிலும் ஆயிரம் பங்கு அதிகமாய்ச் செய்ய வல்லவர்களாவார்கள்.

சந்திரா :—என்னவோ நீ உளறுகிறாய். நாம் என்ன 'பெண் கட்டை' கள் தானே; நமக்கு என்ன சுதந்தர மிருக்கிறது? நம் இஷ்டப்படி நம்மை ஓரிடத்திற்குப் போக வர நமது வீட்டில் விடுகிறார்களா? எப்போது பார்த்தாலும் நம்மை அடக்கி அடிமைகள் போல் நடத்துவதே ஆடவர்களுக்கு இயல்பா யிருக்கின்றது. இந்த லக்ஷணத்தில் நீ என்னென்னவோ பெருமையைக் கொட்டி யளக்கிறாய்.

சரஸ்வதி :—ஆடவர்களுக்கும் பெண்மணிகளுக்கும் என்று பெரியோர்கள் சில திட்டங்கள் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தின்படி அவரவர்கள் ஒரு குறித்த எல்லைக்கு உட்பட்டு நடக்கவேண்டியது கிரமம். அதுவே க்ஷேம மார்க்கம். நம்மிலும் பெரியவர்களாய் நமக்கு முன் பிறந்து உலகத்தில் பல வகையிலும் அடிபட்டு அநுபவம் கொண்டிருக்கிற பூமான்கள் நமது க்ஷேமத்துக்கே நம்மைச் சிற்சில விஷயங்களில் தடை செய்கிறார்கள். உலகத்தைப்பற்றி நமக்கு என்ன அநுபவம் இருக்கிறது? எந்த அல்பத்தையும் நம்பி விடுகிறோம். எவர்களையும் வெள்ளை மனம் என்று எண்ணி விடுகிறோம். நமது மெல்லிய ஹிருதயம் கபட மறியாமல் எதையும் உண்மையென்று நினைக்க வைத்து விடுகிறது. ஆகவே, நாம் எந்த மோசப் படுகுழிகளிலும் விழாதிருக்க நமது பெரியோர்களின் வார்த்தைகளைப் பொன்போல் போற்றி நடந்து கொள்ளவேண்டி யிருக்கிறது. பெண் வர்க்கத்துள்ளும் சில மூர்க்க ஸ்திரீகள் இருப்பதுபோல், புருஷ வர்க்கத்திலும் பெண்களைத் தாழ்வாக நினைப்பவர்கள் இருக்கிறார்கள்தான். நல்லது கெட்டது எதிலும் உண்டு. குணதோஷங்கள் கலவாத வஸ்துக்கள் உலகில் இல்லை.

சந்திரா :—பெண்களுக்குச் சரியானபடி பயிற்சி செய்ய வேண்டுமென்ருயே, அது என்ன பயிற்சி?

சரஸ்வதி :—தற்போது பாடசாலைகளில் போதிக்கப்படும் கல்வி ஆடவர்களுக்காகட்டும், பெண்களுக்காகட்டும், அவர்களின் வாழ்க்கை ரீதிக்கு ஏற்ற விதமாக இருக்கவில்லை. ஆடவர்களின் கல்வி குமாஸ்தா உத்தியோகங்களுக்கு ஏற்றதாயுள்ளதே யன்றி, வேறு வகையில் அவர்கள் ஸம்பாத்திய ஜீவனம் செய்வதற்குத் தகுந்ததாய் இருக்கவில்லை. பெண்களுக்குப் போதிக்கப்படும் கல்வியோ அவர்கள் பிற்காலம் வகிக்கப் புகும் குடும்ப வாழ்க்கைக்கு ஏற்றதாய் இருக்கவில்லை. பெண்கள் பாடசாலையில் பயிலுகிற சொற்ப காலத்துக்குள்ளாகவே, புஸ்தக வாசிப்பில் ருசி பிறக்கும்படியான ரீதியில் சுருக்கமான திறமையோடும் கூடிய போதனு முறையாக இல்லை. குடும்ப வாழ்வுக்கான எந்தப் பாடமும் அவர்கள் படிக்கும் புஸ்தகத்தில் கிடையாது. பாடசாலையை விட்டுவிட்ட பிறகு பெண்கள் ஏதும் தெரியாதவர்களாய் இருக்கிருர்களே தவிர, வித்தையில் ஒரு பக்குவம் அடைந்தவர்களாகக் காணப்படவில்லை.

சந்திரா :—பெண் மக்களின் வித்தியாபி விருத்திக்கு வேண்டிய அளவு அவகாசம் கொடாமல், படிப்பது அவசியம், அவசியம் என்று ஓயாமல் எடுத்துரைத்து வருவதனுல் மட்டும் என்ன பயன் உண்டாகப்போகிறது? இதில் சீர்திருத்தம் ஏற்படுமளவும் நம் தேச மாதர்கள் முன்னுக்கு வந்து விளங்குதலரிது. பொதுவாகவே பெண் கல்விக்குள்ள பிணிகள் பல. பால்ய விவாகம் ஜனஸமூகத்தின் வேரைத் தின்று விடுகிறது; அத்துடன் வித்யா நாசமும் விளைவிக்கின்றது.

சரஸ்வதி :—நீ சொல்வதும் சரியே. அதனுல் தான் பெண்களுக்குள் காற்படிப்பும், அரைப்படிப்புமா யிருக்கிறது. அல்லியரசாணி மாலை படித்த அம்பாள் அரை வித்வாஞக மதிக்கப்படுகின்ருள். ஒரு தேசத்தினது உயர்வு பெண்களைப் பொறுத்திருக்கின்றது. பெண்களின் உயர்வு கல்வியையும் ஞானத்தையும், பொறுத்திருக்கின்றது. அக்கல்வியும், ஞானமும் தத்தம் மாதானுஸார ரீதியாக ஸன்மார்க்கத்தில் பிந்திய வாழ்க்கைக்கேற்ற வகையில் போதிக்கப்பட்டா லொழிய சிலாக்கிய மடையமாட்டா. சிறு பிராயத்தில் மனமானது போதனைக்கு உட்பட்டு வசமாயிருக்கிறபடியால், அக்காலத்தில் எந்த விதமான வித்தையை அப்யஸிக்கிருேமோ அதன் தோரணையே வாழ்நாளளவும் தொடருகின்றது. ஆகையால் இன்ன விதமாய் வித்தியாப்யாஸம் செய்விக்க வேண்டுமென்கிற விஷயத்தில் கவலையும் பொறுப்பும் கொண்டு புது விதமாய் நலம் பயக்கத்தக்க ஒரு முறையை நிர்ணயிக்கவேண்டும்.

சந்திரா :—என்ன விதமாக வித்தியாப்யாஸம் செய்விக்கவேண்டுமென்கிருய்?

சரஸ்வதி :—வித்யாப்யாஸம் என்பது நான்கு வகைப்படும். அவையாவன :—தேகப்பயிற்சி, மனப்பயிற்சி, விவேகம், ஆத்ம ஞானம். இவற்றில் ஒன்றைவிட ஒன்று உயர்வு பெற்றுள்ளது. இந்த நான்கும் சேர்ந்தால் அல்லாமல் வித்யாப்யாஸம் குறைவுபடும். இந்த நான்கில் யாதாயினும் ஒன்றில்லாவிட்டாலும் பிரயோஜனப்படாது. முதலாவது தேகப் பயிற்சி

மிக முக்கியமானது. தேக சௌக்கியமில்லாவிடில் மற்ற மூன்று விதப் பயிற்சியும் சோர்வடையும். இரண்டாவது மனப் பயிற்சி; அதாவது மனது அதிக சூக்ஷ்மமாய் வேலை செய்யும் சாமர்த்தியம். லோக வாடிக்கையில் இதை யுக்தி என்பார்கள். ஊகம் என்றும் சொல்லப்படும். இப்படிப்பட்ட ஊகம் என்னும் சக்தி அனைவராலும் சம்பாதிக்கவேண்டிய பொருளாகவே இருந்தாலும், அது மட்டும் போதாது. அது சில சமயத்தில் விபரீதத்தில் கொண்டு போய்ச் சேர்க்கும். வீட்டுத் தலைவனுக்குத் தெரியாமல் பணம் சேர்த்தல், தன் தவறுகளைச் சாமர்த்தியமாய் மறைக்கப் பார்த்தல், பொய் சிருஷ்டனை முதலிய காரியங்களை ஒரு பெண் எவ்வளவு யுக்தியாய்ச் செய் தாலும் அதை மெச்சுகிறவர்கள் யார்? அக்கிரமமான யுக்தி ஒருபோதும் கூடாது. ஆகையால் மூன்றாவது பயிற்சியும் வேண்டும். அதாவது விவேகம்; தர்மா தர்மத்தின் பகுத்தறிவு. இதை மனஸாக்ஷியின் எல்லை யென்றும் சொல்லலாம். ஸகல தர்மங்களையும் அறிந்திருந்தாலும் கடைசி யாக ஆத்ம ஞானமும் தொடராவிடில் பயிற்சி அனைத்தும் பாழாய் விடும்; எனவே ஆத்ம ஞானமும் அவசியம். ஆக, இந்நான்கும் சேர்ந்து ஏற்பட் டால் தான் வித்தையானது சோபிக்கும்.

சந்திரா :—வாஸ்தவம் தான். இத்தனைத் திறமையான கல்வியை நான்காம், ஐந்தாம் வகுப்புக்குள் படிப்பை முடித்து வீட்டில் உட்கார்ந்து விடுகிற பெண்களுக்கு எப்படித்தான் போதிப்பது? 12, 13-வயதுக்குள் ளாகவே ஸ்திரீ வித்யாப்யாஸம் முடிந்து விடுகிறது. இதற்குள் எவ்வளவு தான் படிக்கக்கூடும்?

சரஸ்வதி :—பெண்கள், பாடசாலையில் படிக்கும் காலம் மிகச்சொற்பமா யிருப்பதினால் தான், மேற்சொன்ன நான்கு அமிஸங்களும் கலந்ததான முறையில் புது வழியில் போதனை செய்யப்படவேண்டு மென்கிறேன். பழய நாளில் 'மெட்ரிகுலேஷன்' பரீக்ஷையில் தேர்ந்த ஆண் மக்கள் இந்தக் காலத் துப் பி. ஏ படிப்புக்கும் மேலான பயிற்சியைப் பெற்றிருந்தார்கள் என்று சொல்லக் கேட்கிறோமல்லவா? பழங்காலத்தில் "ஜன விநோதினி" என்று ஒரு மாதப் பத்திரிகை நடைபெற்றது. அப்பத்திரிகையிலிருந்த உயர்தர மான விஷயங்களை யெல்லாம் ஒரு சேரத்திரட்டிப் பாடசாலைப் புஸ்தகங்க ளாக்கினர். ஆங்கிலப் புஸ்தகங்களும் உயர்தரமாய் விளங்கின. பிறகு அப் புஸ்தகங்களை என்ன காரணத்தாலோ எடுத்து விட்டுப் புதுப்புஸ்தகங்களை பாடநூல்களாக ஏற்படுத்தினர். இப்புது நூல்களை எழுதியவர்களும், அந்தப் பழய புஸ்தகங்களிலிருந்தும், ஜனவிநோதினிப் பத்திரிகையிலிருந்தும் பலவற்றைப் பெயர்த்துத் தங்கள் நூல்களில் சேர்த்திருக்கிறார்களானாலும், பழய பாட நூல்களின் பெருமை இப்புதிய பாட புஸ்தகங்களுக்கு வராது. முதலில் இப்போது தமிழ் இலக்கண நூலையே போதிப்பதில்லை. 'போப் பையர் இலக்கணம்' என்று ஒரு அரிய சுலப இலக்கண நூல் முன்பு இருந் தது. அது ஒன்றை மட்டும் நன்றாகக் கற்று விட்டால் இலக்கணத்தில் பாதி வந்தது போல் நினைத்துக்கொள்ளலாம். எவ்வளவோ நல்ல புஸ்தகங் கள் இப்போது மறைந்து போய், கால் இல்லாதவன் நொண்டி, கண் இல் லாதவன் குருடன், பால் வெள்ளை நிறமாயிருக்கும், என்பதான பாடங் களையே போதிக்கப்படுகின்றன. இவற்றைப் படித்துவிட்டு வயது பன்னி ரண்டானதும் நமது சிறுமிகள் வீட்டில் நின்று விடுகிறார்கள். இந்த

லக்ஷணத்தில் பூரணமான படிப்பை எங்கே பெறுகிறது? படித்து முன்னுக்கு வருவதும் எவ்வாறு?

சந்திரா:—ஸ்திரீ வித்யாப்யாஸம் பெருகிப் பலனடைவதற்கு வழியில்லா விட்டாலும், நாம் நமது சொந்த முயற்சியில் பிரயாஸை எடுத்துக் கொண்டால் ஒருவாறு கூடி வரும் என்று எனக்குத் தோன்றுகிறது. நமது ஆடவர்கள் ஒன்றுகூடி எந்த நாளைக்குக் கல்வி முறையைத் திருத்தப் போகிறார்கள்? எப்போது புதுக் கல்வியை நிர்ணயம் செய்யப்போகிறார்கள்? அது இன்றைக்கு நாளைக்கு நடக்கும் சங்கதியல்ல. ஏதோ பாடசாலையில் அக்ஷரஞானம் பெற்று விடுகிறோம். ஒரு புஸ்தகத்தை எடுத்ததும் வாசிக்கும்படியான அறிவு நமக்கு உண்டாய் விடுகிறது. அவ்வளவில் பாடசாலையை நாம் விட்டு விடவேண்டிய நிர்ப்பந்தம் சம்பவிப்பதால், நமக்குக் கிடைத்த பிராப்தம் அவ்வளவு தான் என்று இருந்து விடாமல், வீட்டிலும் நமது படிப்பைத் தொடங்கிக் கொள்வோமானால் சில வருஷங்களில் நம்மை அது வெகு தேர்ச்சியில் கொண்டு வந்து விடும் என்று எனக்குப் படுகிறது.

சாரஸ்வதி:—நான் கல்வி கற்ற விதமும் அவ்வாறு தான். பாடசாலையில் பெண்கள் கல்வி கொஞ்சம். வீட்டில் அவர்கள் தங்களின் பாடசாலைப் படிப்பை வளர்த்து விருத்தி செய்தால் தான் படித்த பெண் என்று பேர் பெற முடியும். இப்படிப் பார்த்தோமானால் பாடசாலைப் படிப்பை ஒரு கட்டிடத்துக்கான அஸ்திவாரமாகவும், வீட்டில் இனித் தொடங்கிக் கற்கும் கல்வியை அந்த அஸ்திவாரத்தின்மேல் கட்டப்படும் பெரிய மாளிகையாகவும் கொள்ளலாம். படிப்பில் மட்டும் ருசி பிறந்து விட்டால், பிறகு காலமுழுதும் படிப்பதிலேயே புத்தி சென்று விடும். சிறு சிறு கதைகள் படிப்பிலே ருசி பிறப்பதற்கு நல்ல வழி காட்டும். தக்காணத்துப் பூர்வ கதைகள், திராவிட பூர்வகாலக் கதைகள், திராவிட மத்தியகாலக் கதைகள், தென்னாலிராமன் கதை, விக்கிரமாதித்தன் கதை, இப்புஸ்தகங்கள், வெகு சுலபமும் தெளிவும் நல்ல நீதியைப் போதிப்பவைகளுமாகவும் இருப்பதால் முதலில் இவற்றைப் படித்தால் புஸ்தக வாசிப்பில் நல்ல ருசி பிறக்கும். தற்காலத்து நாகரீகர்கள் தென்னாலிராமன் கதையா என்று பழிப்பார்கள். அந்தக் கதையிலுள்ள நகைப்புச் சுவை, சாதுர்யம், விவேகம், யுக்தி போதனைகளை உற்று நோக்கினால் அவற்றின் அருமை புலப்படும். மேல்நாட்டு ஆங்கில மொழி பெயர்ப்புகளும் வீண் வளர்ப்புகளுமான ஆபாஸ நாவல்களை விட விக்கிரமாதித்தன் கதை எவ்வளவோ மேல் என்று சொல்லலாம். அவைகள் தமிழ் நாட்டின் பழய பொக்கிஷங்களாகும். இவற்றைப் படித்துப் புஸ்தக வாசிப்பில் ஆசையுண்டானதும், உத்தமர்களால் இயற்றப்பட்ட நன்னெறித் திறன் ஊட்டும் உத்தம நாவல்களை வாசிக்கலாம். அது அறிவில் தேறச் செய்து லோகானுபவத்தை யூட்டும். எத்தனை நாவல்களை-கதைகளைப் படித்தாலும், நீதி நூல்களை வாசிப்பதிலுள்ள அறிவுத் தெளிவு இவற்றால் ஏற்படாது. ஆதலின் "குடும்ப ஸம்ரக்ஷணி," வேத நாயகம் பிள்ளை எழுதிய பெண் கல்வி போன்ற நூல்களையும் வாசித்துக் கலா ஞானத்தை விருத்திசெய்து கொள்ள வேண்டும். இத்துடன் பாரதம், இராமாயணம், மற்றும் புராண நூல்களையும் வாசித்து விட்டால் பெரிய பண்டிதையாகி விடலாம். இவ்விதமாகப் புஸ்தகங்களைப் படிப்பதுடன், சமாசாரப் பத்திரிகைகளையும்

வாசிக்கப் பழகவேண்டும். முதலில் ஒரு வாரப் பத்திரிகையும் இரண்டொரு மாதப் பத்திரிகைகளையும் தருவித்துக் கொண்டால் போதும். அவற்றில் பயிற்சி யுண்டானதும் தங்களின் சக்திக்குத் தகுந்தபடி இன்னும் பல பத்திரிகைகளையும், தினசரிப் பத்திரிகைகளையும் தருவித்து வாசிக்கலாம். பத்திரிகைகள் லோக ஞானத்தை நாளடைவில் பெருக்கி எல்லா விஷயங்களையும் அறிந்தவர்களாகும்படி செய்துவிடும். பத்திரிகைகளை விடாமல் படித்து வரும் பெண்மணியுடன் எதிர்த்து வாதாடவோ, தர்க்கத்துக்கு நிற்கவோ, அவளை வெல்லவோ ஒருபோதும் முடியாது. இவ்விதமாக வரிசைக் கிரமமாக ஒவ்வொன்றாய்ப் படித்து முடிவில் பத்திரிகைகளை வாசிக்கும் ஞானமும் பெற்று விட்டால், கடைசி காலம் வரைக்கும் பெண்மணிகளும், கல்வியில் விருப்ப மேலிட்டவர்களாகி எப்போது பார்த்தாலும் புஸ்தகமும் கையுமாகவே இருக்கத் தொடங்கி விடுவார்கள். இப்படி நமது இந்தியா தேசத்துப் பெண்கள் அனைவரும் வித்தியாவதிகளாய் விட்டால், அவர்களை நம்பி யிருக்கிற குடும்பங்களும், அவர்களின் உதவிக்கு எதிர் பார்த்து நிற்கிற தேசமும் முன்னுக்கு வந்து விளங்கக் கேட்பானேன்?

சந்திரா :—நமது கல்வி முறையில் எத்தனையோ குற்றங்கள் இருக்கின்றன வென்று வெறுமனே சபையேறி வாய் ஓயப் பேசிக்கொண்டு, அவற்றை நீக்க வழிதேடாமல் நம்மவர்கள் இருக்கிற நிலையில், நாம் முன்னுக்கு வருவதற்கு மார்க்கம் நமது வீட்டிலிருந்து நமக்கு நாமே கற்றுக் கொள்ளும் கல்வியால் தான் ஏற்படவேண்டும். அதற்கு நீ அக்கல்வியைத் தொடங்கும்வழி இவ்வாறென்று தெரிவித்திருக்கும் குறிப்பு மிக்க உபயோக முள்ளதாம். தானே வருந்திக் கற்கும் கல்வியிலுள்ள விருத்தி, பிறர் போதிக்கும் கல்வியால் ஏற்படாது. பிறர் போதிப்பினும், பிறகு அவற்றைத் தானே வருந்திக் கற்காவிடில் அது காட்டில் எரியும் நிலவைப் போல் வீணாகிவிடும்.

சரஸ்வதி :—ஒவ்வொரு ஸமூகத்தாரும் தங்களைத் தாங்களே தட்டி எழுப்பிக்கொள்ள வேண்டுமேயன்றி, பிறர் தட்டி யெழுப்புவார்களென்று எதிர்பார்த்தல் மௌடீகம். அந்தந்த வகுப்பாரும் தங்களைத் தாங்களே கைதூக்கி விட்டுக்கொள்ள வேண்டுமே தவிர, மற்றவர்கள் தங்களைக் கைதூக்கி விடுவார்களென்று காத்திருந்தால் அது என்றைக்கும் நிறைவேற மாட்டாது. அதுபோல் பெண்மணிகள் தங்களைத் தாங்களே பக்குவப்படுத்திக் கொள்ளவேண்டுமே யன்றி, மற்றவர்களை எதிர்பார்த்துக் காலம் போக்குவது சரியல்ல. ஒரு வீட்டில் தந்தை தன் குமாரத்திக்குக் கல்வி போதிக்கும்வரை தாயானவள் காத்திராமல் தானே தன் புத்திரிக்குப் படிப்பிக்கும்படியான புது உணர்ச்சி உண்டாகப் பெறவேண்டும். வீட்டில் கற்கும் கல்வி எவ்வளவு தூரம் முன்னுக்குக் கொண்டுவந்து எவ்வளவு வேலை செய்யவைக்கும் என்பது இப்போது உனக்குத் தெரிகிறதா? அப்படியிருக்க, நீ இதுவரையில் அதற்கு முயற்சியின்றி வீண்காலம் போக்கியது எவ்வளவு துக்ககரமான விஷயம்? பயனற்றுக் கழிந்த நாட்கள் இனித் திரும்பி வருமா?

சந்திரா :—போனதை நினைக்கிறவள் புத்தி கெட்டவள். இனி நடப்பதைப் பற்றி யோசிப்போம். இப்போது புதிதாக வெளிவந்திருக்கும்

"ஆநந்த குணபோதினி" ப் பத்திரிகையை எல்லோரும் சிலாக்கியமாகச் சொல்லுகிறார்கள். அதை என் பெயருக்கே நாளைக்கு ஒன்று தருவிக்கப் போகிறேன். அதைத் தொடர்ந்து படித்துவரப் போகிறேன். பத்திரிகா ஞானத்தை எப்படி யடைவது என்பதைப் பற்றி அடுத்தத் தடவை நான் வரும்போது நீ எனக்குச் சொல்லவேண்டும்.

*சரஸ்வதி :*—பத்திரிகா ஞானம் என்பது ஒரு பெரிய விஷயம். ஆயினும் அதில் சுலபமாய்ப் பயிற்சி பெறக்கூடிய மார்க்கத்தை அடுத்த தடவை சொல்லுகிறேன். மணியும் ஐந்தாகப் போகிறது.

*சந்திரா :*—ஆமாம், போய்வருகிறேன். இன்று உன்னோடு பேசி அநுபவித்த இன்பம் படியாப் பெண்களின் விருதா கூட்டத்திலே நான் பெற முடியாது. நாளை ஞாயிற்றுக்கிழமை, 'அவர்' வீட்டிலேயே இருப்பார். உன்னிடம் வந்து போனதை அவரிடமும் தெரிவிக்கிறேன். நாளை வரமுடியாது. திங்கட்கிழமை வருகிறேன்.

(தொடர்ந்து வரும்.)

---

## மறைவிலிருந்து தூண்டுகை.

நீ ராமனிடம் வேண்டியவரையில் திட்டிக் கலகம் செய். அதை ராமன் என்னிடம் சொல்ல ரோஷத்தோடும் வருவான்; எல்லா சங்கதிகளுக்கும் என்னிடம் தான் ராமன் வரவேண்டும். அப்போது 'உன் பக்கம் தவறு இல்லை யென்றும், மற்றவர்களே பேசி அதனால் வந்த சண்டையே' என்றும் சொல்லிச் சரிசெய்து விடுகிறேன்—என்று ஒருவனை உள்ளுக்குத் தூண்டிவிட்டுவிட்டு, வெளிக்கு ஏதும் தெரியாதவன் மாதிரி நிற்கும் மனுஷ்யன், எந்தக் காலத்தில் எவ்வளவு பொல்லாப்பைச் செய்வானோ அளவிட்டுச் சொல்வதற்கில்லை.

# நாநாவிஷயக் குறிப்புகள்

---

விதவா விவாகம் :—இது அவசியமா, அல்லவா என்ற பிரசினை ஒரு பக்கம் இருக்கட்டும். தனது பந்துஜன வர்க்கத்தாரை எதிர்த்துக்கொண்டு ஒருவர் விதவா விவாகம் செய்துகொண்டு விடலாம். அந்தச் சமயத்தில் பல நண்பர்களும் பிரமுகர்களும் அவருக்குத் தைரியம் கூறி உத்ஸாகப்படுத்திக் காரியத்தை நிறைவேற்றிவிடுவர். அப்பால் நிர்வாகம்தான் பெரிய காரியம். இவ்விவாகத்தின் பயனாய் சந்ததிகள் உண்டானால் அவர்களை மணம் புரிந்து கொள்வதுயார் என்பது பெரியகேள்வி. முன்பு உத்ஸாகப்படுத்திக் கூட இருந்து உதவிபுரிந்த நண்பர்களும் பிரமுகர்களும் இப்போது கைவிரித்துத் தூரவிலகிவிடுவர். அவர்களின் கையைக்கொண்டே அவர்களின் கண்ணைத் துடைத்து அனுப்பவர். பந்துஜன வர்க்கமோ எட்டியும் பாரார். பிறகு இவ்வகையில் துணிந்தோரின் கதி யாது? விதவா விவாகப் பிரசினைக்கு முன்னர் இந்தக் கண்ராவியான பிரசினைக்கு முதலில் ஒரு பரிகாரம் செய்துகொள்ளுவது முக்கியம். விதவா விவாகத்தை ஆதரித்து முத்து மீனாக்ஷி, காமாக்ஷி, என்று இரு நாவல்கள் தமிழ் மொழியில் வெளிவந்துள்ளன. முத்து மீனாக்ஷியில் கதாநாயகர்களின் குழந்தை இறக்க, எவரும் உதவிக்குவராதுபோக, கதாநாயகனே தூக்கிக்கொண்டு மயானபூமியை நோக்கிச் சென்றானென்றும், பிறகு தங்கள் ஊரையே விட்டு வெகுதூர நாட்டிற்குச் சென்று வாழ்ந்தனரென்றும் முடிந்துளது. காமாக்ஷியிலோ விதவாவிவாக நிமித்தம் ஹிந்து மதத்தில் விசேஷ பக்தியுள்ள கதாநாயக நாயகிகள் கிறிஸ்து மதத்தைத் தழுவி மணம்புரிந்து கொண்டனர் என்று பூர்த்திசெய்யப் பட்டுள்ளது. ஸ்வஜாதி ஜனங்கள் பந்துக்கள் ஒப்புக்கொண்டு நடத்திவைத்தனரென்று பொய்க்கதைகள்கூட இன்னும் எழுதப் படவில்லை. இந்த நிலையில் என்ன செய்வதென்று யோசிக்கக் கவலை அதிகமாகிறது. இதற்கு மார்க்கம் எப்படி? ஆலோசனை என்ன?

---

தன் மதிப்பு :—முதலில் நமது ஜனங்களை நாம் மதித்து நடத்தவேண்டும் என்ற குணம் அத்யாவசியம். நம்மவரைப் பிறனொருவன் அவமதித்தால் அவ்வக்கிரமியை வார்த்தைகளால் கண்டிக்காமல் ஜாடையாகச் சென்று விடுவதும், அல்லது கோர்ட்டுக்குப் போவதும் பத்திரிகைகளில் எழுதவும் முயல்வதும் தங்கள் பெருமைக்குக் கேடன்றோ? நம்மிடம் ஓர் மதிப்பை மற்றவர்கள் கொள்ளும்படி நாம் கௌரவமாய் நடந்து கொள்ள வேண்டும். நமது பெருமை நாம் பிறரிடம் நடந்து கொள்ளும் கம்பீரமான நடத்தையால் ஏற்படவேண்டும். இந்த குணம் நம்மிடம் ஸ்திரப்படாதவரை நாம் மதிப்படையோம். நியாயமான விஷயங்களில் ஓர் எல்லைக்குட்பட்டு நின்று கண்டனம் செய்வதும் எதிர்ப்பதும் தவறாகாது. பஞ்சால நாட்டுச் சிப்பாய் ஒருவன் தென்னிந்தியா ரயில்வேயில் ஒரு வண்டியில் ஏறினான். வெள்ளி கூஜாவுடன் ஒருவர் ஆரவாரமாய் தமது பெட்டிகளுடன் ஒரு பென்சு முழுவதையும் தம்முடையதாக்கிக் கொண்டு விழித்தபடியே பள்ளிக்கொண்ட திருக்கோலமா யிருந்தார். சிப்பாய் அவரை எழுப்பாது சாந்தமாய் நின்றுகொண்டே யிருந்தான். பின்

தாயும் குழந்தையுமான ஸ்திரீகள் அவ்வண்டியில் ஏறி உட்கார இடமின்றித் தவித்தனர். அவர்களுக்கு வசதிசெய்து கொடுப்பது தன் கடமையென்று எண்ணினான். உடனே நித்திரித்தவாறு இருந்தவரை எழுப்ப முயல, அவர் வேண்டுமென்றே தூங்குவதுபோல் நடிக்க, என்ன உரத்துக் கூவியும் பயனில்லாததால், அவரை யப்படியே தூக்கி மற்றோர் மூலேயில் கீழே கிடத்திவிட்டுப் பெண்களை அவ்விடத்தில் உட்காரும்படி செய்தான். நித்திரைப் பிரபு கடுஞ்சினங் கொண்டாராயினும் எதிர்க்க சக்தியற்று, ஓ! அல்ப சிப்பாய், பத்து ரூபாய் மனிதன் என்று தூஷிக்கவே, உடனே சிப்பாய் என்னை எதிர்க்கலாம், என் தொழிலை எப்படிக் கேவலப்படுத்தலாம், வா குஸ்திக்கு என்று அவரைச் சண்டைக்கு இழுத்தான். பிரபுவுக்கு ஹல்வா, பால்கோவாதான் புசிக்கத் தெரியுமேயன்றி குஸ்தி எதும் தெரியாது; அதற்குத் தேக வலிமையுமில்லை. நம்மவரின் ஸம்பிரதாயம்போல் பிரபு போலீஸாரை யழைக்கவே, போலீஸ் இன்ஸ்பெக்டரே எதிரில் தோன்றினார். அவரிடம் சிப்பாய் என்னை எதிர்க்கலாம், என் சிப்பாய் அலுவலை எப்படி கேவலப்படுத்தலாம் என்று சர்ஜித்தான். தொழிலைக் கேவலப்படுத்துவது தகாததலின் இன்ஸ்பெக்டர் பதில்சொல்ல வகையற்று நித்திராதாரியான பிரபுவுக்கு ஸமரசப்பட்டுப் போகும்படி புத்தி சொல்ல, தக்ஷணமே வண்டியும் அந்த ஸ்டேஷனை விட்டு அகன்றது. நித்திராதாரி மௌனமாய் ஒரு மூலையில் உறுமியபடியிருந்தார். சிப்பாய் தனது புஜங்களைப் பார்த்தபடி கம்பீரமாய்ப் பிரகாசித்தான். இத்தகைய தன் மானம், தன் மதிப்பு என்ற பெரிய குணங்கள் நமக்கு உண்டாகவேண்டும்.

---

நல்ல சகவாசம்:—ஒருவனுக்குள்ள வாடிக்கைகளும் கொள்கைகளும் ஏற்பாடுகளும் அநேகமாய் அவன் செய்கிற சகவாசத்தினால் உண்டாகின்றனவே யல்லாமல், பிறக்கும் போதே கூடத் தோன்றினவையல்ல. சுபாவம் அல்லது இயற்கை என்று ஒன்றிருந்த போதிலும், ஒருவனுடைய நடவடிக்கைகள் காரியா காரியங்கள் அனைவற்றிற்கும் அது காரணமாக மாட்டாது. அப்பியாசத்தினாலும் சகவாசத்தினாலுமே அவைகளுள் அநேகம் உண்டாகின்றன. எவ்விதமானவர்களுடன் ஒருவன் நாடோறும் பேசிக்கூடி வாழ்கிறானோ, அவர்களுடைய நடவடிக்கைகள் தான் அவனுக்கும் படியும். அவன் வேணுமென்று அங்கீகரித்து முயற்சிசெய்து அவைகளைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்பதில்லை. அவைகள் அவனிச்சை யன்றியில் தாமாகவே படிந்து போம். அப்படிப்படிந்து போய் நிலைபெற்ற பிறகு, அவைகளை ஒழித்துவிடக் கருதினாலும் ஒழித்து விடுவது யாருக்கும் எளிதான காரியமல்ல. நல்லொழுக்கங்கள் படிந்தால்தான் போகிறது; கெட்டவைகள் படிந்தால் என்ன செய்கிறது? இக்கெட்ட ஒழுக்கங்களிடத்தில் அவ்வளவு அஞ்சிக்கை ஏனெனில், பிறகு அவைகளை நீக்கத்தக்க பரிகாரமில்லாததினாலே தான். ஆகவே, கெட்ட நடத்தைகள் முதலிலேயே நெருங்க வொட்டாமல் ஜாக்கிரதையாயிருப்பது எவ்வளவு ஆவசிகம்? ஸத் ஸகவாசத்தினால் ஸன்மார்க்கமும், அற்ப ஸகவாசத்தினால் தீ நடத்தையும் படியுமாதலால், பின்னதை ஒழித்து முன்னதைக் கைக்கொள்ளவேண்டும். சேரிட மறிந்து சேர் என்றார் ஔவையார்.

---